கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4278 Fax: 0181-903 0827
Mobile: 0958 246580

France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 4 | 05 - 11 பெப்ரவரி 1998 | முழக்கம்: 160

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126

# கிளிநொச்சி புலிகளிடம் வீழ்ந்தது

## முகாங்களும் - மினி முகாம்களும் நிர்மூலம்



(02.02.98 - வவுனியா)

பல முகாம்களையும், மினி முகாம்களையும் காவலரண்களையும் கொண்டு அமைக்கப்பட்டிருந்த கிளிநொச்சி இராணுவ படைத்தளம் விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையணிகளினால் 48 மணிநேர முற்றுகையின்பின் தாக்கி அழிக்கப்பட்டது.

ஞாயிறு அதிகாலை 1.30 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தின் பல முன்னரங்க நிலைகளைத் தகர்த்தவாறு உள்நுழைந்த விடுதலைப் புலிகளின் அதிரடிப் படைப்பிரிவுகள் இவ் இராணுவ வலையத்தினுள் அமைக்கப்பட்டிருந்த முகாம்கள் மீதும், மினி முகாம்கள் மீதும் தாக்குதல்களைத் தொடுத்தனர். இதே வேளை, புலிகளின் கனரக ஆயுதப் படைப்பிரிவு பீரங்கிகள் மூலம் இராணுவ இலக்குகளை

(☞ 2ம் பக்கம்)

## இயக்கச்சி ஆட்டிலெறி தளம் அழிப்பு

இயக்கச்சி பகுதியில் அமைந்திருக்கும் சிறீலங்கா இராணுவத்தின் ஆட்டிலெறி தளம் விடுதலைப்புலிகள் அதிரடிப் பிரிவு கொமாண்டோக்களால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது.

ஆட்டிலெறி தளத்தின் பாதுகாப்பு வேலிகளை அழித்துவிட்டு தள மையப் பகுதிக்குள் புகுந்த புலிகள் அங்கிருந்த ஆட்டிலெறி சுடுகலன்களை அழித்தனர் என வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் வன்னியிலிருந்து கிடைத்த பிறிதொரு செய்தியின்படி இந்த தளத்திலிருந்து ஆட்டிலெறி சுடுகலன்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுக்கொண்டு செல்லப்பட்

(☞ 2ம் பக்கம்)

## கொழும்பில் கடுமையான பாதுகாப்பு
### உயர்ந்த கட்டடங்களில் கொமாண்டோக்கள்

கொழும்பு ஜயவர்த்தனபுர கோட்டேப் பகுதியில் நடைபெற உள்ள சிறீலங்காவின் 50-வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு கொழும்பு நகரத்தில் மிக கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறீலங்கா முப்படையினரும், பொலிசாரும் மேற்கொண்டுள்ளனர்.

புதிய பாதுகாப்புத் திட்டத்தின்படி கொழும்பு நகரம் ஆறு வலையங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த வலையங்கள் இரண்டு, விமானப்படை, கடற்படையினரின் சிறப்புப் படையணிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஏனைய நான்கு வலையங்களும் இராணுவ, பொலிஸ் கொமாண்டோ படையினரி

(☞ 2ம் பக்கம்)

## 150 போராளிகள் வீரச்சாவு

கிளிநொச்சி படைத் தளம் மீதான தாக்குதல்களில் 150 விடுதலைப் புலிகள் வீரச்சாவை அடைந்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. 48 மணிநேர தாக்குதலிலேயே இவ் இழப்புக்கள் ஏற்பட்டதாக அறிவித்துள்ள புலிகளின் குரல் இறந்த போராளிகள் சிலரின் விபரத்தை வெளியிட்டுள்ளது. இதில் நான்கு பெண் போராளிகளும் அடங்குவர்.

# குருநகரில் 25 காவலரண்கள் தகர்ப்பு! படையினரின் 5 படகுகள் அழிப்பு!!

யாழ். குடாநாட்டில் குருநகர்ப் பகுதியில் கடந்த தை 29-ம் திகதி விடுதலைப் புலிகள் ஏக காலத்தில் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல்களில் 25 பாதுகாப்பு அரண்களும், இரண்டு இராணுவ சோதனைச் சாவடிகளும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. படையினரின் 5 சிறிய படகுகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளன, சுமார் 20 நிமிடங்களாக நடைபெற்ற இம் மோதலைத் தொடர்ந்து இராணுவத்தினரும், பொலிசாரும் கரையோரப் பகுதியினைவிட்டு பின்வாங்கிச் சென்றனர். அதன் பின்னர் இப் பகுதிகளில் சுமார் இரண்டு மணிநேரம் பூரணமாக நிலைகொண்டிருந்த புலிகள் காவலரண்களையும், சோதனைச் சாவடிகளையும் அழித்தனர். இத் தாக்குதலில் இராணுவத்தரப்பிற்கு உயிரிழப்புகள் ஏற்பட்டபோதிலும் சிறீலங்கா

(☞ 2ம் பக்கம்)

## உலகத் தமிழ் மக்களுக்கு தலைவர் பிரபாகரனின் செய்தி
### பெப்ரவரி 4 இல் வெளியிடப்படும்

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விடுத்துள்ள விசேட செய்தி ஒன்று, விடுதலைப் புலிகளின் சர்வதேச அமைப்புக்களால் பெப்ரவரி 4-ம் திகதி வெளியிடப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய சூழ்நிலை மற்றும் விடுதலைப் போராட்டத்திற்கான சர்வதேச தேவைகள் என்பனவற்றை, புலம்

(☞ 2ம் பக்கம்)

## ராஜீவ் கொலை வழக்கின் தீர்ப்பு நேர்மையானது அல்ல
### - சர்வதேச மன்னிப்புச்சபை -

ராஜீவ் கொலை வழக்கு தீர்ப்பில் 26 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டமையை சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்திருப்பதுடன், இந்த வழக்கு விசாரணைகள் நேர்மையான முறையில் நடாத்தப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச விசாரணை நியதி முறைகளுக்கு ஒவ்வாத முறையில் நடாத்தப்பட்ட இந்த வழக்கு விசாரணைகள் மூலம்

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.00 P.M.
Sunday 12.00 Noon - 6.00 P.M.

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

*நிர்வாகி:*
ப. வேலுப்பிள்ளை
*நிறுவக ஆசிரியர்:*
அமரர் க. கஜேந்திரன்
*ஆசிரியர்:*
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E:Mail-eelamurasu@aol.com

*விளம்பர விநியோக தொடர்புகட்கு:*
*பாரிஸ்:*
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
*ஜேர்மனி:*
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83
*டென்மார்க்:*
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546
*சுவிஸ்: மக்கள் கடை*
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerei; Frankreich.
Tel: 01-271 7374
*லண்டன்:*
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718
*இத்தாலி:*
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
*நோர்வே:*
JAFFNA FOOD -
Tel: 22425527
*நெதர்லாந்து:*
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*
## இயக்கச்சி...

டதாக குறிப்பிடுகின்ற போதி லும், இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை அதனை உறு திப்படுத்த முடியவில்லை.

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*
## கிளிநொச்சி...

தாக்கி அழித்தது.

இத் தாக்குதல்கள் தொடர்பாக இச்செய்தி அச்சுக்கு செல்லும் வரை விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ செய்திக் குறிப்பு வெளியிடப்படவில்லை. ஆயினும், இன்றைய விடுதலைப் புலிகளின் குரல் இரவு நேர செய்தி அறிக்கை, வெற்றிகரமான தாக்குதலை உறுதிப் படுத்தியதுடன், தாக்குதல் தொடர்பான சில விபரங்களையும் வெளியிட்டுள்ளது. அதே வேளை, சிறீலங்கா அரசு இச் செய்திகளை முற்றாக மறைத்து வருவதுடன் நேற்று அதிகாலை முதல் மக்களை திசைதிருப்பும் செய்திகளை வெளியிட்டு வருகின்றது.

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*
## உலகத் தமிழ்...

பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு எடுத்தியம்பியுள்ள இச் செய்தியானது, புலம் பெயர்ந்து வாழும் மக்களின் கடமை பற்றியும், செயற்பாடு பற்றியும் வலியுறுத்தியுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*
## ராஜீவ் கொலை...

வழங்கப்பட்ட இத் தீர்ப்பானது நேர்மையானது அல்ல. அடையாளப்படுத்தப்படாத சாட்சிகள், நேரடியாக முன்னிலைப் படுத்தப்படாத சாட்சிகள் ஆகிய நடைமுறைகளுடாகவே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. 1991-ம் ஆண்டு யூலை மாதம் கைதுசெய்யப்பட்ட இவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு 1992-ஆம் ஆண்டு மே மாதம் வரையில் குற்றப்பத்திரங்கள் தாக்குதல் செய்யப்பட்டதுடன் 94-ம் ஆண்டே இவர்கள் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன என்ற காரணங்களையும் சுட்டிக்காட்டியுள்ள மன்னிப்புச்சபை, இந்த மரணதண்டனை தீர்மானமானது மனித வாழ்வு உரிமையினை மீறுகின்றது, மனிதத்தன்மையற்றது, அநீதியான தண்டனை எனவும் விபரித்துள்ளது.

நீக்கப்பட்ட 'தடா' சட்டத்தின் கீழ் இவ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டமையையும் சுட்டிக் காட்டியுள்ள மன்னிப்புச் சபை, இவ் வழக்கில் மரண தண்டனை தீர்ப்புப் பெற்ற செல்வி ஆதிரை என்பவர் கைது செய்யப்படும்போது 17 வயதுடையவராக இருந்தமையையும் அவருக்கு இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டமை சர்வதேச சட்டவிதிகளுக்கு முரணானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்படி தீர்ப்புக் குறித்து மன்னிப்புச்சபை இந்திய ஜனாதிபதி, இந்திய உள்ளகத்துறை அமைச்சர் மற்றும் ஏனைய ராஜதந்திர பொறுப்பாளர்களுக்கும் முறையீடு செய்துள்ளது.

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*
## கொழும்பில்...

டம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நகரத்தில் காணப்படும் உயர்ந்த கட்டடங்கள் அனைத்திலும் குறிபார்த்துச் சுடும் துப்பாக்கிகள் சகிதம் கொமாண்டோக்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். வீதித் தடைகள் பல ஏற்படுத்தப்பட்டு அவற்றிலே மோப்பம் பிடிக்கும் நாய்கள் சகிதம் கொமாண்டோக்கள் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளால் தமிழ் மக்கள் தமது நடமாட்டங்களை முடக்கி வீட்டிற்குள் அடைந்து கிடப்பதாக எமது கொழும்பு நிருபர் அறிவித்துள்ளார். இதேவேளை விழாவிற்கு வருகை தரும் பிரமுகர்களுக்காக கொழும்பு விமான நிலையத்தில் விமானப் படையின் சிறப்புப் படையணியினர் கடுமையான பாதுகாப்பு முன்னெடுப்புக்களைச் செய்துள்ளனர். தமிழ்ப் பயணிகள் பலர் தடுத்து வைக்கப்பட்டு இவர்களால் விசாரணை செய்யப்பட்டும் வருகின்றனர்.

கொழும்பு நகரத்தின் முழு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் இராணுவ பிரதி தளபதி ஜலிய நமுனி பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*
## குருநகரில்...


அரசு அதனை யாழ். தேர்தலை முன்னிட்டு முற்றாக இருட்டடிப்புச் செய்துவிட்டது. ஆனாலும் இத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொலிசார் ஒருவரது சடலம் கடந்த 31-ம் திகதி மண்டைதீவுப் பகுதிக் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் அழிக்கப்பட்ட இராணுவ நிலைகளில், சவக்காலைச்சந்தி, மரத்தடிச் சந்தி ஆகிய இடங்களில் அமைந்திருந்த சோதனைச் சாவடிகளும் அடங்குகின்றன. புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்ட இராணுவ படகு ஒன்றில் இருந்து 25 குதிரைவலு சக்திகொண்ட இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த வீரம் செறிந்த தாக்குதலில் புலிகளின் தரப்பில் கப்டன் திரனாளன் (மோகன் - செல்லத்துரை, அளவெட்டி கிழக்கு) வீரமரணம் அடைந்துள்ளார்.

புலிகளின் இந்த அதிரடித் தாக்குதலால் நிலைகுலைந்த படையினர் குருநகர்ப் பகுதியை நோக்கி கடுமையான எறிகணை வீச்சினை நடாத்தினர். இந்த எறிகணைகள் மக்கள் குடியிருப்புகளில் வீழ்ந்து வெடித்ததில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

# மரண அறிவித்தல்



பிறப்பு: - 05 1927

இறப்பு: 20 01 1998

## சின்னத்தம்பி சோமசேகரம்
*(அரியாலை)*

காலம் சென்ற சின்னத்தம்பி - பொன்னம்மா (வவுனியா) தம்பதிகளின் மகன் சின்னத்தம்பி சோமசேகரம் (சின்னத்துரை) கடந்த 20.01.1998 அன்று வன்னியில் காலமாகிவிட்டார்.

இவர் திருமதி சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலம் சென்ற காரணியசிவம், காலம் சென்ற பஞ்சுலிங்கம், திரு. சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவக்கொழுந்து, குசுமாவதி, பத்மாவதி, ஆகியோரின் மைத்துனரும், சிவலோகநாதன், ஜீவா, சேகரன், சிவநாதன், மகேஸ்வரன், குகதாசன், காலம் சென்ற யோகேந்திரன், வாமதேவன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

*தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.*
*Tel: 49 47 73 89 21 90*

Pub

# மரண அறிவித்தலும் 31ம் நாள் நினைவஞ்சலியும்



தோற்றம்: 28 02 1930

மறைவு: 06 01 1998

## அமரர் செல்லையா இரத்தினம்
*(அரியாலை)*

அரியாலை சின்னக்கிணத்தடி ஒழுங்கையைச் சேர்ந்த செல்லையா இரத்தினம் அரியாலையில் காலமானார். இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், சோதி நாகேஸ்வரி (யாழ்ப்பாணம்) பூபதி, சறோஜினி, சாந்தினி (பிரான்ஸ்), பத்மாவதி (ஜேர்மனி), கலாதேவி விஜயன், சயந்தன் (நோர்வே) ஆகியோரின் தந்தையும்; நேசரத்தினம் (யாழ்ப்பாணம்) சண்முகலிங்கம், உருத்திரலிங்கம், பாலச்சந்திரன் (பிரான்ஸ்), சுதாகர் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், ரம்மியா, ரூபன், சிந்துஜா, நிதன் தனுஷன், தர்சனா, பிரதீப், அபிர்தா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமச் சடங்குகள் 07.01.98 இல் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

அன்னாரின் 31-ம் நாள் நினைவஞ்சலி 05.02.98 இல் பிரான்சில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெறவிருக்கின்றது. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

*தகவல்: பூபதி, சறோஜினி, சாந்தினி*
*17 Rue Abel Gance, Paris 13. - Tel: 0153611158*

Pub

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,600 Frs. |
| Singapour | - | 3,400 Frs. |
| Madras | - | 3,450 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 1,990 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# ராஜீவ்காந்தி கொலை வழக்கு 26 பேருக்கு மரண தண்டனை

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 41 பேரில் 26 பேருக்கு சென்னை 'தடா' நீதிமன்றம் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்குத் தொடர்பாக 26 பேர் சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வு படையினரால் கைது செய்யப்பட்டு பூந்தமல்லி தனிச் சிறையில் தடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். 20.05.92 இல் இவர்கள் மீதான குற்றப் பத்திரிகையை சி.பி.ஐ தாக்கல் செய்தது. 05.05.93 இந்த வழக்கின் விசாரணை ஆரம்பமாகியது. இந்த வழக்கில் 1110 சாட்சிகள் சேர்க்கப்பட்டபோதிலும் 258 பேர் மட்டுமே விசாரிக்கப்பட்டனர். இந்த 258 பேரின் சாட்சியங்கள் 1110 பக்கங்களில் பதிவு செய்யப்பட்டது.

கடந்த மாதம் 28-ம் திகதி 2050 பக்கங்களில் வெளியிடப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி நவநீதம் 'இந்த வழக்கில் கைதாகி சிறையில் உள்ள நளினி உட்பட 26 பேர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் அனைவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கின்றேன். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேரும் குற்றம் புரிந்துள்ளனர் என்று சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் இப்படிப்பட்டவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கினால்தான் எந்த தீவிரவாத அமைப்புக்களும் இனிமேல் கொடூரமான இந்தச் செயலை மீண்டும் செய்யாமல் இருக்க செய்யமுடியும். ஆகவே எல்லோருக்கும் கடுமையான தண்டனையான தூக்குத் தண்டனை விதிக்கின்றேன்' என்று கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, இந்தக் கொலை வழக்கின் தீர்ப்புப் பற்றி இந்திய மற்றும் சர்வதேச சட்ட நிபுணர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். விசாரணைகள் ஒழுங்கான முறையில் நடைபெறவில்லையென்றும் பலரும் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழகம் நுழைவதற்கான வெட்டுப்புள்ளியினால் யாழ். மாணவர்கள் அதிர்ச்சி

யாழ். க.பொ.த. உயர்தர மாணவர்களின் பல்கலைக் கழகம் நுழைவதற்கான வெட்டுப் புள்ளிகள் கடந்த 15.01.98 அன்று பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது. இது யாழ். குடா மாணவர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாண மாணவர்கள் மருத்துவபீடம் நுழைவதற்கான வெட்டுப்புள்ளி 275 என அறிவித்தது அரசின், இன்னொரு மனிதாபிமானமற்ற செயல் என மாணவர் சமுதாயம் கண்டனம் தெரிவித்துள்ளது. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால் பல மாதங்கள் கல்வியைத் தொடர முடியாமல் பாதிக்கப்பட்டிருந்தவர்கள்தான் இப் பரீட்டையில் தோற்றி வெற்றி பெற்றுள்ளனர். கொழும்பின் வெட்டுப்புள்ளியுடன் ஒப்பிடும் போது இது குறைவல்ல என தெரிவிக்கும் மாணவர்கள், யாழ்ப்பாணத்தில் இருந்து இது வரை 45-இற்கும் குறைந்த மாணவர்கள் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியதில்லை. இம்முறை மட்டுமே 27 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர் என விசனத்துடன் தெரிவித்துள்ளனர்.

## மலேரியாவால் 3 வயது குழந்தை மரணம்

யாழ்ப்பாணத்தில் பெருகி வரும் மலேரியாவினால் பல பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த வெள்ளியன்று சரண்யா ரவி என்ற 3 வயதுக் குழந்தை இந் நோயினால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்துள்ளார்.

'அரசின் மருந்து தடைகளால் மலேரியா எதிர்ப்பினை கட்டுப்படுத்த முடியவில்லை, கையிருப்பிலுள்ள மருந்தினை விட நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. எனவே பாதிக்கப்பட்டவர்களில் மிகவும் கடுமையானவர்களுக்கு எம்மால் மருந்தினை வழங்க முடிகிறது.' என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நெடுந்தீவுப் பகுதியில் ஏராளமான பொது மக்கள் தினமும் இந் நோயினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மருத்துவ வசதிக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கே வரவேண்டியுள்ளதால் போக்குவரத்துக்கள், இராணுவ அனுமதிகள் என்பன கிடைக்காமல் மக்கள் வேதனையடைந்து வருகின்றனர்.

## யாழ்.குடாவில் புதிதாக இருவாரப் பத்திரிகைகள்!

யாழ். குடாநாட்டினுள் புதிதாக இருவாரப் பத்திரிகைகள் வெளிவரப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சூரியகாந்தி, கலைக்கதிர் என இப் பத்திரிகைகளுக்கு பெயரிடப்பட்டுள்ளன.

வன்னியில் ஈழநாடு பத்திரிகையின் உதவியுடன் வெளிவரும் சூரியகாந்தி இவ்வாரம் 2-ம் திகதி வெளியிட்டு வைக்கப்படஉள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைக்கதிர் பத்திரிகை ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் பின்னணி ஆதரவுடன் இயங்கவுள்ளதாகவும் இதற்கென பெருந்தொகைப் பணத்தினையும் அவர்கள் ஒதுக்கியுள்ளதாகவும் தெரிய வருகிறது. வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு தெரிவாகியுள்ள ஈபி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் ஒருவர் இதன் தற்காலிக ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஆனைக்கோட்டையில் படையினர்மீது குண்டு வீச்சு

ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தடிப் பகுதியில் ரோந்து சென்ற சிறீலங்காப்படையணி மீது விடுதலைப் புலிகள் கைக்குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

இத் தாக்குதலின்போது சில படையினர் காயமடைந்துள்ளனர். கடந்த 30-ம் திகதி காலை 11.30 மணியளவில் இத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. தாக்குதல் நடைபெற்றவுடன் தமது இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்ற படைத்தரப்பினர் சிறிது நேரத்தில் மீண்டும் அப் பகுதிக்கு வந்து அங்கிருந்த வீடொன்றினை குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர்.

இதேவேளை சிறீலங்காப் படையினர் நான்கு இளைஞர்களின் சடலங்களை யாழ். போதனா வைத்திசாலையில் ஒப்படைத்துள்ளனர். கொக்குவில் பகுதியில் இருந்தே இச் சடலங்கள் படையினரால் கொண்டுவரப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஏறாவூரில் மர்மமாக கொல்லப்படும் மீனவர்கள்

ஏறாவூர் உன்னிச்சை குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் மூன்று நாட்களின் பின் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாணிக்கம் நல்லதம்பி(50) இப் பொதுமகன் கடந்தவாரம் இரணைமடு வாய்க்கால் பகுதியில் துப்பாக்கிச்சூடு மற்றும் வெட்டுக் காயங்களுடன் பட்டைகொன்றில் கிடந்தபோது கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்பவர்கள் மர்மமான முறையில் தொடர்ந்து காணாமல்போயும் கொல்லப்பட்டும் வருகின்றனர். இதனை இப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறீலங்கா படையினரே புரிவதாகவும் தெரிவிக்கும் மக்கள், இக் கொலைகளை தடுத்து நிறுத்த உதவும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் புகார் செய்து வருகின்றனர்.

## தம்பலகாமத்தில் பொலிஸ் வெறியாட்டம்! 15 தமிழர்கள் சுட்டுக்கொலை

திருமலை மாவட்டத்தில் அமைந்திருக்கும் தம்பலகாமப் பகுதியில் 15 தமிழ் பொதுமக்கள் சிறீலங்கா பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்ட கொடூரச் சம்பவம் கடந்த 1-ம் திகதி நடைபெற்றுள்ளது.

தம்பலகாமம் பொக்குறுணி பகுதியில் அமைந்திருந்த பொலிஸ் காவல் நிலையொன்றிலிருந்து பொலிசாரே இந்த வெறியாட்டத்தினை புரிந்துள்ளனர்.

காலை 6.00 மணியளவில் இப் பகுதியால் சென்ற பொது மக்கள் காவல் நிலைக்கு இழுத்துச் சென்ற பொலிசார் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அப்போது எழுவர் அதே இடத்தில் பலியானார்கள். ஒருவர் மட்டும் தப்பிச் சென்று இக் கொடூரம் பற்றி செய்தியை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் புலிகள் என பொலிஸ் தரப்பு தெரிவித்ததை மறுத்த இப்பகுதி மக்கள் சுட்ட பொலிசாரையும் தமக்குத் தெரியும் என தெரிவித்துள்ளனர்.

**பாடசாலை மாணவர்களுக்கான Maths, Physique, Biologie, Chimie, Anglais Français, Informatique வகுப்புக்கள்,**

6e, 5e, 4e, 3e... Terminal வரை

Cp இலிருந்து Cm2 வரை வீட்டுப்பாடங்கள் செய்ய, புத்தகங்கள் வாசிக்க நாம் உதவுகிறோம்.

சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறுமிடம்
41, Rue Didot, 75014 Paris. M°: Pernety (Dir N°:13)
Tel: 01 42 57 23 56

திங்கள், செவ்வாய், புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்:
4, Rue Esclagnon, 75018 Paris. Église Sainte Hellene
M°: Porte De Clignancourt - Tel: 0142572356

**புதிய பிரெஞ்சு வகுப்பு**
18.01.98 ஞாயிறு பி.ப. 1.30 மணி
01.02.98 ஞாயிறு காலை. 10 மணி
02.02.98 திங்கள் பி.ப 2.30 மணி

**புதிய ஆங்கில வகுப்பு**
ஞாயிறு காலை 10 மணி - பேச்சுப் பயிற்சி வகுப்பு
31.01.98 சனி பி.ப. 3.30 மணி.

**புதிய கம்பியூட்டர் வகுப்பு**
02.02.98 திங்கள் மாலை 3.30 மணி
07.02.98 சனி காலை 10 மணி
08.02.98 ஞாயிறு மாலை 4.00 மணி

**கராத்தே வகுப்புகள்** - ஞாயிறு பி.ப 3 மணி
தையல், கேக் அலங்கார வகுப்பு சனி பிற்பகல் 3.30 மணி
சிறுவர்களுக்கான தமிழ், ஆங்கிலம், கணித வகுப்புகள் பிரதி சனி தோறும் பி.ப 1.30 மணிக்கு.
நடனம், வயலின், சங்கீத, ஓர்கன் வகுப்புகள் சனி பி.ப 1.30 மணிக்கு

# எமது தாயகத்திலிருந்து சிங்கள இராணுவம் வெளியேறவேண்டும்

## தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேசப் பேச்சாளர் திரு. அன்ரன் ராஜா கொழும்புப் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி

**நாங்கள் சிங்கள மக்களுக்கெதிராகப் போராடவில்லை. நாங்கள் சிங்கள மக்களின் நண்பர்கள். ஆனால் எமது பூமியை ஆக்கிரமித்துள்ள சிங்கள இராணுவத்திற்கு எதிராகவே நாம் போராடுகின்றோம்.**

**கேள்வி:** இலண்டனிலும் பாரிசிலும் இரகசியமாக உங்களது இயக்கத்துடன் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாக சொல்லப்படுகின்றது. இதில் உண்மை உண்டா?

**பதில்:** சிறீலங்கா அரசு எந்தவித தொடர்பையும் எம்முடன் இலண்டனில் கொண்டிருக்கவில்லை. விடுதலைப் புலிகளுடன் அவர்கள் எத் தொடர்புகளையும் கொண்டிருக்கவேயில்லை.

**கேள்வி: தற்போதைய முரண்பாட்டிற்கு ஒரு தீர்வுகாணும் முகமாக எதுவிதமான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடும் எண்ணம் விடுதலைப் புலிகளுக்கு உண்டா?**

**பதில்:** தமிழர் தேசிய முரண்பாட்டுக்கு பேச்சுவார்த்தை மூலமாக எந்தத் தீர்வையும் நாம் எதிர்க்கவில்லை. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஆனால் ஓர் பேச்சுவார்த்தைக்கு முன்னர் அதற்கேற்ற 'சரியான சூழ்நிலை' நிலவவேண்டும்.

**கேள்வி: 'சரியான சூழ்நிலை' என்று நீங்கள் எதைக் கருதுகின்றீர்கள்?**

**பதில்:** நான் ஒரு சாத்தியமான சூழ்நிலையைப் பற்றியே பேசுகின்றேன். பேச்சுவார்த்தைக்கான நிபந்தனை பற்றி நான் பேசவில்லை. இதை ஒரு நிபந்தனையாக நாங்கள் பார்க்கவுமில்லை. எமது வடக்கு, கிழக்கு பகுதிகளை ஆக்கிரமிக்கும் சிங்கள இராணுவம் வெளியேறினாலேயே சாத்தியமான சூழ்நிலை உருவாகும். இது நடக்க வேண்டும். ஒரு பேச்சுவார்த்தை இடம்பெறகூடிய சூழ்நிலையாக இதைக் கருதுகிறோம். விடுதலைப் புலிகள் ஒரு திட்டத்தின் அடிப்படையில் பேசுவதற்குத் தயாராக உள்ளனர். அது எமது திம்புக் கோட்பாடுகளாகும். அத்தகைய அடித்தளத்தில் நின்றே நாங்கள் பேசத் தயாராக உள்ளோம். அதாவது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், அவர்களுக்கொரு தாயகமுண்டு, அவர்களுக்கு பிரிந்து போவதற்கான தேசிய சுய நிர்ணய உரிமை உண்டு என்பனவே அவையாகும்.

**கேள்வி: விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போடவேண்டும் என்பதை ஒரு பேச்சுவார்த்தைக்கான நிபந்தனையாக அரசு முன் வைக்கின்றது. இப்போது இந் நிபந்தனையின் அடிப்படையில் எவ்வாறு பேச்சுவார்த்தை மேசையில் அரசுடன் உட்காரலாமெனக் கருதுகின்றீர்கள்?**

**பதில்:** சாத்தியமேயில்லை. நாங்கள் எதுவிதமான நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இது மிகத் தெளிவானது.

**கேள்வி:** ஏன் அப்படி?

**பதில்:** பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறுமாயின் நாங்கள் சுதந்திரமாகப் பேசவேண்டும். மாறாக ஆக்கிரமிப்பு இராணுவத்தின் உத்தரவின் கீழல்ல.

**கேள்வி: எத்தகைய நடைமுறைகளை மேற்கொண்டு சிறீலங்கா அரசிடம் நீங்கள் மீண்டுமொருமுறை பரஸ்பர உடன்பாட்டை மீறமாட்டீர்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவீர்கள்?**

**பதில்:** நாங்கள் எதற்காக சிறீலங்காவை நம்பவைக்கவேண்டும். சிங்கள அரசு எமக்கு ஒரு அன்னிய அரசு. சிறீலங்காவில் இரு தேசங்கள் உண்டு. வடக்கு கிழக்கு தமிழர்களுக்கும், மிகுதி சிங்களவர்களுக்குமானது. அன்னிய சக்திகள் எம்மை ஆளுகின்றது என்பதுதான் எமது நிலைப்பாடு. இச் சூழ்நிலையில் அனைத்து ஆக்கிரமிப்புப் படைகளும் வெளியேறி திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற வேண்டும். 94/95 பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தமைக்கு சந்திரிகா அரசின் குழப்பகரமான நிலைப்பாடே காரணமாகும். இந்த அரசு - நான் குறிப்பாக சந்திரிகாவைக் கூறுகின்றேன் - தமிழர்களை ஆண்ட மோசமான சிங்கள ஆட்சியாளர்கள் எங்களுக்கு இவர்களிடம் நம்பிக்கை கிடையாது. இவர் தமிழர்களையும், தமிழர் தாயகத்தையும் அழிப்பதற்காகப் புறப்பட்டவர்.

**கேள்வி: சந்திரிகாவின் நிர்வாகம் பேச்சுவார்த்தைகளில் நேர்மையற்றவர்கள் என இப்போது கூறினீர்கள். இதனை தயவு செய்து தெளிவுபடுத்துகிறீர்களா?**

**பதில்:** ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டு, குயுக்தி நோக்கத்தின் அடிப்படையில் தெரிந்துகொண்டே சத்தியங்களை வழங்கி விடுதலைப் புலிகளை ஆபத்தான நிலைக்கு கொண்டுவர முனைந்தார். இதனைத்தான் நான் கூறுகிறேன்.

**கேள்வி: சந்திரிகா அரசாங்கம் நேர்மையற்றது என நீங்கள் கூறுவதாக இருந்தால் உங்கள் கருத்தை அரசாங்கத்திற்குக் கூறுவதற்கு எந்த வழிமுறைகளைப் பின்பற்றினீர்கள்? மேலும் திம்பு கோட்பாட்டின் அடிப்படையில் பேசுவதற்கான உங்கள் விருப்பத்தை தெளிவுபடுத்தினீர்களா?**

**பதில்:** இதனை நாம் பல முறை பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டோம். எமது தலைவர் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாளின்போது இதனை அறிவித்திருந்தார். ஆகவே செய்தி அங்கேயுள்ளது. விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை அரசாங்கம் தெளிவாக அறியும்.

**கேள்வி: நீங்கள் எப்போதாவது இது தொடர்பாக அரசுடனோ, ஜனாதிபதியுடனோ நேரடி அணுகுமுறைகளை மேற்கொண்டீர்களா? இதனை இப்போதாவது செய்வதற்கு நோக்கமுண்டா?**

**பதில்:** ஜனாதிபதியுடனோ, அல்லது அரசுடனோ எதுவித நேரடி அணுகுமுறைகளையும் நாங்கள் கொண்டிருக்கவில்லை. எமது அமைப்பிற்கு இவ்வாறான நோக்கம் எதிர்காலத்தில் உண்டோ என்று எனக்கு உண்மையில் தெரியாது.

**ஆம்! நாங்கள் குடாநாட்டை இழந்துவிட்டோம். ஆனால் ஆக்கிரமிப்பு இராணுவத்தை விரைவில் அங்கிருந்து வெளியேற்றுவதை உறுதிப்படுத்துவோம். விடுதலைப் புலிகள் பலவீனப்படுத்தப்படவே இல்லை. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுடன் உள்ளார்கள்.**

**கேள்வி:** உங்களுக்குத் தெரியாவிடின் யாருக்குத் தெரியும்? யார் தீர்மானங்களை மேற்கொள்ளுகின்றார்கள்?

**பதில்:** எங்களுடைய தலைவர்கள் வன்னியில் இயங்கிவருகிறார்கள். அவர்கள் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுப்பார்கள். அவர்கள்தான் உண்மையில் எங்களை வழி நடத்துகின்றார்கள்.

**கேள்வி: மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் உண்மையில் உங்களுக்கும் அரசுக்கும் இடையேயுள்ள இடைவெளியை நிரப்புமா? ஒரு அமைதியான பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு உதவுமா?**

**பதில்:** எமக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமே தேவை. ஆனால் சிறீலங்கா தரப்பினர் பிரச்சனையை உள்நாட்டு பிரச்சனையாகக் கூறிக்கொண்டு அதனை எதுவித மூன்றாம் தரப்பு தலையீடுமில்லாமல் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். பல நாடுகள் சந்திரிகாவிடம் இது தொடர்பாக பேசி தமது உதவிகளை வழங்குவதற்கு தயாராக இருந்தனர். ஆனால் சந்திரிகா மறுத்துவிட்டார்.

**கேள்வி: நாங்கள் போரைப் பற்றிக் கதைக்கும் பொழுது சிறீலங்கா அரசு தனது 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கையின் காரணமாக புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள் என கூறுகின்றார்கள். யாழ்ப்பாணத்தை அரச படைகளிடம் இழந்தபின் விடுதலைப் புலிகளின் சரியான நிலைப்பாடு என்ன?**

**பதில்:** நாங்கள் தோற்கடிக்கப்படவில்லை. அரசின் இவ் உரிமைகோரலில் உண்மையில்லை. ஆம்! நாங்கள் குடாநாட்டை இழந்துவிட்டோம். ஆனால் ஆக்கிரமிப்பு இராணுவத்தை விரைவில் அங்கிருந்து வெளியேற்றுவதை உறுதிப்படுத்துவோம். விடுதலைப் புலிகள் பலவீனப்படுத்தப்படவே இல்லை. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுடன் உள்ளார்கள். அம் மக்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்றுவார்கள். இதில் எதுவித சந்தேகங்களும் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஒரு அங்கம். அம் மக்களினால் ஆதரிக்கப்படுபவர்கள்.

**கேள்வி:** விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக அமெரிக்கா அறிவித்ததை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**பதில்:** நாங்கள் இதனால் மிகுந்த கவலை அடைந்துள்ளோம். காலனித்துவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடுவதற்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அமெரிக்கா இவ்வாறு நடந்துகொண்டது கவலையைத் தருகின்றது. இதுதான் எங்கள் நிலைப்பாடு. இதற்கு எதிராக அமெரிக்க நீதி மன்றத்தில் நாம் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம்.

**கேள்வி: வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் தொடர்ச்சியான முயற்சியின் காரணமாகத்தான் அமெரிக்க அரசு இம் முடிவை எடுத்தது எனக் கூறப்படுகின்றது. வெளிவிவகார அமைச்சரின் பாத்திரம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:** சிங்கள சோவனிச அமைப்பின் ஒரு பகுதியே அவர். தமிழ் பெயரை சந்தர்ப்பவசமாக கதிர்காமர் கொண்டிருந்தாலும் அவர் சிங்கள அமைப்பின் ஒரு பகுதியாவார். சிங்கள சோவனிசத்திற்காக தொழில் புரியும் ஒரு கேடுகெட்ட மனிதன் அவர். இதன் அடிப்படையில் அவரை தமிழ் சமூகத்திற்கு எதிராக செயற்படும் சிங்கள அமைப்பின் பகுதியாக நாங்கள் பார்க்கின்றோம்.

**கேள்வி: விடுதலைப் புலிகள் தங்களது அனைத்து கோரிக்கைகளையும் அடையும்வரை போராட திடசங்கற்பம் பூண்டுள்ளீர்களா?**

**பதில்:** எங்களுடைய நிலைப்பாடு இதுதான். நாங்கள் சிங்கள மக்களுக்கெதிராகப் போராடவில்லை. நாங்கள் சிங்கள மக்களின் நண்பர்கள். ஆனால் எமது பூமியை ஆக்கிரமித்துள்ள சிங்கள இராணுவத்திற்கெதிராகவே நாம் போராடுகின்றோம். எமது தாயகத்திலிருந்து சிங்கள இராணுவம் வெளியேற்றப்படுவதை நாங்கள் உறுதிப்படுத்துவோம். அதன்பின்தான் சிறீலங்காவில் சமாதானத்திற்கான ஒரு சந்தர்ப்பம் உருவாகும்.

**கேள்வி: இலண்டனை மையமாகக்கொண்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் இலண்டனில் வசிக்கும் சிறீலங்கா தேசத்தினரிடம் போராட்டத்தை நடத்துவதற்காக பலாத்காரமாக பணம் பறிப்பதாக குற்றம் சாட்டப்படுகின்றது. இதில் உண்மையுண்டா?**

**பதில்:** நாங்கள் இங்கிலாந்தில் வசிப்பவர்களிடமோ அல்லது பிற இடங்களிலோ பணத்தை பலாத்காரமாகப் பறிப்பதில்லை. நீங்கள் என்னிடம் எவ்வாறு நாம் ஆயுதம் வாங்குவதற்காக பணத்தை சேர்க்கின்றோம் என்று கேட்டால் அதற்கு நான் கூறும் பதில் என்னவெனில் எமக்கு ஆயுதம் விநியோகஸ்தர் ஒருவர் உள்ளார். அது சிறீலங்கா அரசாங்கமாகும். அங்கு எங்களுக்கு தொடர்ச்சியான ஆயுத விநியோகத்தைச் செய்பவர் ஒருவர் உள்ளார் என கட்டாயம் கூறவிரும்புகின்றேன். நாங்கள் இராணுவத் தளங்களை முற்றுகையிடும்போது கோழைகளான இராணுவ வீரர்கள் பெரும்தொகையான ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டு ஓடிவிடுகின்றார்கள். அவை அதன்பின் எமக்குரியன. நாங்கள் முல்லைத்தீவு முகாமை முற்றுகையிட்டபோது பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பறினோம். அண்மையில் கரப்புக்குத்தி இராணுவ முகாமையும், வன்னியில் மற்றுமொரு முகாமையும் முற்றுகையிட்டபோதும் தினசரி சிறிய தாக்குதல்களை நடாத்தும்போதும் நாம் ஏராளமான ஆயுதங்களைச் சேர்க்கின்றோம். சிங்களப் படைகள் தங்களது ஆயுதங்களை பாதுகாக்க எண்ணுவதில்லை. மாறாக தப்பியோடி எமது வேலையை இலகுவாக்குகின்றார்கள்.

**கேள்வி: இந்தியா உங்களை பல வழிகளிலும், தற்போதும் ஆதரிப்பதாகக் கூறப்படுகின்றது அது உண்மையா?'**

**பதில்:** இந்தியா அண்மையில் தடைசெய்துள்ளது. அது மட்டுமே எனக்குத் தெரியும் அதற்கு அப்பாற்பட்ட விடயம் பற்றி நான் கருத்துக்கூற விரும்பவில்லை.

(ஆங்கில மூலம் கருத்து மாறாமல் தமிழ் நடைக்கு ஏற்ப மொழி பெயர்க்கப்பட்டது.)



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# மனித உரிமைகளும் இனபேதமும்...

கண்டி தலதா மாளிகை மீதான தாக்குதல் நடந்து ஒருவார காலமாகிவிட்டது. இந்தத் தாக்குதலுக்கு எவரும் இதுவரை உரிமை கோரவில்லை.

ஆனால் சிறீலங்கா அரசு தன்னுடைய வழக்கமான பாணியில் விடுதலைப் புலிகள்தான் இத்தாக்குதலுக்குப் பொறுப்பாளிகள் என்று கூறியதுடன், அவ் இயக்கத்தை தடைசெய்தும்விட்டது.

தங்களை மனித உரிமை ஆர்வலர்களாகச் சொல்லிக்கொள்ளும் உள்ளூர் அமைப்புக்களும் சர்வதேச அமைப்புக்களும் 'வழிபாட்டுத் தலம் மீது தாக்குதல் நடத்தியது கண்டிக்கத் தக்கது. இது ஒரு மோசமான செயல்' என்றெல்லாம் அறிக்கை விட்டு 'மனித உரிமை மீதுள்ள' தங்கள் ஆர்வத்தை வெளிக்காட்டிக் கொண்டார்கள்.

கண்டி தலதா மாளிகையை ஒரு வழிபாட்டுத் தலம் என்று சொல்வதை விட பெளத்த சிங்கள பேரினவாதத்தின் ஊற்றுக் கண் என்று சொல்வதே பொருத்தமான ஒன்றாகும். அன்பையும், அகிம்சையையும் உயிர்கள் மீது கருணையையும், சமாதானத்தையும் போதித்த கௌதம புத்தரின் புனிதப் பல்லை அங்கே வைத்துக் கொண்டு, இனபேதத்தையும் மத பேதத்தையும் வளர்த்து விடுபவர்களுக்கும் தூண்டிவிடுபவர்களுக்கும் ஆசி வழங்கும் ஒரு நிலையமாக அது இருந்து வந்திருக்கிறது.

சிறீலங்காவின் முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் காலத்திலிருந்து இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் காலம்வரை தமிழ் மக்கள் மீதான இன ஒதுக்கல் கொள்கைகளும் சரி, இன அழிப்பு யுத்தமும் சரி, இந்தத் தலதா மாளிகையில் 'ஆசீர்வாதம்' பெறப்பட்ட பின்பே அரங்கேற்றப்பட்டிருக்கின்றன.

சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி காலம்சென்ற ஜே.ஆர் ஜெயவர்த்தனா இத் தலதா மாளிகையிலிருந்து மக்களுக்கு உரையாற்றும், அரசியல் பிரகடனங்களை வெளியிடும் மரபை ஆரம்பித்து வைத்தது இங்கே நினைவில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

உள்நாட்டு யுத்தம் நடக்கின்ற ஒரு நாட்டில், ஒரு அரசாங்கம் தனது அரசியல் இராணுவ நலன்களுக்காக பயன்படுத்தும் இலக்குகள், அரசியல் இலக்குகளாகவே கருதப்படவேண்டும் என்றும் அவற்றின் மீது நடத்தப்படும் தாக்குதல்களை பயங்கரவாதத் தாக்குதல்களாக கருதமுடியாதென்றும் சர்வதேச சட்ட நிபுணர்கள் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

இது ஒரு புறமிருக்க, தலதா மாளிகை மீதான குண்டுத்தாக்குதல் நடந்தவுடன், கண்டிக்கத்தக்க செயல், மோசமான செயல் என்றெல்லாம் அறிக்கைவிடும் மனித உரிமைவாதிகள்...,

வரலாற்றுப் புகழ் பெற்ற நயினா தீவு நாகபூசணி அம்மன் ஆலயம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் என்பன சிறீலங்கா படையினரால் குண்டு வீசி அழிக்கப்பட்டபோதும், யாழ்ப்பாணப் புனித யாகப்பர் ஆலயம், நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயம் என்பன அங்கே தஞ்சமடைந்திருந்த மக்களோடு சேர்த்துக்குண்டுபோட்டு அழிக்கப்பட்டபோதும், செல்வச் சந்நிதி தேர் எரிக்கப்பட்டபோதும், வரலாற்றுத் தொன்மை மிக்க திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், மாவிட்டபுரம், கோவில்கள் இராணுவத்தினரால் சீர்குலைக்கப்பட்டபோதும் -வாய் மூடி மௌனிகளாக இருந்துவிட்டு, தலதா மாளிகை தாக்கப்பட்டவுடன் 'மனித உரிமை' கூச்சல்போடுவதானது தமிழர்களும், தமிழர் வழிபாட்டுத் தலங்களும் அழிக்கப்படுவது மனித உரிமை மீறல் செயற்பாட்டுக்குள் அடக்கப்படமுடியாதவை என்ற இன அடிப்படையிலான ஒரு எழுதப்படாத விதியை, இந்த நிறுவனங்கள் கொண்டுள்ளன போலும் என்ற ஒரு ஐயப்பாடு தமிழ் மக்களுக்கு தோன்றுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

# தலதா மாளிகை குண்டுவெடிப்பு 20 பொலிசார் புலனாய்வு பிரிவினரால் கைது

தலதா மாளிகை குண்டுத் தாக்குதலையடுத்து கண்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 20 பொலிசார் சிறீலங்காவின் புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விசாரணைக்குட்படுத்தப்பட்ட பொலிசாரில் பலர் தலதா மாளிகைக்கு அருகிலுள்ள வீதித் தடை சாவடிகளில் பணிபுரிந்தவர்களாவார்கள். குண்டு வெடிப்பு தினத்திற்கு முன்னர் தலதா மாளிகைக்கு அண்மித்த புகையிரதக் கடவை ஒன்றில் அமைந்திருந்த பொலிஸ் சோதனைச்சாவடி ஏன் அகற்றப்பட்டிருந்தது எனவும் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரம்ப விசாரணைகளின் படி, தாக்குதல்காரர்கள் மட்டக்களப்புப் பகுதியிலிருந்தே கண்டிக்குள் நுழைந்துள்ளதாக துப்புகள் கிடைத்துள்ளன எனவும் பொலிஸ்தரப்பு தெரிவித்துள்ளது.

# குண்டு தாக்குதல் பற்றி ஆராய ஸ்கொட்லன்ட்யார்ட் - எஃப்.பி.ஐ வேண்டும்

**-ரணில்-**

தலதா மாளிகை குண்டு வெடிப்பினை பற்றி விசாரணைகளை நடாத்த பிரித்தானியாவின் ஸ்கொட்லான்ட்யார்ட் அல்லது அமெரிக்க எஃப்.பி.ஐ (FBI) புலனாய்வு துறையினர் வரவழைக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இக் குண்டுத் தாக்குதல் பற்றி தமக்கு பல சந்தேகங்கள் இருப்பதாக ஐ.தே.வினர் தெரிவித்ததை அடுத்தே ரணில் இக் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

தலதா மாளிகையில் சில திருத்த வேலைகளை செய்வதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டவர், ரத்வத்தையின் மகனான லொகான் ரத்வத்தைக்கு நெருங்கிய நண்பர் எனவும், இவரது நிறுவனத்தில் கடமையாற்றிய ஊழியர் ஒருவர் இக் குண்டு வெடிப்பின் பின்னர் காணாமற் போயுள்ளமை தமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் ஐ.தே.க வினர் தெரிவித்துள்ளனர்.

# நான்கு பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது

மட்டக்களப்பு இலுப்பட்டிப்பள்ளம், தம்பிட்டி ஆகிய இடங்களுக்கு பால் வியாபாரத்திற்குச் சென்ற நான்கு தமிழ் பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 25.01.98 அன்று செங்கலடி - பதுளை வீதியில் ரோந்து சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரே இவர்களை கைது செய்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

பன்குடா வெளியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான வி.சிறிஸ்கந்தராசா (33), இலுப்படிச்சேனையை சேர்ந்த என்.பாக்கியராசா(23), நான்கு பிள்ளைகளின் தந்தையான எஸ்.ரவி (36), புவனேந்திரன்(19) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் காணாமற் போவோருக்கும் தமக்கும் தொடர்பில்லை என இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# தலதா மாளிகை திருத்தியமைக்க சிறீலங்கா ஜனாதிபதி 20 மில்லியன் வழங்கினார்

குண்டு வெடிப்பினால் சேதமுற்ற கண்டி தலதா மாளிகை புனரமைப்புக்கென புனரமைப்பு நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுதந்திரதின பொன் விழாவிற்கு முன் கட்டிமுடிக்க வேண்டும் என ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நிதியத்திற்கு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா தனது ஜனாதிபதி நிதியிலிருந்து 20 மில்லியன்களை வழங்கியுள்ளார். இலங்கை மக்கள் வங்கி 25 இலட்சம் ரூபாக்களையும் வழங்கியுள்ளது.

இக்குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்ட தலதா மாளிகையின் நுழைவாயில், மதிற்சுவர்கள், எண்கோண மண்டபத்தின் கூரைகள், அத்துடன் சிதைவடைந்து போயுள்ள சிற்பங்கள், ஓவியங்கள் என்பவற்றை திருத்தி அமைப்பதற்கு பல கோடி ரூபா செலவாகும் என இதனை புனரமைப்பதற்கென உருவாக்கப்பட்டுள்ள நிதியத்தின் மல்வத்த பீடாதிபதிகள், அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

# தண்டனையை எதிர்த்து மேன் முறையீடு

ராஜீவ் காந்தி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 26 பேரும் அத் தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய விருப்பதாக சென்னையிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 26 பேரின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதற்கு அரசு சார்பற்ற அமைப்புக்களின் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக தண்டனை பெற்றவர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர் சைதை. துரைசாமி தெரிவித்துள்ளார்.

# யாழ். மாவட்ட பாடசாலைகள் சுதந்திரதின பொன்விழா கொண்டாடுமாறு கட்டளை

யாழ். குடாவினை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் அனைத்திலும் சிறீலங்காவின் 50-வது சுதந்திரதின பொன் விழாவை கொண்டாட வைக்குமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சினால் பணிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விபரங்களை அமைச்சு யாழ். குடா, இராணுவத்தினருக்கும் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைத்துள்ளது. தேசியக்கொடியேற்றல், தேசிய வீரர்களின் நினைவுரைகள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துமாறும் அவ் விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே வேளை இக் கொடியேற்ற வைபவத்திற்கென சிறீலங்காவின் தேசிய கொடிகள் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

# சுதந்திர தின பொதுமன்னிப்பு தமிழ் கைதிகளுக்கு இல்லை

50-வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு 1550 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய சிறீலங்கா அரசு முடிவு செய்ததை அடுத்து ஏற்கனவே ஒரு பகுதியினர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி - 4-ம் திகதி சிறையினை விட்டு வெளியேறும் மேலதிகமான 750 கைதிகளில் பெரும்பாலானோர் சிங்களவர்களாவர். தமிழ் அரசியல் கைதிகளுக்கு இத்தகைய விடுதலை வழங்கப்படமாட்டாது எனவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# விடுதலைப் புலிகள் மீதான தடை அவர்களை தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபட நிர்ப்பந்தித்துள்ளது

**- யாழ். ஆயர்**

சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளை தடை செய்ததன் மூலம் அவர்களைத் தொடர்ந்தும் யுத்தத்தில் ஈடுபடும்படி நிர்ப்பந்தித்துள்ளது. விடுதலைப் புலிகளின் பங்களிப்பின்றி எந்தவொரு சமாதானமும் சாத்தியமற்றது. எனவே அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என யாழ். ஆயர் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளை தடைசெய்திருப்பதானது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படலாம் என்ற எதிர்பார்ப்புகளை முற்றாக சிதறடித்துள்ள ஒரு விடயம் என, பல தமிழ் அமைப்புக்கள் கருத்து தெரிவித்துள்ளன. இத் தடை உத்தரவினையிட்டு சிறீலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே கட்சியும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதும் தெரிந்ததே.

# * பதவி இழந்த ரத்வத்தை
# * சட்டம் அறியாத சந்திரிகா

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை குண்டுவெடிப்பு சிறீலங்கா அரசியலில் பெரும் கொந்தளிப்பையும், நாட்டு மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. தலதா மாளிகை குண்டு வெடிப்பு சம்பவம் சிறீலங்கா அரசாங்கத்தை ஆட்டங்காண வைத்திருக்கிறது. சிறீலங்காவில் 50-வது சுதந்திரதினவிழாவை கண்டியில் நடத்தி தன்னை சரித்திர நாயகனாகக் காட்ட முயன்ற பிரதிபாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை சிங்களமக்களின் கோபப் பார்வைக்கு இலக்காகி இருப்பதுடன், அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு மூலையில் குந்தியிருக்கவேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலையை, இத் தலதா மாளிகைக்குண்டு வெடிப்பு ஏற்படுத்தியிருக்கிறதென்றால் மிகையாகாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றி அதை உத்தியோக பூர்வமாக, வைபவ ரீதியாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் அறிவித்து 'சபாஷ்' வாங்கிய ரத்வத்தை இன்று சிங்கள மக்கள் மத்தியில் தூற்றப்படுபவராகவே காணப்படுகிறார்.

கண்டி சிங்கள ராஜதானியில் சுதந்திரப்பொன்விழாவை நடத்துவதன் மூலம் தனது இனவாதக் கொள்கையை அஸ்கிரிய மாநாயக்க தேரர்களுக்கு உணர்த்தி அவர்களின் உதவி மூலம் பிரதமர் பதவியை கைப்பற்ற அநுருத்த ரத்வத்தை திட்டமிட்டிருந்தார். அவரின் திட்டம் சுக்குநூறாகப் போனதுடன் அவரின் ஆலோசனையைக் கேட்காமலே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, கண்டியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுதந்திரப்பொன்விழா வைபவத்தை கொழும்புக்கு மாற்றிவிட்டார். இது ரத்வத்தைக்கு பெருத்த அவமானத்தையும், தலைகுனிவையும் ஏற்படுத்தி விட்டது. கடந்த புதன் கிழமை அவர் ஜனாதிபதி தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அமைச்சரவை சுதந்திரப் பொன்விழாவை கொழும்பில் நடத்துவது என தீர்மானித்துவிட்டது. அன்று மாலைதான் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யப் போவதாக அநுருத்த ரத்வத்தை கண்டியில் இருந்துகொண்டு ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு தனது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பிவைத்தார். ஆனால் அரசியல் சட்டத்தைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளாதவராக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, தனது மாமனாரான ஜெனரல் ரத்வத்தையின் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

சிறீலங்கா அரசியல் சட்டத்தின் 47-வது பிரிவின் இரண்டாவது உபசரத்தின்படி அமைச்சர் ஒருவர் பதவி விலகலை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவருக்கு அறிவிக்கும் பட்சத்தில் கடிதம் கிடைத்த நேரத்தில் இருந்து அவர் பதவி விலகியவராகவே கருதப்படுவார். அவ்வாறு பதவி விலகிய ஒருவர் மீண்டும் அமைச்சராக வேண்டும் என்றால் மீண்டும் ஜனாதிபதியால் நியமிக்கப்படவேண்டும். ஜெனரல் அநுருத்த ரத்வத்தை மீண்டும் நியமிக்கப்படுவார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

ஜெனரல் அநுருத்த ரத்வத்தையின் விவகாரம் சூடு பிடித்துவரும் நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு சிறீலங்கா அரசாங்கம் தடைவிதித்திருக்கிறது. நாட்டின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் என மக்களின் வாக்குகளை குறிப்பாக தமிழீழ வாக்குகளை 'யாசித்து' பெற்றுக்கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், தமிழர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு என்றுமே தயாரில்லை என்பதை எடுத்துக்காட்டுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதித்ததன் மூலம் தெரிவித்திருக்கிறது. இந்தத் தடையினால் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் எந்த விதமான மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை. தவிரவும் தமிழீழ விடுதலைப் புலிகளை அரசு தொடர்ந்தும் யுத்தத்திற்கே இழுத்துக்கொண்டிருக்கிறது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்ற நிலைப்பாடு சிறீலங்கா அரசில் கடந்த பல வருடங்களாக நிலவி வருகிறது. நிலைமை இப்படியிருக்க, பத்தாம்பசலித்தனமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்திருப்பது நாட்டிற்கு ஒரு நல்ல ஆரோக்கியமான முடிவில்லை என கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

*சிறீலங்கா அரசியல் சட்டத்தின் 47–வது பிரிவின் இரண்டாவது உபசரத்தின்படி அமைச்சர் ஒருவர் பதவி விலகலை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவருக்கு அறிவிக்கும் பட்சத்தில் கடிதம் கிடைத்த நேரத்தில் இருந்து அவர் பதவி விலகியவராகவே கருதப்படுவார்.*

கண்டி தலதா மாளிகை குண்டு வெடிப்பினால் பௌத்த சிங்கள மக்கள் மன அமைதி அற்றவர்களாக இருக்கிறார்கள். இம் மக்களை சாந்தப்படுத்துவதற்காகவே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தையின் ராஜினாமாவும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையையும் அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது என்று கொழும்பில் பல அரசியல் கட்சித் தலைவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

★★★★★

## பரந்தன் ஆனையிறவில் தாக்குதல்

சிறீலங்காவின் 50-வது சுதந்திரப் பொன்விழா நெருங்க நெருங்க தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளும் அதிகரித்து வருகின்றன. கடந்த வாரத்தில் வாழைச்சேனை, ஏறாவூர், வாகனேரி போன்ற இடங்களில் உள்ள இராணுவ முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் ஏக காலத்தில் தாக்குதல் கொடுத்தனர். வாகனேரி இராணுவ முகாமைக் கைப்பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் அங்கிருந்த அனைத்து ஆயுதங்களையும் இரண்டு டிராக்டர்களில் எடுத்துச் சென்றனர். இந்த சம்பவத்தில் 10 இராணுவத்தினர் உயிரிழந்தனர். 15 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பலரைக் காணவில்லை.

★★★★★

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பரந்தன் கிழக்குப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்கள் மீதும், ஆனையிறவு முகாம் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதலில் 40-ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியானதாகவும், 110 பேர் வரை காயமடைந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்று மாலை (ஞாயிறு) இந்த மோதல் நீடித்துக்கொண்டிருந்தது.

புலிகளின் தாக்குதலுக்கு மத்தியில் எப்படியாவது சிறீலங்காவில் 50-வது சுதந்திரப் பொன்விழாவை வெற்றிகரமாகக் கொண்டாடும் வகையில் ஆயிரக் கணக்கான படையினர் கொழும்பில் குவிக்கப்பட்டுள்ளனர். ஏதோ யுத்தம் நடைபெறப்போவது போல் கொழும்பு நகரத்திலும், அண்டிய நகரங்களிலும் யுத்த டாங்கிகள் ஒடித்திரிகின்றன.

இராணுவ கொமாண்டோக்கள் நீட்டிய துப்பாக்கிகளுடன் மோட்டார் சைக்கிள்களில் வலம் வந்துகொண்டிருக்கின்றனர். தேடுதல், சுற்றி வளைப்பு போன்றவற்றிற்கு குறைவேயில்லை. வெளியூர்களில் இருந்து கொழும்பு வருபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் குறைந்து வருகின்றது. சுதந்திர தினம் நெருங்க நெருங்க என்ன நடக்கப்போகிறதோ என நாட்டு மக்கள் பெரும் பீதியில் காணப்படுகின்றனர்.

**வவுனியாவிலிருந்து காண்டீபன்**



## தமிழீழச் செய்திகள்

# வவுனியா நகருக்குள் பிரவேசிக்க முற்றாகத் தடை

வன்னி பெரு நிலப்பரப்பிலிருந்து வவுனியா நகருக்குள் பொதுமக்கள் பிரவேசிக்க சிறீலங்கா அரசு முற்றாகத் தடை விதித்துள்ளது. கடந்த 28-ம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த இந்தப் புதிய விதியினால் மக்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாகியுள்ளனர். இப்புதிய கட்டுப்பாட்டினை சிறீலங்கா இராணுவம் மிகக் கடுமையாக தற்போது நடைமுறைப் படுத்தி வருகிறது.

இப்புதிய விதியின்படி, இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திலிருந்து எவரும் வவுனியா நகருக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அரச அலுவலர்கள் மாத்திரம் மருத்துவ காரணங்கள் முன்னிட்டு நகருக்குள் பிரவேசிக்க மாவட்ட மருத்துவ அதிகாரியின் அத்தாட்சியுடன் மனுச் செய்தால், அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஏனைய மக்கள் மன்னாருக்கு சென்றே தெற்கிற்கான அனுமதியையோ வேறு அலுவல்களையோ மேற்கொள்ள வேண்டுமெனவும் அரசு அறிவித்துள்ளது.

இப்புதிய நடவடிக்கையினால் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் பெரும் இன்னல்களை அடைந்துள்ளனர்.

இதேவேளை வவுனியா நகரில் இருக்கும் தமது உறவினர்களுடன் தங்கியிருக்கவும் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதி மக்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இப் புதிய விதிகாரணமாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அகதிமுகாமும் உடனடியாக மூடப்படும் என தெரியவருகிறது.

# வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகள் போராட்டம்

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், சிறீலங்கா அரசின் பொலிஸ் நிர்வாகத்திற்கு எதிரான போராட்டங்களை கடந்த வாரம் நடாத்தியுள்ளதுடன், மேலும் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

முன்னதாக, மேற்படி சங்கத்தினர் தமது வேலைவாய்ப்பற்ற நிலை குறித்து சிறீலங்கா அரசிற்கு ஆட்சேபம் தெரிவிப்பதாக ஊர்வலம் ஒன்றினை நடாத்த திட்டமிட்டு அதற்கான அனுமதியினை சிறீலங்கா பொலிசாரிடம் கோரியபோது, பொலிசார் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர்.

இதையடுத்து சங்கத்தினர் மட்டு நகரிலுள்ள காந்தி சிலை முன்நிலையில் விழிப்புப் போராட்டம் ஒன்றினை கடந்த 28-ம் திகதி நடத்தியதுடன் மேலும் இவ்வாறான எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தவும் முடிவு செய்துள்ளனர்.

மட்டுமாவட்டத்தில் இருக்கும் வேலை வாய்ப்பற்ற தமிழ், முஸ்லிம் பட்டதாரிகளில் சுமார் 435 பேர் இச்சங்கத்தில் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி கூட்டுறவு ஒன்றியம் மக்களின் பாதிப்பு குறித்து மகஜர்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுகளின் ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும், அதனூடாக மக்களின் பாதிப்புகளையும் குறிப்பிட்டு அத்தியாவசிய சேவையாணையாளர் நாயகத்திற்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

'இராணுவ நடவடிக்கையினால் பொது மக்கள் அனுபவித்துவரும் சொல்லொணாத் துன்பங்கள், இடம்பெயர்ந்த மக்களின் துயர் துடைப்பதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய உலர் உணவு விநியோகத்தினால் ஏற்பட்ட செலவீனம் இதுவரை ஈடுசெய்யப்படாமை, பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாடு, களஞ்சிய வசதியின்மை, போக்குவரத்து பாதையின் சீர்கேடு உட்பட பலவிடயங்கள் இம் மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இம் மகஜரில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரணம் முற்றுமுழுதாக வழங்கப்படவேண்டும், வறுமை நிவாரணம் முற்றுமுழுதாக வழங்கப்பட வேண்டும், மாவட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள், மண்ணெண்ணெய், பிள்ளைகளின் பால்மாவகைகள், வீட்டுப் பாவனைக்கான பொருட்கள் மாதாந்தம் வருவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், விவசாயத்திற்குத் தேவையான எரிபொருள், உரவகை கிருமி, களை நாசினிகள் இயந்திர உபகரணங்கள் மண்வெட்டி போன்றவற்றிற்கான தடை நீக்கப்படவேண்டும். மக்களின் நாளாந்தப் பிரயாணத் தேவையான நெருக்கடி நீக்கப்படவேண்டும், மருந்துத்தடை நீக்கப்படவேண்டும், மாணவர்களின் கல்விக்கு ஏற்படும் சிக்கல்கள், தடைகள் களையப்பட வேண்டும் என்பன உட்பட பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# காணாமற் போவோர் கைது செய்யப்படுவதில்லை

## - படையினர் அறிவிப்பு -

கிழக்கில் காணாமல் போகும் பொதுமக்களை தாம் கைது செய்யவில்லையென சிறீலங்கா இராணுவத்தரப்பு அறிவித்துள்ளது. இராணுவத்தினரால் வெளிப்படையாகவே கைது செய்து கொண்டு செல்லப்பட்டவர்களும், இராணுவத் தரப்பினால் இவ்வாறு விபரம் கொடுக்க மறுக்கப்பட்டவர்களுள் அடங்குகின்றனர்.

கடந்த 28-ம் திகதி வாழைச்சேனை காகிதஆலை வளாகத்தினுள் வைத்து இரு இளைஞர்கள் பேய்த்தாளை முகாம் படையினரால் கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டனர். இந்த இரு இளைஞர்களினதும் நிலைபற்றி அவர்களது பெற்றோர்கள் பேய்த்தாளை முகாமில் சென்று விசாரித்தபோது அவ்வாறானவர்கள் தம்மால் கைதுசெய்யப்படவில்லை என படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

எஸ்.சுந்தரம் (20), கமலேஸ்வரன் (22), ஆகிய தொழிற் பயிற்சி கற்கைநெறி மாணவர்களே படையினரால் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டவர்களாவார்கள்.

# தமிழீழ பொதுத்தேர்வு முடிவுகள் வெளியாகின

# கூடுதல் புள்ளி பெற்றவர்களுக்கு தேசியத் தலைவரின் பணப் பரிசு

தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவையினால் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட பொதுத்தேர்வு பெறுபேறுகள் கல்விக்கோட்டங்களினூடாக சகல பாடசாலைகளுக்கும் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இத்தேர்வில் தேசிய மட்டத்தில் கூடுதல் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பணப்பரிசும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் மேற்படி தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தேசிய மட்டத்தில் கூடுதல் புள்ளிகள் பெற்ற 10 மாணவர்களுக்கும் ஒவ்வொரு கல்வி கோட்டங்களிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் தமிழீழத் தேசியத் தலைவரின் பணப் பரிசும், பாராட்டிதழ்களும் வழங்கப்படவுள்ளன. இவை தவிர பொதுப்பாடங்கள் ஒவ்வொன்றிலும் தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் பல நிறுவனங்கள் பணப் பரிசுகளை வழங்க முன்வந்துள்ளன.

# தனங்கிளப்பில் படகு மீது துப்பாக்கிப் பிரயோகம்; இருவர் பலி

படகுமூலம் யாழ். திரும்பிய பொது மக்கள் மீது சிறீலங்காப் படையினர் தாக்குதலை மேற்கொண்டதில் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர். கடந்த 24-ம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் 9 பேர் கொண்ட படகு ஒன்று யாழ்ப்பாணம் செல்லும் நோக்குடன் பூநகரி நல்லூரில் இருந்து புறப்பட்டு தனங்கிளப்பு கரையை அண்மித்தபோது அவ்விடத்தில் நின்ற இராணுவத்தினர் கரைக்கு வருமாறு கையைக் காட்டினர். அதன்படி கரையினை நோக்கிச் சென்ற அப்படகினை 100 மீற்றர் தொலைவில் வைத்து படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது இரு அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர். 7 பேர் படுகாயமடைந்த நிலையில் தப்பி மீண்டும் பூநகரிக் கரையை வந்தடைந்தனர். இவர்கள் சென்ற படகும் கடுமையான சேதம் அடைந்துள்ளது. மேற்படி சம்பவத்தின்போது சிவபாதம் தேவகுலசீலன்(12) (ஐயனார் கோயிலடி, அராலி), யோகன் சிவக்கொழுந்து (52) (மந்துவில் தெற்கு) ஆகியோரே பலியாகினார்கள். நாகரத்தினம் லம்போதரன் (கிளாலி), சூசைப்பிள்ளை மரியதாஸ் மகேந்திரன் (48) (கிளாலி), ஆறுமுகம் பாலசிங்கம் (46) (புலோப்பளை கிழக்கு, பளை), கந்தசாமி பிரகலாதன் (35) (ஐ.கோவிலடி, அராலி)) பரசுராமன் சுமந்திரன் (18) (சாவகச்சேரி), சிவபாதம் தாட்சாயினி(4), சிவபாதம் சுசிராணி(9) (ஐயனார்கோயிலடி, அராலி) ஆகியோர் காயமடைந்தவர்களாவர்.

# காத்தான் குடியில் இளைஞர் சுட்டுக்கொலை

காத்தான்குடி பகுதியில் வசிக்கும் தமிழ் இளைஞர் ஒருவர் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் கடந்த 30-ம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதிகாலை 4 மணியளவில் குண்டு வெடிப்பு சத்தமொன்று இப்பகுதியில் கேட்டதையடுத்து தனது வீட்டிற்கு வெளியேவந்து, என்ன நடந்தது என்பதை இவ் இளைஞர் அறிய முயன்றபோதே அங்கு பதுங்கியிருந்த படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை காத்தான்குடியில் 29-ம் திகதி இரவு இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமொன்றிலும் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.


**10 Dm செலவு செய்து ஜேர்மன் கற்றுக் கொள்ளவும்!**

தமிழர்களின் வேண்டுகோளின்படி விலை குறைக்கப் பட்டுள்ளது.

Deutsch Fuer Tamilen / ஜேர்மன் தமிழ் மக்களுக்கு 140 பக்கங்கள் - இலக்கணம், பொது அறிவு, சிறு அகராதிகள் உட்பட எட்டு பாடப் புத்தகங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டது.

10 மார்க் (இயலுமானால் 1 Dm 50 PF க்கு முத்திரைகளும் - ஒரு புத்தகம் அனுப்ப) உங்கள் விலாசத்தோடு அனுப்பவும்.

Firma Bachmayer, Freiherr Vom Stein Str 12, 68723 Oftersheim, Germany.

புத்தகம் -மிகவும் சுலபமாக விளங்கும் முறையில் எழுதப்பட்டது-உடனே அனுப்பி வைக்கப்படும்.

**Bank: Konto Nr 6000509 Volksbank Oftersheim, Blz 670 913 00.**



**உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்**

(மக்கள் கடை முன்பாக)

**தமிழ் அச்சகம்**

வெளிநாடுகளுக்கான அச்சுவேலைகள் **குறைந்த விலை**

வண்ண நிறங்களிலான அச்சுவேலைகள் **சிறந்த தரம்**

அனைத்து வேலைகளும் குறித்த தவணை

பன்னெடுங்காலமாய் அனைத்து உள்ளங்களின் நன்மதிப்பைப்பெற்ற தமிழ் அச்சகம் புதிய நிர்வாகத்தில் சிறப்பு விலை கழிவுடன்

**திங்கள் முதல் - சனி வரை 10.00 – 22.00 மணிவரை**

60, Rue Louis Blanc, 75010 Paris - **Tel & Fax: 01 42 09 60 64**

சிறீலங்காவில் மீண்டுமொரு குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. அதுவும் சிறீலங்கா தனது சுதந்திரத்தை பிரித்தானியர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட 50-வது வருட பொன்விழாவை விமரிசையாக கொண்டாட முனைந்திருந்தவேளை மலையகத் தலைநகர் கண்டியில் இக் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

சிறீலங்காவின் சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டத்தை ஆரம்பத்தில் கொழும்பிலேயே நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், கண்டிய பிரபுத்துவத்தின் ஓர் அங்கத்தவரான அமைச்சர் அநுருத்த ரத்வத்தை, சுதந்திரதின விழாக்கள் பிரித்தானியர்கள் இறுதியாக கைப்பற்றிய அதே கண்டியில் மாளியைச் சுற்றியுள்ள வீதிகள் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டுத்தான் இருந்தன. நாம் தலதா மாளிகைக்கு மேலதிக பாதுகாப்பு தேவை என அரசிடம் கேட்டபோது, வடபகுதி போருக்கு படையினர் தேவை எனக்கூறி தர மறுத்துவிட்டார்கள். நாமே வருமானப் பணத்தில் சில பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துகொண்டோம். வாசலில் அமைக்கப்பட்டிருந்த இரும்பு பாதைத் தடுப்புக்கூட எம்மால்தான் அமைக்கப்பட்டது. இப்போது தாங்கள்தான் எல்லாவற்றையும் செய்ததாக இவர்கள் மார்தட்டிக் கொள்கிறார்கள்" என்றார்.

கண்டி நகர் இறுக்கமான பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட முடியாதது என்பதை ரத்வத்





கிறார்கள், அப்படி தாக்குவதற்கு ஒரு குழுவந்தால் அதனை நகரின் எல்லையிலேயே வைத்துப் பிடிக்க நாம் ஏற்பாடு செய்துள்ளோம்" எனத் தெரிவித்திருந்தார். பல காவல் தடைகளையும் தாண்டி தனது சரியான வெடித்துச் சிதறுவதற்கு சில கணங்களுக்கு முன்பாக அவ் வாகனத்தில் வந்த இளைஞர்களில் இருவர் சாதாரணமாக இறங்கி தூரத்தே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் ஏறி தப்பிச் சென்றதாக இக் குண்டுவெடிப் கவனத்தை தன்னகத்தே ஈர்த்து இத் தீவில் நீண்டகாலமாக தீர்க்கப்படாத இனப்பிரச்சினை உண்டு என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இக் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து சிங்கள இனவாதத்தால் தூண்டப்பட்ட இளைஞர்கள் கண்டிநகரின் தமிழர்கள் சொத்துக்களை சேதப்படுத்தத் தொடங்கினார்கள். இதன்போது 25ற்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. இந்து கலாச்சார மண்டபம் தீக்கிரையானது. கண்டியின் இரு புராதன ஆலயங்களின் உண்டியல்கள் கொள்ளையடிக்கப்பட்டு சிலைகள் உடைக்கப்பட்டு, ஒரு கோயிலின் தேர் தீக்கிரையாக்கப்பட்டது.

# ரத்வத்தையின் முகத்திரையைக் கிழித்த குண்டு வெடிப்பு - 4

தான் நிகழ்த்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இவரது தொடர்ந்த பிடிவாதத்தினால், இறுதியில் சுதந்திர விழாவை கண்டியில் நடத்துவதென்ற முடிவினை சிறீலங்கா ஜனாதிபதி அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சுதந்திர பொன்விழாவிற்கான ஏற்பாடுகள் யாவும் ரத்வத்தையின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட குழுவினால் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. என்றுமில்லாதவாறு இராணுவத்தினரும்,



பொலிசாரும் மற்றும் இரகசிய பாதுகாப்புப் பிரிவினரும் கண்டியில் குவிக்கப்பட்டனர். பல பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டு விசேட கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டன. நகரின் பல வீதிகள் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டன. இப்படி இருந்தும் ரத்வத்தை தலைமையிலான குழுவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தலதா மாளிகைக்கு பாதுகாப்பினை பெற்றுத்தராது என பரவலாக எதிர்க்கட்சியினரால் கூறப்பட்டது.

தலதாமாளிகையின் பாதுகாப்புப் பற்றி அதன் நிர்வாகிகளில் ஒருவர் கூறுகையில், "சுமார் மூன்று வருடங்களாகவே தலதா

தைக்கு பல பாதுகாப்பு உயரதிகாரிகள் எடுத்துக்கூறியிருந்தும் ரத்வத்தை அதை உதாசீனம் செய்ததுடன், இங்குதான் எமது பொன்விழா கொண்டாட்டம் நடக்கும் என மார்தட்டினார்.

கண்டியில் பாதுகாப்பிற்காக 10,000-ற்கு மேற்பட்ட படையினர் காவலில் ஈடுபட்டிருக்க, மற்றுமொரு ஞாயிறு விடுமுறைதின அதிகாலையில் சிறீலங்காவை

> இதே சிங்கள ஆட்சியாளர்களால் 400ற்கும் அதிகமான தமிழர் வழிபாட்டுத் தலங்களான கோவில்கள், தேவாலயங்கள் தாக்கி தரைமட்டமாக்கப்பட்டன. இன்று கூக்குரலிடும் அரசியல்வாதிகளும், அவர்களுக்கு துணைபோகும் பிரச்சார சாதனங்களும், ஏன் சர்வதேச அமைப்புக்களும்கூட அன்று மௌனமாகத்தானே இருந்தன?!

அதிரவைத்த அக் குண்டு வெடிப்பு இடம் பெற்றது.

இக் குண்டுவெடிப்பானது யாரால் மேற்கொள்ளப்பட்டது என்பதைவிட அது மேற்கொள்ளப்பட்ட முறையானதும், இலக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விதமும், அது நடத்தி முடிக்கப்பட்ட முறையும், இதன் மூலம் தெரிவிக்கப்பட்ட செய்தியும் தான் பிரதானமானவை.

நீண்ட நாட்களாகவே தலதா மாளிகை தாக்குதலுக்கு உள்ளாகும் என்பதனை பாதுகாப்பு அதிகாரிகள் தெரிந்துதான் இருந்தனர். அண்மையில் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றிற்கு தெரிவிக்கையில்; "தலதா மாளிகை தாக்கப்படும் என பலரும் கூறு

இலக்கை இக் குண்டுவெடிப்பு ஏற்படுத்தியிருக்கிறது என்றால், அது மிக நுண்ணிய முறையில் திட்டமிடப்பட்டே நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

டிசம்பர் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நகர் மிக அமைதியாகத்தான் இருந்தது. ஒருசில வாகனங்களைத்தவிர பிரதான வீதி வெறிச்சோடிக் காணப்பட்டது. சுமார் 6 மணியளவில் கட்டட வேலைக்கான உபகரணங்களைத் தாங்கியபடி ஒரு வாகனம் மெதுவாக பிரதான வீதிகளினூடே நகரத் தொடங்கியது. சுமார் ஆறுக்கும் மேற்பட்ட இறுக்கமான காவலரண் தடைகளைத் தாண்டி தலதா மாளிகையை நோக்கி வாகனம் திரும்பியதைக் கண்ட பாதுகாப்புப் பொலிசார் தம்மைப்பாதுகாக்க தலைதெறிக்க ஓடித் தப்பிக் கொண்டனர். தலதா மாளிகையின் வாசல் பகுதிக்கு ராஜவீதியின் ஊடாக சுந்திரதின பொன் விழாவின் பிரதான நிகழ்வுகள் நடைபெற இருந்த எண்கோண மண்டபத்திற்கு அருகில் வந்த வாகனம் வெடித்துச் சிதறியது. வாகனம்

பின் போது தப்பி ஓடி ஒளித்திருந்த இரு பொலிசார் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இக் குண்டு வெடிப்பினால் கண்டி நகரில் பெரும்பாலான கட்டடங்கள் அதிர்ந்தது மட்டுமல்லாமல் சுற்றுப்புறத்திலிருந்த தென்னை மரங்கள் கூட தீப் பற்றி எரிந்துள்ளன.

குண்டுவெடிப்பானது பல தரப்பினராலும் கண்டிக்கப்பட்டதானாலும், அதிகாலை ஆறு மணிக்கு இது நடத்தப்பட்டதானது, இதை நடத்தியவர்கள் பொதுமக்கள் இழப்பை கூடியளவு தவிர்ப்பதில் கவனமான இருந்திருக்கின்றார்கள் என்பதை தெளிவுபடுத்துகிறது. அதே போல இவ் இலக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதானது ஆட்சியாளர்களினதும், சர்வதேசத்தினதும்

இக் குண்டு வெடிப்பை பெரிதாக்கி பௌத்தமத சின்னம் தாக்கப்பட்டதாக சிங்கள ஆட்சியாளர்கள் கூக்குரலிட்டு வருகின்றனர். ஆனால், இதே சிங்கள ஆட்சியாளர்களால் 400ற்கும் அதிகமான தமிழர் வழிபாட்டுத் தலங்களான கோவில்கள், தேவாலயங்கள் தாக்கி தரைமட்டமாக்கப்பட்டன. இன்று கூக்குரலிடும் அரசியல்வாதிகளும், அவர்களுக்கு துணைபோகும் பிரச்சார சாதனங்களும், ஏன் சர்வதேச அமைப்புக்களும்கூட அன்று மௌனமாகத்தானே இருந்தன?!

இக் குண்டுவெடிப்பு சிங்கள ஆட்சியாளர்களை பல சந்தேகங்களுக்கான விடைகளைத் தேடி நிச்சயம் அலையவிட்டுத்தான் இருக்கின்றது. ஆனால், அப்பாவிச் சிங்கள மக்கள்தான் ஆட்சியாளர்களின் ஏமாற்றுத்தனத்தை அறிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

Prompt
PROMPT
Travel AG
உலக விமான போக்குவரத்து அங்கீகாரம் பெற்ற தமிழ் நிறுவனம்

அனைத்து விமான சேவைகளுக்குமான பயணச் சீட்டுக்கள் எம்மிடமே சொந்தமாக இருப்பதால் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
இதைவிட சில பயணச்சீட்டுகளுக்கான இலவச மருத்துவக் காப்புறுதிகளையும் அன்றி மீள்பயணக் காப்புறுதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
விசேடமாக விமான நிலையத்திலும் உங்களுக்கான சில பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.
சில பயணச்சீட்டுகளுக்கு 24 மணி நேரத்தில் மீளளிப்புப் பணம் தரப்படும். எம்மால் எல்லாவிதமான கிறடிட் காட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.
Ferries, Rent Cars, Buses, Hotel வசதிகள் கூட எம்மிடம் உண்டு

நாம் இவற்றின் பிரதிநிதிகள் என்பதால் எம்மால் பயணச் சீட்டுக்களை மிக மலிவான விலையில் வழங்கமுடியும்.

தொடர்புகளுக்கு: Prompt Travel Ag Möhne Str-36
59755 Arnsberg.Tel: 02932 -9790 - (Nhole, Möhan)
Fax: 02932 -979097 und 0180 5212425
Handy 01714757614
Email sales@promptplc.com Web http:// WWW.promptplc.com
வங்கி இலக்கம் Spk Arnsberg, Blz 46650005, Kto 30171
Deutsche Bank Blz 46670007, Kto 5316666

ஜேர்மனி டோட்முண்ட் பிறைட்டன் வீடியோவின் இவ்வார திரைவெளியீடு
ஆக்ஷன்கிங் அர்ஜுன், கனவுக்கன்னி சிம்ரன், மந்த்ரா, ஆனந்தபாபு, சின்னிஜெயந்த் நடிப்பில்
'நாட்டாமை' 'முத்து' 'அவ்வை சண்முகி' போன்ற வெள்ளிவிழா படங்களை இயக்கிய கே.எஸ் ரவிக்குமார் இயக்கத்தில்,



'கொண்டாட்டம்'
08.01.98 ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு
Theater Camera
Mallinckrodt Str. 209, 44147 Dortmund.
தொடர்புகளுக்கு:
Brightan Jewellery,Textiles
Video Asia Shop
Oestermarsch 27+37, 44145, Dortmund.
Tel: 0231 -838703+819431, Fax: 0231 -811858

# தமிழகத்தில் மத்திய அரசின் முதலீட்டை அதிகரிப்போம்

தமிழகத்தில் மத்திய அரசின் நேரடி முதலீட்டை அதிகரிக்க அனைத்து முயற்சிகளையும் அ.இ. அ.தி.மு.கழகம் மேற்கொள்ளும் என்று அதன் தேர்தல் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது, கடந்த 30 ஆண்டுகளாக தமிழகத்தில் ஆளும் கட்சியாக திகழ்ந்த கட்சிகளின் ஆட்சி மத்தியில் அமைவதற்கு வழி இல்லை என்ற நிலை உருவாகிவிட்டதால் தமிழகத் தொழில் வளத்துக்கான மத்திய முதலீடு கணிசமான அளவுக்கு குறைக்கப்பட்டு, தொழில் வளர்ச்சியில் தமிழகம் அகில இந்திய அளவில் 13-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. செல்வி ஜெயலலிதா ஆட்சியில் தனது 5 ஆண்டு ஆட்சியில் மாநில அரசின் சொந்த முயற்சியின் மூலம் 3-வது இடத்துக்கு உயர்ந்திடச் செய்தார். தி.மு.க - த.மா.கா கட்சிகளால் எவ்விதத்திலும் மத்திய முதலீட்டுக்கு உதவி வழங்காதது குறைபாடாகும். எனவே அ.தி.மு.க இப்பிரச்சனையில் தனிக்கவனம் செலுத்தி, மத்திய அரசின் நேரடி முதலீடு அதிகரிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டருந்தது.


**தி.க.ஆதரவு யாருக்கு?**

மக்களவைத் தேர்தலில் திராவிட கழகத்தின் ஆதரவு எக்கூட்டணிக்குக் கிடைக்கும் என்பது பற்றி பெப்ரவரி 10-ம் திகதி அறிவிக்கப்படும் என்று அதன் பொதுச் செயலாளர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

சென்னையில் கடந்த வாரம் அவர் நிருபர்களிடம் பேசுகையில் திருச்சியில் பெப்ரவரி 10-ம் திகதி நடைபெறவிருக்கும் மத்திய நிர்வாகக்குழு கூட்டத்தின் முடிவில் எந்தக்கட்சியை ஆதரிப்பது பற்றி அறிவிப்போம். தேர்தலுக்கு பின்னர் நடைபெறும் அரசியல் நிலைமைகளை கருத்தில் கொண்டு தான் ஆதரவைத் தெரிவிக்க முடியும்.

'சோனியா எங்கள் கட்சிக்கு எதிராக பேசமாட்டார்.' என்று த.மா.கா. தலைவர்களில் ஒருவரான ப. சிதம்பரம் தெரிவித்தார். அப்படியானால் அவர் தி.மு.க.விற்கு எதிராகப் பேசுவாரா? தேர்தலுக்கு பின் த.மா.கா. எந்த வகையான முடிவுகளை எடுக்கும் என சிந்திக்கவேண்டி இருக்கிறது. பா.ஜ.க.தீண்டாத கட்சி அல்ல என்று முதலில் சொன்னவர்மு.க தலைவர் மு.கருணாநிதி. தமிழ் நாட்டில் பாரதிய ஜனதா நிரந்தரமாகக் காலூன்றிவிடக் கூடாது என்பதில் திராவிடர் கழகம் உறுதியாக இருக்கிறது.

தமிழக காங்கிரஸ் கட்சியின் பொன்விழா மலரில் பெரியாரின் 'வைக்கம் போராட்டம்' பற்றி சொல்லப்படவில்லை. ஆனால் தற்போது காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே பெரியாரைப் பற்றி மேற்கோள் காட்டி இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.




# வை.கோ. வேட்பு மனுத்தாக்கல்

சிவகாசி மக்களவைத் தொகுதியில் அ.தி.மு.க., ம.தி.மு.க., பா.ஜ.க. கட்சிகளின் கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. கடந்த செவ்வாய்க்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தார்.



விருதுநகர் மாவட்ட ஆட்சியரும் தேர்தல் அதிகாரியுமான ச.கிருஸ்ணனிடம் வேட்பு மனுவைத்தாக்கல் செய்வதற்காக வை.கோ.வுடன் விருதுநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் ஆர். தாமரைக்கனி, மாநில விவசாய அணிச் செயலாளர் கே.சுந்தரபாண்டியன், ஜெயலலிதா மாவட்ட பேரவைச்செயலாளர் ஆர். பாலகங்காதரன், தேனி மாவட்ட ம.தி.மு.க. அவைத்தலைவர் ஜி. பொன்னுப்பிள்ளை, தேனி மாவட்ட ம.தி.மு.க.செயலாளர் கம்பன், என். ராமகிருஸ்ணன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் சி.கனகவள்ளி, விருதுனர் மாவட்ட பா.ம.க மாவட்டச் செயலாளர் லட்சுமணன், பா.ஜ.கா மாவட்டத் தலைவர் எஸ். மோகன்ராஜுலு, திரைப்பட நடிகர் எஸ்.எஸ். சந்திரன் உள்ளிட்ட பலரும் அதிகமானோர் அலுவலகத்திற்கு சென்றனர். அதனால் அலுவலகம் அல்லோலப்பட்டது.

வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டபின் மாவட்ட விளையாட்டு அரங்கில் ஒன்று கூடுவதற்காக சென்று கொண்டிருக்கும்போது எதிரே தேர்தல் பிரச்சார வாகனத்தில் வந்த தி.மு.கவினருடன் மோதல் ஏற்பட்டது. 'நாம் கட்டுப்பாடு காக்க வேண்டும்' என்று வை.கோ.அவ்வப்போது கூறினாலும் தொண்டர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை.

# ராமதாஸ் வெளியிட்ட பா.ம.கவின் தேர்தல் அறிக்கை

இந்திய அரசியலில் ஒரு நிலையான ஆட்சியை அமைத்திடவும், தமிழர்களின் நலன்களைப் பேணிக் காக்கும் தகுதியையும், திறமை மிக்க ஆட்சியை நிலை நிறுத்தவும் பாட்டாளி மக்கள் கட்சி விரும்புகின்றது. இந்திய துணைக்கண்டத்தின் நடுவில் வலுவான திறமையான ஆட்சி அமைத்திடவும் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கான கூட்டாட்சி முறை ஏற்படுத்துவதற்குப் பாட்டாளி மக்கள் கட்சி உழைக்கும்.

இந்தியாவில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக நடைமுறைக்கு வரவேண்டும். 'பினாமி' நிலங்கள் ஒழிக்கப்படவும், கையகப்படுத்தவும் பினாமி நிலங்கள் ஏழை மக்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படவும் சட்டமும், சாதி ஒழிப்பு மற்றும் தீண்டாமை ஒழிப்புக்கான திட்டங்களையும் செயற்படுத்தவும் பா.ம.க முன்னுரிமை அளித்து போராடும். இந்திய மீனவர்கள் சிறீலங்கா படையினரால் சுட்டுக்கொல்லப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கும். இந்தியாவின் மக்கள் தொகை சாதி வாரியாக கணக்கு எடுக்கப்பட்டு கல்வி - வேலைவாய்ப்பு மண்டலவாரியாக வழங்கப்படும். பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்த்தப்படும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டமன்ற எம்.எல்.ஏக்கள், நாடாளுமன்ற எம்.பி. உறுப்பினர்கள் தவறு செய்வார்களேயானால் அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும்.

பெரியார் - அம்பேத்கரின் கொள்கைகளை பாராளுமன்றத்தில் பிரதிபலித்து அவை வெற்றி பெற பாடுபடுவோம் என்று பா.ம.க. வின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஊழலை ஒழிக்க மக்கள் தீர்ப்பளிக்க வேண்டும்

## - மூப்பனார் -

ஏற்கெனவே மக்கள் அறிவித்த தீர்ப்பின் மூலம் ஊழலை ஒழிக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும் அவை நிறைவேற்றப்படவில்லை. இந்நடவடிக்கையை முழுமையாக நிறைவேற்ற மக்கள் நல்ல தீர்ப்பை தரவேண்டும் என்று த.மா.கா. தலைவர் ஜி.கே.மூப்பனார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்திய சென்னையில் மக்களவைத் தொகுதியில் கடந்த வாரம் நடைபெற்ற த.மா.கா. - தி.மு.க. தேர்தல் பணிமனையைத் திறந்து வைத்து மூப்பனார் உரையாற்றுகையில்,

கடந்த தேர்தலில் ஊழலை எதிர்த்த சுப்பிரமணிய சுவாமி, வை.கோ., ராமதாஸ், வாழப்பாடி ராமமூர்த்தி போன்றவர்கள் அ.தி.மு.க வுடன் இணைந்து நிற்கின்றார்கள். ஊழலுக்காக உண்மையாக போராடுபவர்கள் யார் என்பதை மக்கள் இவ் நடவடிக்கை மூலம் புரிந்து கொள்வார்கள் என்று மூப்பனார் தெரிவித்தார்.

# காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி மனுத்தாக்கலின் போது சர்ச்சை

28.01.98 சேலம் எம்.பி.தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளரான தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி வேட்பு மனுதாக்கல் செய்வதற்கு தொண்டர்களுடன் ஆணையர் அலுவலகத்திற்கு சென்றபோது அலுவலகக் கதவுகள் மூடப்பட்டிருந்ததை தொடர்ந்து சர்ச்சை எழுந்தது.

வாழப்பாடி ராமமூர்த்தி திறந்த வண்டியில் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்காக சென்றபோது ஆணையர் அலுவலக கதவுகள் மூடப்பட்டு இருந்ததைக் கண்ட தொண்டர்கள் சுவர் ஏறிக்குதித்தனர். தொடர்ந்து பொலிசாருக்கும் தொண்டர்களுக்கும் இடையே சர்ச்சை ஏற்பட்டது. தொண்டர்களின் கோசங்களுக்கும், சர்ச்சைகளுக்கும் மத்தியில் வாழப்பாடி ராமமூர்த்தி பொலிசாரிடம் கதவை திறந்து விடும்படி கேட்டுக் கொண்டார். அதையடுத்து பொலிசார் கதவை திறந்து விட்டனர்.

தொண்டர்களை சிரமப்பட்டு பொலிசார் கட்டுப்படுத்தினார்கள். தொடர்ந்து ஆணையர் அலுவலகத்தில், தேர்தல் அதிகாரியும் ஆணையருமான முத்துசாமியிடம் வாழப்பாடியின் மனுதாக்கல் செய்யப்பட்டது.

# மக்களவைத் தேர்தலில் போட்டியிடமாட்டேன்

## - பிரியங்கா -

நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா தெளிவாக கூறியுள்ளார்.



காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டு வரும் தமது தாய் சோனியா காந்தியுடன் ராய்ப்பூருக்குக் கடந்த வாரம் சென்ற போதே நிருபர்களிடம் அவர் இதை தெரிவித்தார். ஒரிசாவிற்கு பிரச்சாரத்துக்காக செல்லவிருந்த சோனியாவிடம் தேர்தலில் போட்டியிடுவது குறித்து நிருபர்கள் கேட்டபோது அவர் அதற்கு பதிலளிக்க மறுத்துவிட்டார்.

# அ.தி.மு.க. முன்னாள் எம்.பி. தி.மு.க. வில் இணைந்தார்

அ.திமு.க.வில் முன்னாள் கொள்கை பரப்புச் செயலாளரும் முன்னாள் எம்.பி.யுமான பெ.செல்வேந்திரன் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு மஞ்சள் சால்வை அணிவித்து தி.மு.க வில் இணைந்துள்ளார்.

அவருடன் தேனி மாவட்ட ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர் எல். சேதுராமன், முன்னாள் ஜெயலலிதா பேரவைச் செயலாளர் மதுரை கே. இளங்கோ ஆகியோரும் தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் பொதுச் செயலாளர் அன்பழகன் முன்னிலையில் தி.மு.க வில் இணைந்துள்ளனர்.

# பா.ஜ.க வெற்றி பெற்றால் வாஜ்பாய் பிரதமர்

நடைபெற உள்ள தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றால் வாஜ்பாய் தான் பிரதமர் என்று சொல்லி அக் கட்சி தேர்தல் பிரச்சாரம் செய்து வருகின்றது. ஏனைய கட்சிகள் யார் பிரதமர் என்று அறிவிக்க முடியாத நிலையில் உள்ளன.

இந் நிலை பற்றி மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான ஜோதிபாசு கூறுகையில், ஐக்கிய முன்னணி மீண்டும் மத்தியில் ஆட்சி அமைத்தால் நான் பிரதமர் பதவி ஏற்கத்தயார். ஆனால் நான் பிரதமர் பதவி வேட்பாளராக நிற்க முடியாது. அதை எனது கட்சியும் ஐக்கிய முன்னணியும் முடிவு செய்ய வேண்டும். அவர்கள் என்னிடம் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டால் என் உடல் நிலையும் இடம் கொடுத்தால் பதவியை ஏற்று செயற்படுவேன் என்று தெரிவித்தார்.

தற்போது உள்ள ஐக்கிய முன்னணி மந்திரி சபையில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி இடம் பெறவில்லை. ஆனால் இந்நிலைபற்றி பரிசீலனை செய்வோம் என்று அக் கட்சி ஏற்கனவே அறிவித்துள்ளது. இந்நிலையில் பிரதமர் பதவி ஏற்க தயார் என்று ஜோதிபாசு அறிவித்து இருப்பது ஐக்கிய முன்னணி வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


## தமிழில் சாரதி பயிற்சி
## பேராசிரியர் சக்திப்புயல்

வாகனசாரதி பத்திரம் பெற முடியாமல் வாடுகிறீர்களா?
பிரெஞ்சு மொழி அதற்கொரு தடையாக இருக்கிறதா?
பாடம் படிக்க நேரம் இல்லையா?
இனி இந்தக் கவலையே வேண்டாம்.

மிக எளிதாகத் தமிழிலேயே கோட் கற்பித்து, தேர்வில் உங்கள் அருகிலேயே உட்கார்ந்திருந்து மொழிபெயர்ப்பு உதவி செய்து சாரதிப் பத்திரம் பெறுவதற்கு உத்திரவாதம் அளிக்கிறார் பேராசிரியர் சக்திப்புயல் அவர்கள்.

கடந்த ஆறு மாதங்களாக இவருடைய மாணவர்கள் தொடர்ந்தாற்போல் 100 சதம் பாஸ் செய்து வருகிறார்கள்.
நீங்களும் பாஸ் செய்வது உறுதி. இன்றே அணுகுங்கள்.
6 rue Demarquay, Paris-10, (Métro : Gare du Nord)
தொலைபேசி : 01 34 24 12 82 / 01 42 05 48 11 / 06 60 97 57 33


## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொதுக்கூட்டம்

*எதிர்வரும்15.02.98 ஞாயிற்றுக் கிழமை மாலை 16 :30 மணியளவில்,* Chemin de Perpignan, 31 100 Toulouse ல் அமைந்திருக்கும் தமிழ்ச்சோலைப் பாடசாலை மண்டபத்தில் ("Salle Monlong") தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது. இப்பொதுக் கூட்டத்தில் குடும்ப சகிதம் கலந்து கொண்டு ஒத்துழைக்குமாறு உங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*- தமிழர் புனர்வாழ்வுக் கழகம், துலூஸ்.*

# உலகச் செய்திகள்

## வாக்குறுதிகளை நம்பி போரைக் கைவிட்ட அரபாத் மாபெரும் தவறிழைத்துவிட்டார்

### - ஷேக் அகமத் யசின் -

பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரிவுகளில் ஒன்றான Hamas இயக்க முக்கிய தலைவர் ஷேக் அகமத் யசின் கடந்த 30.01.1998 அன்று பிரெஞ்சுப் பத்திரிகையான 'லுமொன்ட்'-ற்கு பாலஸ்தீன சமாதான ஒப்பந்த சூழ்நிலை பற்றி சுருக்கமான பேட்டியொன்று அளித்துள்ளார்.

பேட்டி விபரம் வருமாறு,

கே. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு புத்துயிர் கொடுக்க வாஷிங்டனில் எடுக்கப்பட்ட இறுதி முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன. பாலஸ்தீனர்கள் என்ன செய்ய முடியும்?

பதில். சமாதானம் எனச் சொல்லப்பட்ட அந்தப் பேச்சுவார்த்தை மீது Hamas ஒரு போதும் நம்பிக்கை வைக்கவில்லை. அரபாத்துக்கு ஒரேஒரு தீர்வுதான் உண்டு. புனிதப்போரில் எம்முடன் இணைவது. வெற்று வாக்குறுதிகளை நம்பி ஆயுதங்களைக் கைவிட்ட அரபாத் மாபெரும் தவறிழைத்துவிட்டார். அரபாத்தின் முடிவுகளை நாம் எதிர்த்தோம். அரபாத்தை நாம் எதிர்க்கவில்லை.

ஒரு சிவில் யுத்தம் எம்மிடையே உருவாகவேண்டும் என எமது பொது எதிரி இஸ்ரேல் கனவு காண்கின்றது. சகோதரப் போரில் இறங்கி எதிரிக்கு மகிழ்ச்சியளிக்க நாம் விரும்பவில்லை. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியாது என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

சுதந்திரம் என்றும் சும்மா கிடைப்பதில்லை. அது போராடி மீட்கப்பட வேண்டியது. கோரமான எமது எதிரிக்கு நாம் பதிலளிக்க வேண்டியுள்ளது. எமது உரிமைகள் பெறப்படும்வரை எமது நிலங்கள் மீட்கப்படும் வரை, உடைந்து போன குடும்பங்கள் இணையும்வரை, சிறையில் உள்ள எமது உறுப்பினர்கள் விடுவிக்கப்படும்வரை, நாம் போராட வேண்டியுள்ளது. இராணுவ ரீதியான போரைத் தவிர வேறு மார்க்கம் இல்லை.

கே: தற்கொடைத் தாக்குதலால் அப்பாவி இஸ்ரேலியர் மீது தாக்குதல் நடாத்துகிறீர்களே?

பதில்: எமது அப்பாவி மக்கள் பற்றி? ஹெப்ரோனில் கொல்லப்பட்ட அப்பாவிகள் பற்றி? ஜெருசலேம் பள்ளி வாசலில் கொல்லப்பட்ட மக்கள் பற்றி? லெபனான் முகாமில் கொல்லப்பட்டவர்கள் பற்றி? மேலும் இத்தகைய பல அப்பாவிகள் கொல்லப்பட்டது பற்றி நாம் என்ன செய்யவேண்டும் என எதிர் பார்க்கிறீர்கள்? எங்கள் வீடுகளை எதிரி உடைத்துக் கொண்டிருக்கின்றான். எமது நிலங்களை எதிரி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றான். கைகட்டி சும்மா இருக்கச் சொல்கிறீர்களா? அது நடக்காது. ஒருபோதும் நடக்காது. எமது சுதந்திரத்திற்காக இறுதிவரை போராடுவோம்.

பாலஸ்தீன தலைவர் அரபாத் எல்லா நாடுகளிடமும் பெரியவை, சிறியவை உட்பட உதவி கோரி இருக்கின்றார். எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

போருக்கு எல்லா வழிகளையும் கையாளுவோம். அப்பாவிகள் மீது தாக்குதல் நடாத்துவதை இஸ்லாமும் தடை செய்கிறது. எமது அப்பாவி மக்கள் தாக்கப்படாவிட்டால் நாமும் அப்பாவிகள் மீது தாக்குதல் நடாத்தமாட்டோம். அதுவரை போர் தொடரும்.

---

உயிருடனேயே கடலில் போடுவதற்கு இராணுவ விமானங்களைப் பாவித்தனர் என்ற செய்தி நீண்ட காலமாக 'கிசுகிசு'வாக இருந்து வருகின்றது.

(983011ஈ)

## மாயா இந்தியர்களுக்கு விசேட உரிமைகள் கிடையாது

### மெக்சிக்கோ ஜனாதிபதி

மெக்சிக்கோவின் ஆதிக்குடிகளான மாயா இந்தியர்களின் உரிமைகளுக்காக சப்பற்றிஸ்ரா கெரில்லாக்கள் போராட்டம் நடாத்தி வருகின்றார்கள்.

கடந்த மாதம் பட்டப்பகலில் 40-ற்கும் மேற்பட்ட இந்தியர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். பொலிசாருக்கு இவ்விடயம் தெரிந்திருந்தபோதும் கொலையை தடுக்க முயற்சி எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் ஆளும் கட்சியை சார்ந்த நகரபிதா ஒருவர் கொலைகள் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன் பின்னணியில் பத்திரிகைகளுக்கு பேட்டியளித்த மெக்சிக்கோ ஜனாதிபதி பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், மாயா இந்தியர்களுக்கு சுயாட்சி வழங்கக்கூடிய அரசியல் அமைப்பு திருத்தத்தை கொண்டுவர முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

(983011ஈ)

## உண்மையைச் சொன்ன கப்டன் சிறையில் விரைவில் ஆயுள் காலச் சிறை

1976 முதல் 1983 வரை ஆர்ஜென்டீனாவில் நிலவிய இராணுவ ஆட்சிக் காலத்தில் காணாமல் போன பல்லாயிரக் கணக்கானோர் இராணுவ ஆட்சியாளர்களால் கொல்லப்பட்டனர் என Tres Puntos என்ற பத்திரிகைக்கு பேட்டியளித்த ஆர்ஜென்டீனா இராணுவத்தின் கப்டனான அஸ்டிஸ் ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு 60 நாட்களுக்கு சிறை வைக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு விரைவில் ஆயுட் காலச் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பல்லாயிரக் கணக்கான அபிப்பிராய பேதம் கொண்ட அரசியல் எதிரிகளை சுட்டுக்கொன்ற இராணுவ ஆட்சியாளர்கள், மேலும் பல்லாயிரம்பேரை கல்லுடன் கட்டி





விரைவில்

ஐவன்




எங்கும் கிடைக்கிறது







Marketed & Distributed by
Ayngaran Limited
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
E-mail:
bhasky@aol.com

போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

## வங்கியிலெடுத்த பணத்துடன் ஐ.நா. அதிகாரியை காணவில்லை

ரஷ்யாவை அண்மித்த தீவான Ossetie இல் கடமையில் இருந்த Vincent என்ற 39 வயது ஐ.நா அகதிகள் பிரிவைச் சேர்ந்த பிரெஞ்சுப் பிரசை ஒருவரை கடந்த 29.01.1998 முதல் காண வில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலக தேவைகளுக்காக வங்கியில் பெருமளவு பணம் எடுத்து தன் வீட்டில் வைத்திருந்த இவரை இனம் தெரியாதோர் கடத்திச் சென்றுள்ளனர் என வேறு செய்திகள் தெரிவிக்கின்றன.

செச்செனியாவுக்கு அண்மையில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. (980210)

## பிரான்சில் வதிவிட அனுமதியற்றவர்கள் ஒரு இலட்சம் பேருக்கு விரைவில் வெளியேற்ற உத்தரவு

பிரான்சில் உள்ள வதிவிட அனுமதியற்றவர்களுக்கு வதிவிட அனுமதி வழங்கும் உள்நாட்டமைச்சரின் ஜுன் 1997 சுற்றறிக்கையின்படி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களில் ஒரு இலட்சம் பேரை நாட்டைவிட்டு வெளியேற்றும்படி கோரும் வெளியேற்ற உத்தரவு (IQF) விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக 24.01.1998 திகதியிட்ட லுமொன்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அவ்வாறு வெளியேற்றப்படும் ஒவ்வொருவருக்கும் 4500 பிராங் வழங்கப்படுமென அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. முன்னைய அரசு நாடு திரும்புபவர்களுக்கு 1300 பிராங் வழங்கியதை சுட்டிக் காட்டிய உள்ளூராட்சி அமைப்பு, தாம் 4500 பிராங் வழங்குவதாக தெரிவித்துள்ளபோதிலும், இவ் 4500 இல் ஒரு பகுதி நாட்டுக்கு திரும்பும்போதும் மீதி நாட்டுக்குச் சென்று இரண்டு மாதங்களின் பின்பும் மட்டுமே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக நினைவலைகளில்

## 30.01.1948

## மகாத்மாகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டார்



1869 இல் வியாபாரக் குடும்பத்தில் பிறந்த மோகன்தாஸ் கரம்சந்காந்தி 1915 இல் தனது சட்டத்தரணிப் பட்டப் படிப்பை பிரித்தானியாவில் முடித்துக் கொண்டார். சில காலம் சட்டத்தரணியாக தொழிலாற்றினார்.

இந்தியா மாநிலங்களாகவும், இனப் பிரிவுகளாகவும், மத ரீதியாகவும், சாதி ரீதியாகவும், மொழி ரீதியாகவும், சமூக தட்டு ரீதியாகவும், அரசியல் கட்சி ரீதியாகவும் பிளவுபட்டிருந்ததுடன் இந்தப் பிளவுபட்ட சூழ்நிலையைப் பயன்படுத்தி இந்தியாவை ஆண்டுவந்த காலனித்துவ பிரித்தானியாவை எதிர்த்து சாத்வீகப் போராட்டம் நடாத்தி இந்திய சுதந்திரத்திற்கு வித்திட்ட காந்தி 30.01.1948 அன்று இந்து மதத் தீவிரவாதியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஒன்றுபட்ட இந்தியாவை நேசித்த காந்தி மத மோதலால் பல்லாயிரக் கணக்கான அப்பாவிகள் கொல்லப்படும் சூழ்நிலையைக் கண்டு இஸ்லாமியர்களுக்கென பாகிஸ்தான் உருவாக உடன்பட்டார். இந்தியா உடைந்து போவதை விரும்பாத காந்தி சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப இந்த முடிவை எடுத்தார் என்பதை உணராத இந்துமதத் தீவிரவாதி ஒருவரால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவ்வருடம் இந்தியாவில் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் இந்து மதவாதக் கட்சி ஆட்சியைப் பொறுப்பேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**''நேற்றைய செய்தி இன்றைய வரலாறு**
**இன்றைய செய்தி நாளைய வரலாறு**
**வரலாறும் செய்தியும் வாழ்வியலின் வழிகாட்டிகள்''**

## பெண்ணுரிமை சங்கங்கள் போர்க்கொடி பெற்றோலுக்காக பெண்கள் விலைபோவதா?

ஆப்கானிஸ்தானில் பதவிக்கு வந்துள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கும் அமெரிக்க பெற்றோல் கம்பனியான UNOCAL இற்கும் இடையே ஒப்பந்தமொன்று கைச்சாத்தாகியுள்ளது.

பாகிஸ்தான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய மூன்று அமெரிக்க சார்பு நாடுகளால் மட்டும் அங்கீகரிக்கப்பட்டுள்ள தலிபன் ஆட்சியாளர்கள் அமெரிக்க நிறுவனத்துடன் 'எண்ணை அகழ்வு ஒப்பந்தம்' செய்யப்பட்டுள்ளதை அமெரிக்கா பாராமுகமாக இருப்பதை அமெரிக்க பெண்ணுரிமைச் சங்கங்களான National Organization For Women மற்றும் Feminist Majority ஆகிய சங்கங்கள் எதிர்த்துள்ளன.

இதற்காக இச் சங்கங்கள் கணினிச் செய்தி முகவரி (இன்ரநெற்) ஒன்றையும் ஆரம்பித்துள்ளன. (9830119)

## தாய்நாட்டை விட்டு வெளியேற யோங்மின் மறுப்பு

சீனாவில் ஜனநாயக போராட்டம் நடாத்தியமைக்காக 1979 இல் கைது செய்யப்பட்ட Qin Yongmin அண்மையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஜனநாயகப் போராட்டம் நடாத்தியவர்கள் சிறையில் இருந்து வெளியேறிய பின் அமெரிக்காவில் குடியேறும் வழக்கம் சீனாவில் உண்டு.

அண்மையில் விடுதலை செய்யப்பட்ட யோங் மின் அவ்வாறு வெளியேற மாட்டேன் என சீன பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளதோடு 'இது எமது போராட்டத்தை நலிவு படுத்த எடுக்கப்படும் முயற்சி எனவும் தெரிவித்துள்ளார்' (9830116)

## செச்செனியாவுக்கு கூட்டாட்சி சுதந்திரம் வழங்க ரஷ்யா ஆலோசனை

இனம் தெரியாத சக்திகளால் ஆயுத மயமாக்கப்பட்டுள்ள செச்செனிய இஸ்லாமிய தீவிரவாத சுதந்திரப்போராளிகளுக்கு விட்டுக்கொடுக்கும் பாணியில் மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி உரிமையை வழங்க ரஷ்யா தயாராகவுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

1996-ல் செச்செனிய போருக்கு முடிவு காணும் பொருட்டு செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தப்படி, செச்செனியாவை சுதந்திர குடியரசாக அங்கீகரிப்பது தொடர்பாக இழுபறி நிலை இருந்து வருகின்றது. (9830310)

## ஐ. நா. கட்டுப்பாட்டை ஏற்க மறுக்கும் ஈராக் மீது அமெரிக்க தலைமையில் தாக்குதல்?

அமெரிக்கப் பிரதிநிதி தலைமையிலான ஐ.நா வின் ஆயுத பரிசோதனைக் குழுவை ஈராக்கிய ஜனாதிபதி மாளிகைக்குள் அனுமதிக்க ஈராக் மறுத்ததைத் தொடர்ந்து ஈராக் மீது பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை நடாத்த அமெரிக்கா தலைமையிலான நாடுகள் திட்டமிட்டு வருகின்றன. அமெரிக்க நேச நாடுகளின் இம்முடிவை சீனாவும் ரஷ்யாவும் கடுமையாகக் கண்டித்துள்ளன.

கடந்தவாரம் சுவிற்சர்லாந்தில் ஆரம்பமான சர்வதேச வர்த்தக மாநாட்டிற்கு வருகை தந்திருந்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் திருமதி மடலின் அல்பிரைட்டுக்கும், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் பிறிமிக்சோவுக்குமிடையே இடம்பெற்ற ஈராக் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இருவரும் முரண்பட்டுக்கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஐ.நா. கட்டுப்பாட்டை தொடர்ந்து மீறும் இஸ்ரேலுக்கு அமெரிக்க நிதியுதவி அதிகரிப்பு

பாலஸ்தீனர் நிலங்களை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேல், ஆக்கிரமித்த இடங்களில் இருந்து வெளியேற வேண்டும்; பாலஸ்தீன அரசை ஏற்றுக்கொள்ள வேண்டும் போன்ற அனைத்து ஐ.நா. தீர்மானங்களையும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக மீறிவரும் இஸ்ரேலுக்கு நிதி வழங்கும் முக்கியமான நாடு அமெரிக்காவாகும்.

கடந்த 20 ஆண்டுகளாக 1.2 பில்லியன் டொலர் உதவியை பெற்றுவரும் இஸ்ரேலுக்கு அடுத்த 10 ஆண்டுகளில் இத்தொகை இரண்டு மடங்காகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (980312)

## தென்னாசிய பொருளாதார சரிவு மேற்குலக உல்லாசப் பயணத்துறைக்கு வரப்பிரசாதம்

தென் கிழக்காசியாவில் கடந்த சில மாதங்களாக நிலவும் பணப்பெறுமதிச் சரிவும் அதன் விளைவான பொருளாதார ஸ்திரமற்ற நிலையும் மேற்குலக உல்லாசப் பிரயாணிகளுக்கு மாபெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக XVII ஆவது உல்லாசப் பயணத்துறை சர்வதேச மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு யூலையில் உல்லாசப் பயணியாக 100 டொலருடன் சென்ற மேற்குலக உல்லாசப் பயணி, அதேஅளவு பணத்துடன் சென்றால் இரண்டு மடங்கு உல்லாசத்தை அனுபவிக்க முடியும் எனவும் அங்கு பெருமிதம் கொள்ளப்பட்டுள்ளது. (19982101201)

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம்–பிரான்ஸ்

**வருடாந்த பொதுக்கூட்டம்**

எதிர்வரும் மாசிமாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 1.30 மணிக்கு எமது கழக வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக தெரிவும் நடைபெற இருப்பதால் கழகத்தின் சகல அங்கத்தவர்களையும் எமது ஊர் மக்களையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இடம்: தமிழ்ச்சோலை மண்டபம்**
**26, Rue du Departement, 75018 Paris**
**Mo: Marx Dormoy, La Chapelle.**

- செயலாளர், குருநகர் பாடும் மீன் வி.கழகம்.

**திருத்த வேலைகள்**

DÉPANNEURS FRANÇAIS RÉUNIS

வீட்டுத் திருத்த வேலைகள், பெயின்ற், கார்பாஸ், கதவு, யன்னல், சோயான், சகல மின்சார வேலைகள், சோடியா, சோவா, றிடோ மெற்றலிக், மொக்கற், ரெலிவிஷன், வீடியோ நல்லாத் திருத்த வேலைகளும் குறைந்த செலவில் துரித கதியில் செய்து தரப்படும். 'Devis' உம் பற்றுச்சீட்டும் (விரும்பினால்) வழங்கப்படும்

தமிழில்: ராஜன் (01 42 92 04 66)
நேரடித் தொடர்புகட்கு: 18, Rue Simart, 75018 Paris.

**வாணன் வாகன சேவை**



உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணப் போன்ற தேவைகளுக்குப்

Tel: 01 42 52 06 80 / 01 48 05 21 63 / 06 09 26 88 35

# ANNUAL FOOTBALL TOURNAMENT
## வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி
# 1998

**7 A SIDE KNOCKOUT**

**IN AID OF RAPID REHABILITATION & DEVELOPMENT PROJECTS**

**துரித புனர்வாழ்வு அபிவிருத்தித்திட்ட நிதிக்காக**

**LOCAL AND FOREIGN TAMIL CLUBS ARE PARTICIPATING A DAY TO "KEEP FREE"**

**SUNDAY 3 MAY 1998**

**DOUGLAS EYRE SPORTS CENTRE,**
**COPPERMILL LANE WALTHAMSTOW,**
**LONDON E17 7HE**

## From: 9A.M To: 9P.M

**ALSO**

* FOOTBALL(Under16)
* FOOTBALL (Under12) Under FLOODLIGHT
* NETBALL
* CHILDREN SPORTS

ADMISSION / அனுமதி £2.00
Refreshments will be served at minimal cost

*for further details please ring*
**0181-520 5876,**
**0181-521 0206,**
**0180-531 9104**

**For Raffle tickets please contact: 0181-5510 4010**

கடந்த 7 வருடங்களாக இவ்வுதைபந்தாட்டப் போட்டி மூலம் பெறப்படும் நிதி மூலம் தாயக மண்ணில் இன்னலுறும் எமது மக்களுக்கு ஆதரவு அளித்தது போல் இம்முறையும் பேராதரவு தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

---

SUN TV **தமிழ் ஒளி** RADIO ASIA

# சின்னத் திரையில் இவ்வாரம்

## *தினமும் உங்கள் சின்னத் திரையில்*

| | | | |
|---|---|---|---|
| 08.00 | தமிழ் ஒளி ஆரம்பம். | | இந்த நாள் நல்ல நாள் |
| | **Sun TV யின் மறு ஒலிபரப்பு** | | தினம் ஒரு திருக்குறள் |
| 12.00 | செய்தி நேரம் | 21.00 | செய்தி நேரம் |
| | **முன்னைய நாள் செய்தியின் மறு ஒலிபரப்பு** | | எமது பிரதான செய்தித் தொகுப்பு |
| | | 21.30 | திரை விருந்து |
| 12.30 | திரை விருந்து | 00.20 | தமிழ் ஒளி நிறைவு |
| 16.45 | பி.பி.சி.யின் தமிழோசை | 00.20 | தமிழ் ஒலி ஆரம்பம் |

# இவ்வாரம் வானலைகளில்

## தினமும் உங்கள் வானொலியில்

| | | | |
|---|---|---|---|
| 6.00 | ஆரம்பம் | 15.00 | செய்தித் தலைப்புகள் |
| 6.05 | பக்திப் பாடல்கள் | 16.00 | செய்தித் தலைப்புகள் |
| 8.00 | செய்தித் தலைப்புகள் | 16.45 | பி.பி.சி.யின் தமிழோசை |
| 8.05 | இந்த நாள் இனிய நாள் | 17.16 | கனடாவிற்கான ஒலிபரப்பு |
| 8.15 | தினம் ஒரு திருக்குறள் | 18.00 | கனேடிய ஒலிபரப்பு |
| 8.30 | ஐரோப்பிய வலம் | 20.00 | செய்தித் தலைப்புகள் |
| 9.00 | செய்தித் தலைப்புகள் | 21.00 | செய்தித் தலைப்புகள் |
| 10.00 | செய்தித் தலைப்புகள் | 21.30 | பிரதான செய்திகள் |
| 11.00 | செய்தித் தலைப்புகள் | 22.00 | ஐரோப்பிய வலம் |
| 12.00 | செய்தித் தலைப்புகள் | | |
| 13.00 | செய்தித் தலைப்புகள் | | |
| 13.30 | பிரதான செய்திகள் | | |

**நள்ளிரவு முதல் காலை 6.00 வரை கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள்.**

---

*ஈழமுரசு நடாத்தும்*

# இசை முரசு - 1998

## - சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி -

**1998-ம் ஆண்டுக்கான 'இசைமுரசு' சிறந்த பாடகர் தெரிவுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**பங்குபற்றுவோருக்கான விதிகள்:**

1. இதுவரை வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப்பாடல் தொகுப்புக்களில் இருந்து மாத்திரமே போட்டிக்கான பாடல் தெரிவு செய்யப்பட வேண்டும்.
2. போட்டியாளரின் தெரிவுக்காக இரண்டு பாடல்கள் அனுமதிக்கப்படும்.
3. இணைகுரல்பாடற்போட்டி, தனிக்குரல்பாடற்போட்டி என இருவகைப் போட்டிகள் நடாத்தப்படும்.
4. தனிக்குரல் பாடல்போட்டி, 14 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு எனவும், 14 வயதிற்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு எனவும் இரு பிரிவுகளாக பிரித்து நடாத்தப்படும்.
   **மேற்பிரிவு: 31.05.84 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.**
   **கீழ்ப்பிரிவு: 01.06.84 அன்றும் அதற்கு பின்னரும் பிறந்தவர்கள்.**
5. இணைகுரல் பாடற்போட்டிக்கு வயதெல்லை இல்லை. தெரிவு செய்யும் பாடல் இணைகுரல் பாடல்களாக இருத்தல் வேண்டும்.
6. முதற்சுற்றுப்போட்டியில் தெரிவான பாடகர்கள் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவர்.
7. இறுதிச் சுற்றின்போது, மேற்பிரிவிலும், கீழ்ப்பிரிவிலும், 1ம், 2ம், 3ம் இடத்திற்குரியோரும், இணைகுரல் போட்டியில் சிறந்த ஒரு இணையும் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.
8. மேற்பிரிவு முதலாம் இடத்தைப் பெறுபவர் சிறந்த பாடகராகத் தெரிவுசெய்யப்பட்டு 'இசை முரசு 98' இற்கான விருது வழங்கி சிறப்பிக்கப்படுவார்.
9. விண்ணப்பக் கட்டணமாக 100FF செலுத்தப்பட வேண்டும்.
10. விண்ணப்பம் செய்வதற்கான இறுதித் திகதி 28.02.98
11. விண்ணப்பம் செய்ய வேண்டிய முகவரி:
    கடித உறையின் மேல்முலையில் 'ISAI MURASU 98' எனக் குறிப்பிடவும்.
    EELAMURASU - 22 Rue Perdonnet, 75010 Paris.

**ஆர்வமுள்ள அனைவரையும் அழைக்கின்றோம்**

---

*ஈழமுரசு நடாத்தும்*

# இசை முரசு - 1998

## - சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி -

**விண்ணப்பப் படிவம்:**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்: ..............................
2. பிறந்த நாள்: ..............................
3. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர்: ..............................
4. முகவரி (பிரஞ்சு மொழியில்): ..............................
   ..............................
5. தொலைபேசி எண்: ..............................
6. பங்குபற்றும் போட்டி: **தனிக்குரல் பாடற்போட்டி / இணைகுரல் பாடற்போட்டி**
7. தனிக்குரல் பாடற்போட்டியாயின்
   I பங்குபற்றும் பிரிவு: **மேற்பிரிவு / கீழ்ப்பிரிவு**
   II பாடவிரும்பும் பாடலின்பெயர்: 1 ..............................
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..............................
   III பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 ..............................
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர் ..............................
8. இணைகுரல் போட்டியாயின்,
   I இணைந்து பாடுபவர் பெயர்: ..............................
   முகவரி: ..............................
   II பாடவிரும்பும் பாடலின் பெயர்: 1 ..............................
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: ..............................
   III பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 ..............................
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர் ..............................

*நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் அதனை முழுமனதுடன் ஏற்பேன் என்றும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.*

1 ____________________ ____________________

2 ____________________ ____________________

பாதுகாவலரின் ஒப்பம் விண்ணப்பதாரரின் ஒப்பம்

# காயத்திரி தொலைத்தொடர்பு நிலையம்
# Gayathree Mobile Communication LTD

குறைந்த செலவில் சர்வதேச தொலைபேசி தொடர்புகளுக்கும் மலிவான அழைப்பு அட்டைகளுக்கும் உங்கள் நினைவில் இருக்கவேண்டியது காயத்திரி தொலை தொடர்பு நிலையம்

NEW



**MOTOROLA MEMPHIS**
இலவசம்
இணைப்பு மட்டும்
£35



**NOKIA 1620**
இலவசம்
இணைப்பு மட்டும்
£35



**ERICSSON GF768**
£149.99
இணைப்பு:
£25



**ERICSSON PH388**
£44.99
இணைப்பு:
£20



**NOKIA 8146**
£89.99
இணைப்பு
தற்போது இலவசம்



**STAR TAC MOTOROLA**
£149.99
இணைப்பு:
£25

: undefined
DING COMMAND: Binar
:
-savelevel-

**Leather Case £7.99; - Car Chrger £7.99 - Hand Free set £99.99**

விசேட நத்தார் விலை குறைப்புகளுக்கு தொலைபேசியில் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும். (20-ம் திகதி முதல் 30-ம் திகதி வரை மட்டுமே)

### சர்வதேச அழைப்பு கட்டணங்கள்

| | |
|---|---|
| சிறீலங்கா | - 59 p. நிமிடத்திற்கு |
| பாகிஸ்தான் | - 57 p. நிமிடத்திற்கு |
| இந்தியா | - 49 p. நிமிடத்திற்கு |
| பங்களாதேஷ் | - 60 p. நிமிடத்திற்கு |
| அமெரிக்கா | - 20 p. நிமிடத்திற்கு |
| சோமாலியா | - 70 p. நிமிடத்திற்கு |
| ஈகுவடோர் | - 49 p. நிமிடத்திற்கு |
| கொலம்பியா | - 45 p. நிமிடத்திற்கு |

ஏனைய நாடுகளுக்கும் குறைந்த கட்டணமே

Best call card 20%
First Telecom 20% கழிவு

இணைப்புக்களுடன், இணைப்பு இல்லாமல்!

**GMS & Voda**

**Mobile 0958632428**
**Fax 0181 552 9313**

**One 2 One**

*291A High Street North, Manor Park E 12* **Tel: 0181 552 9113**

Pub

# B.K. Quality Food & Wine



இந்திய, இலங்கை மளிகைப் பொருட்கள், உடன் மரக்கறி வகைகள், பதனிடப்பட்ட தரமான கடல் உணவு வகைகள், இறைச்சி வகைகள்

HALAL حلال

மற்றும் உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்தையும் நீங்கள் மலிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.



# B.K. Quality Food & Wine

உங்களை இன்பமூட்டும் இசை கானங்கள் அடங்கிய CD, ஓடியோ கசட்டுக்களும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

**236 London Road, West Croydon CR0 2TF.**
**Tel: & Fax: 0181-681 7485**

# கவிதை பாடுவோம்

## மகாகவி பாரதியார்

'அச்சமில்லை அச்சமில்லை'-என
ஆவேசமா பாடியதுயாரோ?
'ஆடுவோமே பள்ளு பாடுவோமே' - என
ஆனந்தக் கூத்தாடியது யாரோ?
இரும்பைக் காய்ச்சி உருக்கி
எந்திரங்கள் செய்யச் சொன்னது யாரோ?
துரும்பைப் போல மதித்து வெள்ளையரைத்
தூக்கி எறிஞ்சது யாரோ?
'மாகாளி' மகிமை பற்றிக்
கூறியது யாரோ?
'மனதிலுறுதி வேண்டுமென்று'
ஓதியது யாரோ?
பாப்பாவுக்கு பாட்டு ஒண்ணு
பாடியது யாரோ?
பாரதமே போற்றும் நம்ம
பாரதியாரே! 'மகாகவி' பாரதியாரே!!



- கருணை மஞ்சுளா,
நெல்லை, தமிழ்நாடு.

# உங்களுக்குத் தெரியுமா?

**1. உலகத்தில் எத்தனை வகையான உயிரினங்கள் வாழ்கின்றன?**

மனிதன் உட்பட முலையூட்டி இனங்கள் 5,000 உள்ளன. பறவைகள் மட்டும் 15,000 வகை உள்ளன. 3,000 வகையான பாம்புகளும் 300 வகையான ஆமைகளும் உள்ளன. இவற்றைத் தவிர முள்ளந்தண்டுள்ள விலங்குகள், கடல் வாழ்வன உட்பட 100,000 எண்ணிக்கையுள்ள இனங்களும், நண்டு, இறால் வகைகள் 20,000 உம் உள்ளன. இவற்றைவிட ஒருகல; பல கல உயிரினங்கள் 15,000 வகைகள் உள்ளன. ஆனால் இவற்றை எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளி முன்னணி வகிப்பவை பூச்சி இனங்களே. இவைகளில் 750,000 வகைகள் பூமியில் வாழ்கின்றன.


**2. பூமியின் மிகமிக அரிதான உயிரினம் என்னவாக இருக்கிறது?**

உலகத்திலேயே மிக அரிதான உயிரினம் Tenrec வகையிலடங்கும் நிலத்தை தோண்டி வாழும் சிறிய பூச்சியாகும். இவை கூடுதலாக மடகஸ்கார், மற்றும் இந்து சமுத்திரத்தில் உள்ள தீவுகளில் வாழ்கின்றன.

**3. மழைபெய்த பின்பு ஏன் மண்புழுக்கள் வெளி வருகின்றன?**


மழைபெய்த மகிழ்வை கொண்டாட வெளிவருகின்றனவோ!

அவை வாழும் வளைகள் நீரால் நிரம்புவதால் பயத்தில் வெளிவருகின்றனவோ!




இல்லை. அப்படியாயின் மண் புழு நீருக்கு பயந்ததல்ல. அவற்றால் நீண்ட காலம் வாழ முடியும். உண்மையில் அவற்றின் தோல் உலர்ந்தால் அவை இறந்து விடும். மழை பெய்யும் போது, மண்ணில் உள்ள சில இரசாயனப்பொருட்கள் மழை நீருடன் சேர்ந்து காபோனிக் அமிலத்தை உருவாக்குகின்றன. இந்த அமிலம் மண் புழுக்களின் தோலினூடாக ஊடுருவி இவற்றைக் கொன்றுவிடும் தன்மையுடையது. பாவம் தீங்கேதும் அறியா மண்புழுக்களுக்கு இப்படியும் ஒரு சோதனையா!

- ம.லதா




# அறிந்துகொள்ளுங்கள்

## அஞ்சலகம் தோன்றியது எப்படி?




நாம் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்வதற்கு இன்று எத்தனையோ நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள் வந்துவிட்டன. தொலை பேசி, தொலை நகல், படநகல்கள், தொலை வழிக்காட்சி, இன்டர் நெட் எனப்படும் உலகம் தழுவிய செயற்கைக்கோள் கணிப்பொறி தொடர்பு இப்படி இன்னும் இன்னும்... அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனால், இந்த நவீன கண்டு பிடிப்புகளுக்கெல்லாம் முன்னோடி கடிதப் போக்குவரத்துதானே? அழகு தமிழில் அதை 'அஞ்சல்' என்று அழைக்கும் நாம், அது தோன்றிய கதையை அறிந்து கொள்ளாமல் இருந்தால் எப்படி?


கடிதங்களையும், செய்திக்கோவைகளையும் அனுப்பும் முறை, முதன் முதலில் ரோமாபுரியில் உள்ள பெர்சியாவில்தான் தொடங்கியது. அஞ்சல் முறையை தொடக்கத்தில் அரசாங்கம் மட்டுமே பயன்படுத்தி வந்தது.

பின்பு 15-ம் நூற்றாண்டில் அதை பல்கலைக் கழகங்களும், வியாபார நிறுவனங்களும் பயன்படுத்த தொடங்கின.

1609-ல் இங்கிலாந்து நாட்டை, பிரிட்டிஷ் அரசர் எட்டாம் ஹென்றி ஆட்சிசெய்த போது அரசு அஞ்சலகம் ஒன்று செயல்பட்டு வந்தது. இதில் பொது மக்கள் கடிதங்கள் அனுப்ப முடியாது. ஆனால், 1680-ம் ஆண்டு இங்கிலாந்தின் தலை நகர் லண்டனில், ஒரு வியாபாரி 'பென்னி போஸ்ட்' (Penny Post) என்ற பெயரில் தனியார் அஞ்சலகம் தொடங்கினார். பென்னி என்பது இங்கிலாந்தின் நாணயமாகும். 'இவர் ஒரு கடிதம் அனுப்ப ஒரு பென்னியை கட்டணமாக வசூலித்தார். 'பென்னிபோஸ்ட்' டுக்கு பொதுமக்களிடம் ஆதரவு பெருகியது. பென்னி போஸ்ட்டின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்டது இங்கிலாந்து அரசாங்கம். எனவே, 1801-ல் அரசு அதை தனது கட்டுப்பாட்டின் கீழ், கொண்டு வந்தது. அதன் பிறகு 1840-ல், அஞ்சல் தலைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அஞ்சல் துறை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்துவிடப்பட்டது. தற்போது எல்லா நாடுகளும் பின்பற்றி வரும் அஞ்சல் துறைக்கு, இங்கிலாந்தின் 'பென்னி போஸ்ட்' அஞ்சல் முறையே முன் மாதிரியாக உள்ளது.

- கொ. அண்ணாச்சி.

# காண்டா மிருகம்



நிலத்தில் வாழும் மிகப்பெரிய மிருகங்களில் காண்டாமிருகமும் ஒன்று. உலகில் ஐந்து வகைக் காண்டா மிருகங்கள் உள்ளன. அவற்றில் மூன்று வகை ஆசியாவிலும், இரண்டு வகை ஆபிரிக்காவிலும் உள்ளன. இந்தியாவில் வசிக்கும் ஒற்றைக்கொம்பு காண்டா மிருகம் ஆசிய வகைக்காண்டா மிருகங்களில் மிகப் பெரியது. நேபாளம், இந்தியாவில் உள்ள மேற்கு வங்கம், அசாம் ஆகிய காடுகளில் மட்டும் தான் இவை காணப்படுகின்றன. காண்டாமிருகங்களுக்கு தட்டையான உடலும் பருத்த கால்களும் உள்ளன. இவற்றிற்கு ஒன்று அல்லது இரண்டு கொம்புகள் உண்டு. இதன் தோல், மிகக் கடினமானதாகவும் மடிப்பு மடிப்பாகவும் காணப்படும். இவை ஐந்து அடி உயரம் வரை இருக்கும்.

எனினும் துப்பாக்கிக் குண்டோ, கத்தியோ பாய்வதை இதனால் தடுக்க முடியாது. மிகவும் பயங்கரமாகத் தோற்றமளிக்கும் இந்த மிருகம் ஒரு சைவப்பிராணி. புல், இலை, வேர், பழங்களை இரவில் சாப்பிடும். பகலில் ஓய்வு எடுக்கும். தண்ணீரிலோ சகதியிலோ படுத்துக்கிடக்கும். இதன் தோலில் வியர்வை சுரப்பிகள் கிடையாது. இவை கடுமையாக வேட்டையாடப்பட்டு வருவதால் காண்டா மிருகங்களின் எண்ணிக்கையும் வேகவேகமாகக் குறைந்து வருகிறது. காண்டாமிருகத்தின் ஒவ்வொரு பகுதியும் மருத்துவ சக்தி கொண்டது. இதனாலேயே இவை கடுமையாக வேட்டையாடப்படுகின்றன.

- ஜெ. ஜெகசோதி, நோர்வே

# சினிமா முற்றம்

பிள்ளைகளே!

சினிமா என்றதும் உங்கள் எல்லோருக்கும் மிகுந்த ஆர்வமாகவும் ஆசையாகவும் இருக்கும். சிறுவர்களுக்கான ஏராளமான திரைப்படங்கள் அவ்வப்போது வெளிவந்து திரைகளில் ஓடும். நீங்கள் கல்வி பயிலும் பாடசாலை ஊடாக நீங்களும் கூட சில படங்களை சென்று பார்த்திருப்பீர்கள். தொலைக்காட்சியிலும் நீங்கள் 'கார்ட்டூன்' படங்களை ஆர்வமுடன் பார்ப்பீர்கள். விஞ்ஞான வளர்ச்சி வேகமாக அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில் திரைப்படங்களும் பிரமாண்டங்களையும், அதிசயங்களையும் கொண்டு வெளிவந்துகொண்டிருக்கின்றன. சில திரைப்படங்கள் சிறுவர் இயல்பு நிலைகளை சித்தரிக்கும் நல்ல கதையம்சம் கொண்ட படங்களாகவும் வெளிவருகின்றன.

பிள்ளைகளே! பெரியவர்கள், அல்லது பாடசாலைகள் ஊடாக சிறந்த சிறுவர் படங்களை தெரிவு செய்து அவற்றை சென்று பார்வையிட முயலுங்கள். 'சினிமா முற்றம்' ஊடாக சில படங்களை நாங்களும் அவ்வப்போது உங்களுக்கு அறிமும் செய்கிறோம்.

# தமிழ் படிப்பது அவசியமா?

நாங்கள் வசிப்பது டென்மார்க்கில்! ஆதலால் டெனிஸ் மொழியைப் படித்தல் அவசியம். ஆனால் நம் தாய்மொழியான தமிழை மறத்தல் கூடாது. பெற்றோர்கள் தம் பிள்ளைகள் தமிழ் படிக்கிறார்கள்தானே என்று எண்ணி, வீட்டில் தமிழ் சொல்லிக் கொடுக்காமல் இருத்தல் கூடாது. தமிழ் வகுப்பில் படிக்கிற பாடத்தை வீட்டிலும் படிக்க வேண்டும். அப்படி என்றால்தான் பிள்ளைகள் நன்றாகத் தமிழ் கதைப்பார்கள். வாசிப்பார்கள்.

தமிழை வீட்டில் அதிகம் சொல்லிக்கொடுக்க வேண்டும். ஏனென்றால் வாரத்தில் ஐந்து நாட்கள் பாடசாலையில் டெனிஸ்தான் கற்கிறோம். தமிழை வாரத்தில் இரண்டு நாட்கள்தான் படிக்கிறோம். நாங்கள் இங்கே கேட்பது, பார்ப்பது எல்லாமே 'டெனிஸ்'தான். வீட்டில் கொஞ்ச நேரம்தான் தமிழைக் கேட்கிறோம். ஒருநாள் நாங்கள் தாய் நாடு போவோம். அங்கு டெனிஸ் கதைக்க முடியாது. தமிழ்தான் கதைக்க வேண்டும்.

**அதனால் தமிழ் படிப்பது அவசியமே!**

- ஆதிரை, டென்மார்க்.




# பேனா முனையால் போர் தொடுத்த முதன்மைப் பெண் பத்திரிகையாளர்

## 'ஸாரா ஜோசப்பாஷேல்'

அமெரிக்காவில் பல கீர்த்தியும் மேன்மையும் மிக்க பெண் பத்திரிகையாளர்கள் தோன்றியிருக்கின்றனர். இவர்களிற்கெல்லாம் முன்னோடியாக விளங்கி பேனா முனையில் ஒரு யுத்தத்தையே ஆண்களுடன் நடத்தியவர் தான் 'ஸாராஜோசப்பாஷேல்'. 1828-ம் ஆண்டு தனது 40-வது வயதில் கணவனை இழந்துவிட்ட இவர் தன் குழந்தைகளைக்காக்க பத்திரிகைத் தொழில் ஆரம்பித்தார். முதன் முதலாக சிறு லேடீஸ் மகளினிற்கு ஆசிரியராகப் புகுந்தவர், அன்றுதொட்டு இறுதிவரை தன் எழுத்தால் நிகழ்த்திய புரட்சி கொஞ்சமல்ல. கிட்டத்தட்ட ஒவ்வொரு குடும்பப் பெண்ணிற்குமாக அவர்கள் கணவர்களுடன் நடத்திய எழுத்தாலான போராட்டம் எல்லோரையும் திகைக்க வைத்தது. 'முதலில் பெண்கள் சம்பாதிப்பதை ஏன் பிடுங்கிக் கொள்கிறீர்கள்?' என ஆண்களிடம் சண்டை போட்டார். 'சமயலறை என்ன பெண்களின் நிரந்தர வசிப்பிடமா? எனத் தட்டிக்கேட்டு, ஆண்களும் வீட்டு வேலையில் சம அளவு செய்யத் தான் வேண்டுமென அதட்டிக் கூறினார். சமையலறையில் நின்று வதங்கியே சாகிறாளே அங்கு ஆரோக்கியக் கேடாக இருக்கிறதே; அதனால் புதிய அமைப்பில் வசதியாக வீட்டைக் கட்டுங்கள் என வாதாடினார். அதற்கான மாதிரிகளையும் தானே தயார் செய்து பத்திரிகைகளில் வெளியே விட்டார். ஏன் சில இடங்களில் முன் சென்று கட்டியும் கொடுத்தார். பொருளாதார ரீதியில் பெண்கள் பின்தள்ளப்படுவதைக் கண்டு கொதித்தெழுந்தார். உலகப் பெண்களிற்கெல்லாம் அழைப்புக்கொடுத்தார். இதோ பாருங்கள் தோழிகளே! உங்கள் ஓய்வு நேரத்தில் ஏதோ ஒரு சிறு தொழிலைச் செய்யுங்கள். அதன் வருமானத்தை தனியாக உங்கள் இடுப்பில் முடியுங்கள் என்றார். ஒருமுறை மேன்மையான நினைவுச் சின்னம் ஒன்று கட்டியெழுப்பிய அரைவாசியில் கைவிடப்பட்டு இருக்கவே, அதை சவாலாக இருகரத்தில் பொறுப்பேற்றார். இன்னும் பல பெண்களை இணைத்து மொத்தத்தில் பெண்களின் உழைப்பாலேயே அச்சிலைக்கு முழுவடிவம் கொடுத்தார். அது மட்டுமல்லாது, வர்த்தகத்துறையில் பலவந்தமாக பெண்களைப் புகுத்தினார். மருத்துவத்துறைக்கும் மகளிருக்கும் இடம் தரவேண்டுமென வாதாடினார். இதைக்கேட்ட ஆண்கள், பெண்களால் இவ்வளவு திறமையாகச் செயல்பட முடியாதென எதிர்ப்புக்குரல் கொடுத்தனர். இதைக்கேட்ட 'ஸக்ரா' கிளர்ந்தெழுந்தார். ஆண்களை பார்த்து, 'என்ன பெண்களின் திறமையை உங்களால் சகிக்க முடியவில்லையா? மிகவும் நல்லது. நீங்கள் முழுமையாக இத்துறையை விட்டு விலகிக்கொள்ளுங்கள் அவர்களே உங்களிலும் பார்க்க திறமையாகச் செய்வார்கள் என வாயை மூடுவித்தார்.

கிட்டத்தட்ட அமெரிக்கப் பெண்களிற்கெல்லாம் அவர் ஓர் உற்ற தோழியாக விளங்கினார். நாளாந்தம் இவரிடம் கடிதம் மூலம் ஆலோசனை கேட்ட பெண்கள் ஏராளம். அதுமட்டுமல்லாது அவர் குழந்தைகளுக்கு எழுதிய கதைகளும் கவிதைகளும் என்றுமே மறக்க முடியாதவை. 'மேரி ஹாட் ஏ லிட்டில் லாம்ப்' என்ற அழகான பாடலை எல்லோருமே மறக்க முடியாதல்லவா? அதனை எழுதிய பெண்மணி இந்த ஸாரா ஜோசப்பாஷேல்தான். இறுதியில் தன் 90-வது வயதில் பத்திரிகை வாயிலாக எல்லாப் பெண்களிடமுமே விடைபெற்றுக் கொண்டார்.

'பெண்களே! என்னாலான கடமையை நான் உங்களிற்கு செய்துவிட்டேன். எனக்கு சாவு அழைக்கிறது. நான் அமைதியாக இளைப்பாறப் போகிறேன். நான் சொன்னதை மறந்து விடாமல் தொடர்ந்து போராடுங்கள்' என்று அன்புடன் வேண்டுகோள் விடுத்தார். அதன்பின் அவரின் வாக்குப்போலவே சில நாட்களிலேயே இறந்தும் விட்டார். ஆனால் எம் இதயங்களில் மட்டும் அவர் இன்னும் வாழ்ந்து கொண்டேயிருக்கிறார்.

# தனியாகச் செல்லத் தயக்கமாக உள்ளதா? தைரியமாய் தற்காப்புக் கலையைப் பயில்வீர் !

## – 'எஸ்தர்' –

பொதுவாகப் பெண்கள் விளையாட்டில் விரும்புவது மென்மையான முறையில் பயிலக் கூடியதும், நாகரிகம் மிக்கதாகக் கருதப்படும் தற்போதைய நவீன விளையாட்டுக்களையும் தான் என்பது எல்லோரினதும் பொதுவான அபிப்பிராயம். ஆனால், 'அவ்வாறில்லை எம் ஆதிகால விளையாட்டையும் ஆர்வமாய் கற்க வேண்டும்' என்கிறார் 'எஸ்தர்' என்ற மூன்று குழந்தைகளின் தாயார் ஆம்! எஸ்தர் இன்று இந்தியாவின் சிறந்த முதல் பெண் சிலம்பாட்ட வீராங்கனை என்ற பெருமையை தன்னகத்தே வைத்திருக்கிறார். ஆரம்பத்தில் மாநிலப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிவாகை சூடியவர் தற்போது அகில இந்தியப் போட்டியிலும் வென்று சிலம்பு கற்றுகொடுக்கும் 'மாஸ்டர்' அந்தஸ்த்தை எட்டியுள்ளார். இதைப் பற்றிக் குறிப்பிடும் எஸ்தர், 'நான் 5 வயதிலிருந்தே சிலம்பாட்டம் கற்கத் தொடங்கிவிட்டேன். சிலம்பத்தில் மொத்தம் 48 வகை உள்ளன. இதில் 40 வகை சண்டை எனக்குத் தெரியும். அதிலும் தற்காப்புக் கலையில் முக்கியமான வர்மக்கலை கூட தனக்குத் தெரியும்' என்பவர், திருமணத்தின் பின் சில காலமாக நிறுத்தியிருந்த தன் சிலம்பக் கலையை இன்று பல சிறுவர் சிறுமியர்களிற்கும் கற்றுக்கொடுத்து வருகிறார். அது மட்டுமா இவரது கணவரும் கூட இன்று சிலம்பத்தில் இவருக்கு மாணவர்தான். மனைவியிடம் சிலம்பங்கற்றுக் கொண்டே அவரை ஊக்குவித்தும் வருகிறார்.

இயல்பில் இவரது தோற்றம் மென்மையானதாகக் காணப்படுவதால் பல பேர் இவரை வீதியில் ஏனைய பெண்களைப் போல் எண்ணி கிண்டல் செய்து கொண்டு தர்ம அடி வாங்கியிருக்கிறார்கள். அண்மையில் கூட 2 இளைஞர்களிற்கு கொடுத்த அடியில் ஒருவருக்கு தோள்பட்டையே கீழ் இறங்கி விட்டதாம். பின் வேதனை தாங்காது அவர் கத்திய கத்தில் இவரே இரக்கப்பட்டு தோளை மீண்டும் சரி செய்து விட்டார் என்று பெருமையுடன் கூறும் எஸ்தர் சொல்கிறார், 'என்னைப்போல எல்லாப் பெண்களுமே சிறிதளவாவது தற்காப்புக் கலையைக் கற்றால் ஏன் தைரியமாக வெளியே செல்ல தயங்க வேண்டும்' என்று ஆகவே பெண்களே! எஸ்தரைப் போல் 40 வகை சண்டை தெரியாவிடினும் உங்களின் தற்காப்புக்கு ஓரிரு வகையாவது பயிலுங்களேன்.

# வரதட்சணை மேல் கொண்ட வாஞ்சையால் வந்தவளையே தூக்கிலிட்ட கொடூரக் கணவன்

சீதனக் கொடுமையால் நாளாந்தம் எமக்குத் தெரிந்தும் அல்லது தெரியாமலோ எத்தனையோ பெண்கள் இறந்த வண்ணமே இருக்கின்றனர். இவர்களின் பட்டியலில் அண்மையில் இணைந்திருப்பவர் நாகம்மாள் என்ற இயற்பியல் பேராசிரியர். இவர் தனது கணவனான கணிதப் பேராசிரியரான முனியப்பனாலேயே படுக்கையறையில் தூக்கிலிடப்பட்டுள்ளார். ஆரம்பத்திலிருந்தே வரதட்சணை காரணமாக குடும்பத்தினுள் சண்டைகள் தோன்றியுள்ளன. இதனால் இருவருக்குமிடையே விரிசல் ஏற்படவே முனியப்பன் ஈரோடு உப நீதி மன்றத்தில் விவாகரத்து வழக்கைத் தொடர்ந்தார். இதற்கிடையே 01.07.82 இல் திடீரென நாகம்மாள் தூக்கில் தொங்கினார். இவரது உடலைக் கைப்பற்றிய பொலிசார் இவர் தற்கொலைதான் செய்துவிட்டார் எனக்கூறி பிரேதப் பரிசோதனையை முடித்துவிட்டனர். ஆனால் நாகம்மாளின் சகோதரரான பூசப்பன், 'இது தற்கொலை இல்லை. கொலை!' யென மீண்டும் பொலிசில் புகார் செய்தார். இவர் மட்டுமல்லாது கல்லூரி பேராசிரியைகளும் மற்றும் பல பெண் அமைப்புக்களும் பல போராட்டங்களை நடத்தி உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு மனுக்கள் அனுப்பினர். இதைத் தொடர்ந்து சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சத்தியதேவ் உத்தரவின் பேரில், மாநில குற்றப் புலனாய்வுத்துறை (சி.பி.சி.ஐ.டி) இன்ஸ்பெக்டர் வெங்கடாசலம் மீண்டும் விசாரணையைத் தொடர்ந்தார். புதைந்த மர்மங்கள் வெளிக்கு வந்தன. இரண்டாம் தரம் பெறப்பட்ட பிரேதப் பரிசோதனை அறிக்கையில் நாகம்மாள் கொலைதான் செய்யப்பட்டார் என்று துல்லியமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் முனியப்பன் மீண்டும் கைது செய்யப்பட்டு கோவை நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனைக் கைதியாகச் சிறையில் தள்ளப்பட்டார். 5 வருடம் சிறையில் இருந்தபடியே முனியப்பன் தன் வழக்கை மீள் பரிசீலனை செய்ய வேண்டியதால், தற்காலிகமாக 'நிபந்தனை பிணையில் வெளியே வந்தார். ஆனால் மீண்டும் நாகம்மாளின் சகோதரரும் ஏனைய பெண் அமைப்புக்களும் போட்ட கூச்சலில் டில்லி உயர் நீதிமன்றத்திற்கே இவ் வழக்குச் சென்றுவிட்டது. அங்கு பலதரப்பட்ட முன்னணி வழக்கறிஞர்களின் விசாரணையில் முனியப்பன் தன் குற்றங்களை ஒப்புக்கொள்ள நேரிட்டது.



இன்று டில்லி நீதிமன்றம் ஏற்கனவே கோவை நீதி மன்றம் வழங்கிய ஆயுள்தண்டனையை உறுதி செய்து தீர்ப்பை வழங்கியுள்ளது. அதனால் மறுபடியும் கம்பி எண்ணும் முனியப்பன் இனி ஆயுள் கைதிதான்.

இவ் நாகம்மாளினைப் போல் இன்னும் எத்தனை பெண்கள் இவ்வாறு மறைவில் கொல்லப்படுகின்றார்களோ என பெண்களாகிய எமக்கு வேதனையும் ஆத்திரமும் பிறக்கிறது. உண்மையில் இக் கொலையை வெளிக்காட்டிய பெண் அமைப்புக்களும் பூசப்பனும் பெரிதும் உயர்ந்தவர்களே!

## வஞ்சனைப் பார்வையை ஏன் வஞ்சியரில் வைத்தாய்...

ஓ! எங்கள் சமுதாயமே!!
உன் வஞ்சனைப் பார்வையை - ஏன்
எம் வஞ்சியரில் வைத்தாய்?
உன் வரம்புகளை இட்டு - ஏன்
எம் இதயங்களை உடைத்தாய்?
காலம் அதன் கோலத்தில் இன்ப துன்பம் உள்ளதே
அதில் துன்பங்களை மட்டுமேன் - எமக்கு
சுமையாகக் கொடுத்தாய்?
கலாச்சாரம் காட்டும் கட்டுக்களெல்லாம்
கன்னிகைகள் எம்மீதா காணப்பட வேண்டும்...?
இல்லை - காலமது சொல்லும் கோசங்கள் எல்லாம்
காரிகைகள் எம்மீதா ஏவி கொள்ள வேண்டும்...?
போதும் இனிப் போதும் உன் போக்கற்ற நீதி..!
பொறுமையாய் இனியும் கேட்க எமக்கில்லை நீதி
எனியேனும் கொடுப்பாயா எமக்குச் சம நீதி - இல்லை
இறுதி வரை போர் தொடுப்போம் உன் முகத்தைத் தேடி.

வீடு

கதை: 8

# ஊனம் உடலில்தான்

'எடேய் அனுசன், என்னடா செய்யிறாய்?'

'வையடா வை. அங்க அந்தப் பனைக்குப் பின்னாலை ஒளியுறான்ரா.'

'டேய் என்னடா செய்யிறாய்.... செற்றிலை கதையன்ரா,'

'டேய்... டேய் பயப்பிடாதையடா. கையிலை குப்பியிருக்குத்தானே. கிட்ட வந்தாப் பிறகு ஏலாதெண்டால் கடிக்கலாம். யோசிக்காதை சுடு.... வை..... இலக்குப் பிசகாமல் வை.....!'

'ஐயோ... ஐயோ... எனக்குக் கொழுவிப் போட்டுதடா. என்னெண்டடா அண்ணையவையின்ரை முகத்தில முழிக்கப் போறன்.'

'எடேய் என்னை விட்டிட்டு, நீங்கள் முன்னுக்குப் போங்கோ. நான் இழுத்து இழுத்து எண்டாலும் 'பேசு'க்குப் போறன். ஏலாட்டால் குப்பியைக் கடிக்கலாம்தானே.'

அரைமயக்கத்தில் கட்டிலில் கிடந்தபடி இப்படிக்கூறும் வார்த்தைகளைக் கேட்க அஞ்சலாவிற்கு உடலெல்லாம் சிலிர்த்தது. காயப்பட்டவர்களின் புலம்பல்கள் அல்லது நோயாளர்களின் வேதனை முனகல்கள் அவளுக்குப் புதியவிடயங்கள் அல்ல. இரவு பகல் என்ற பேதமில்லாமல் மாறி மாறிக் கடமைக்குவரும் வைத்தியசாலைத் தாதியான அவளுக்கு, வேதனை முனகல்கள் பல நாளிலும் அலுப்பையே ஊட்டிவிடும். அதனால் இந்த வேலைக்கு ஏன் வந்தோம் என்று தன்னில்தானே எரிச்சல்பட்ட சந்தர்ப்பம் அஞ்சலாவிற்கு அதிகம். ஒரு சாதாரண நாளில் ஒரு சாதாரண நோயாளி இவ்வாறு உரத்த குரலில் முனகியிருந்தால் 'ஏன்தான் எங்களை இப்படி வதைக்குதுகளோ' என்று வெளிப்படையாகத் தன் எரிச்சலைக் கொட்டித் தீர்த்திருப்பாள். ஆனால் இன்றோ அரைமயக்கத்தில் அரற்றும் அவனின் கட்டில் அருகே போய், வாஞ்சையோடு அவனையே பார்த்தபடி நிற்கிறாள் அஞ்சலா. அவனது உதட்டின் அசைவுகளை நுணுகி ஆராய்ந்திட அவளது விழிகள் அவாவுகிறது. வார்த்தைகள் ஒவ்வொன்றும் இரும்பைக் கவரும் காந்தம் போல அவளை ஈர்த்து வைத்துவிட்டிருந்தது.


★ ★ ★

மீசை அரும்பத் தொடங்கியிருந்த இளமையின் ஆரம்பப் பருவம் அவனுக்கு. உதட்டிற்கு மேலே மெல்லியதாக ஒரு கறுப்புக்கோடு. எண்ணெய் காணாத வரண்ட தலைமுடி. சுமாரான தேகக்கட்டு, இறுகிப்போன முகத்தில் வேதனையின் வெளிப்பாடுகள் எதுவும் தெரியவில்லை. கழுத்திலே இப்போதும் தொங்கிக் கொண்டிருக்கிறது, கறுப்புக் கயிற்றுடன் ஒரு வெள்ளை நிறமான குப்பி. ஏதோ ஒரு நினைவில் அவனது ஆஸ்பத்திரி டிக்கட்டை எடுத்துப் பார்த்தாள் அஞ்சலா. பெயருக்கு நேரே ஹென்றி என்பதும், வயது 19 வருடம் என்பதும் எழுதப்பட்டு, அவனுக்குக் கொடுக்கப்பட்ட மருந்துகள் பற்றிய விபரங்கள் குறிக்கப்பட்டிருந்தது. அந்தக் குறிப்பேட்டில் சொல்லப்படாத பல செய்திகளை அவனது தோற்றமும் உதட்டசைவும் வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. உள்ளக் கிடக்கையை உடுப்பு புலப்படுத்தியது. எண்ண வேட்கையைக் குரல் தெரிவித்தது. இவனது பாசத்தின் எல்லை தேசமாக விரிந்துகிடந்தது. உணர்ச்சி நரம்புகளில் இயக்கம் முறுக்கேறியிருந்தது. ஒரு காலின் முழங்காலுக்குக் கீழான பகுதி முற்றாகத் துண்டிக்கப்பட்டு, பெரிய கட்டுக்கள் போடப்பட்டிருந்தது. தலையிலும் உடலின் பல பாகங்களிலும் ஆங்காங்கே திட்டுத் திட்டாக பல காயங்கள். அவனது வாழ்க்கைக் காலம் இன்னமும் நீடிக்குமா இல்லையா என்பதை உறுதியாகச் சொல்வதற்கு 24 மணி நேரம் பொழுது கடக்க வேண்டும் என டொக்ரர்கள் கொடுத்த கால அவகாசத்தின் இறுதிப் பகுதியை அவன் எட்டிக்கொண்டிருக்கிறான்.

தேசத்திற்காக காயம் பட்டவர்களிடம் ஒரு விதமான பரிவு கலந்த அனுதாபத்தை அஞ்சலா கொண்டிருந்தபோதிலும் கூட 'ஐயோ பாவம், ஏன் இதுகள் இப்பிடிக் கஷ்டப்படுகுதுகள்?' என்றுதான் பொதுவாக எண்ணிக்கொள்வாள். மயக்கம் தெளிந்து நன்கு பேசக்கூடிய நிலைவந்ததும் இவனுக்கு, இனிமேல் இப்படியான சண்டைகளுக்குப் போக வேண்டாம் எனப் புத்திமதி சொல்லித் திருத்த வேண்டும் என ஆலோசித்துக் கொண்டாள். இந்தச் சண்டையள் ஏன்? இந்தச் சண்டையில்லாட்டால் ஆருக்கு என்ன கெட்டுப்போகும்? என்பதுவே அவளின் சித்தாந்தம். ஒரு சுமாரான மத்தியதரக் குடும்பப் பின்னணியைக் கொண்ட அஞ்சலா, 'தானுண்டு, தன்பாடுண்டு' என்னும் குறுகிய சுயநலவட்டத்தின் உள்ளே கட்டுண்ட சாதாரணப் பெண்தான். ஆனாலும் இந்தத்தாதி வேலைக்கு வந்தமையால் பல போராளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளில் பங்குகொண்டதால், சுயநலம் மீறிய தியாகங்களின் அர்ப்பணிப்புகள் கண்டு அவள் சிலாகித்தது உண்டு.

பொருத்தப்பட்டிருக்கும் மின் விசிறிகள் சுழலவிடப்பட முடியாத நிலை. குளிரூட்டிகள் இயங்க முடியாத நேரம், சூரியக் கதிர்கள் கீற்றுக்களாய் எட்டிப் பார்க்கும். மழையோ கட்டில் மெத்தை வரை வந்து சுகம் விசாரிக்கும். தலையணியின் நாற்றம் வயிற்றைக் குமட்டும், ஆஸ்பத்திரி மணம் என்னவோ செய்யும். இத்தகைய சூழலில் இயங்கும் வைத்தியசாலையில் தாதிகள் மற்றும் சிப்பந்திகள், வைத்தியர்கள் வரவு மிகக்குறைவு. இதனால் அதிகரித்த வேலைப் பளுவின் சுமை தாக்க அப்பால் நகர்ந்து சென்றாள் அஞ்சலா. ஒருசில நாட்களும் நகர்ந்தன.

அவசர சமிக்ஞை ஒலி எழுப்பியபடி வந்த வாகனம் நின்று வைத்தியசாலையின் வெளி விறாந்தையில் தரித்தது 'ஸ்ரெட்சர்' விறாந்தைக்கு விரைந்துவர, வாகனத்திலிருந்து அவசரம் அவசரமாக இறக்கப்பட்ட ஒருவர் அவசர சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். வைத்தியசாலையின் கட்டிலொன்றில் படுத்திருந்த ஹென்றி இவற்றை அவதானித்தான். 'என்ன சம்பவம்? எங்கு நடந்தது? யார் யார் காயப்பட்டோர்?' என்பதை அறிய ஹென்றியின் மனம் அவாவியது. ஓரளவு மட்டுமே தேறியிருந்த உடல் நிலையிலும் கட்டிலில் எழுந்திருக்கவும் முடியாத



அந்நிலையிலும் அவன் செய்தி அறியத் துடித்தான். அதற்காக, கடமையிலிருந்த தாதியை அழைத்தான். அஞ்சலா அப்போதுதான் வந்திருந்தாள். காயப்பட்டு வந்தவரின், விபரங்களை அறிந்து வருமாறு வேண்டினான், அவன் அஞ்சலாவிடம். அவளோ 'உமக்கேன் அதெல்லாம். சும்மாயிரும். நீர் உம்மட உடம்பைச் சுகமாக்கிற வழியைப் பாரும்' என்றவாறாக மறுமொழி சொன்னாள். இதனிடையில் வைத்தியசாலையின் பிறிதொரு பகுதியில் தங்கிச் சிகிச்சை பெறும் அருண் ஓடிவந்து, 'ஹென்றி அண்ணை! நகுலன் அண்ணைக்குத் தலையில் செல்பட்டுப் பெரிய காயம்' என்றான்.

இந்தச் செய்தி கேட்ட மாத்திரத்தில் துள்ளி எழுந்த ஹென்றி கட்டிலிலிருந்து இறங்கி, மெதுவாக நகுலன் இருக்குமிடத்தை நோக்கி நகர எத்தனித்தான். அதற்காக அருணையும் துணைக்கு அழைத்து வைத்துக்கொண்டான். ஒரு கையை அருணின் தோளிலும் மறு கையால் கட்டில்கள் மற்றும் சுவர் போன்றவற்றையும் பிடித்துத் தாவி.... கெந்திக் கெந்தி தங்கியிருந்த 'வார்ட்டின்' முன் பகுதிக்கு ஹென்றி வந்துசேர சுமார் அரை மணி நேரம் வரையில் எடுத்திருக்கும். அதனிடையில் அது நிகழ்ந்துவிட்டது. ஆம்! நகுலனின் மரணச்செய்தி பரவத் தொடங்கிவிட்டது. 'அண்ணை நில்லுங்கோ நான் போய் முதல் பார்த்துட்டுவாறன்' என்றபடி அருண் ஓடிப்போக, ஹென்றி மரத்துப்போன மனநிலையில் ஒரு ஜன்னலின் கம்பிகளைப் பிடித்தபடி நின்றிருந்தான்.

திரும்பிவந்த அருண் செய்தியை உறுதிப்படுத்தினான். இதனிடையில் அங்குவந்த பொறுப்பாளர் ஹென்றியைக் கண்டுவிட்டார். உச்சக்குரலில் 'நீர் ஏன் இப்படி நடந்து திரிகிறீர். உம்மட இடம் எங்க. இதில நிக்க வேண்டாம் கட்டிலுக்குப் போம்' என்றவாறாக ஏசவும், அஞ்சலா ஒரு 'வீல் செயரை' த் தள்ளிவந்து ஹென்றியை ஏற்றிக்கொண்டு கடலுக்குச் சென்றாள். அருணும் அவளுக்கு உதவியாகச் செயல்பட்டு இளைத்துக் கொண்டிருந்த ஹென்றியைப் பார்த்து, 'ஏன் இந்த வேலை? அப்ப ஏன் அங்க போனனீர்? இங்க பாரும்! காலில இரத்தம் கொட்டுது.' என்று கூறியபடி அவள் ஹோர்லிக்ஸ் கலந்து கொண்டிருந்தாள். எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தான் ஹென்றி. ஹோர்லிக்ஸ் கிளாசை ஹென்றியிடம் நீட்டியபோதுதான், அவனது கண்களிலிருந்து நீர் தாரையாகப் பெருகுவதைக் கண்டாள். அஞ்சலாவுக்கு திக்கென்றது. மெல்லியதாக அடித்தொண்டையிலிருந்து வரும் நடுங்கிய குரலில், 'நகுலன் உங்களுக்குச் சொந்தக்காரரோ?' என்று கேட்டாள். 'எங்கடை சொந்தம் எல்லாம் இயக்கந்தானே?' என்று பதிலளித்த ஹென்றி, 'நான் மீண்டும் சண்டைக்குப் போக எத்தனை நாளாகும்?' என்று கேட்டான்.

'உம்மால் இனியும் சண்டைபிடிக்க ஏலுமெண்டு நினைக்கிறீரோ? என்றாள் அஞ்சலா அவனது காலைப் பார்த்தபடி. 'செயற்கை கால் பூட்டலாம்தானே! என்றவாறே உதடுகள் அசைய, வலது கையைத் தூக்கி ஆட்காட்டி சுட்டுவிரலை அசைத்துக் காட்டினான். 'துப்பாக்கியின் விசையை அழுத்த இதுபோதும்' என்ற குரல் வெளிப்பட, 'எத்தனை நாட்களில் எழுந்து நடக்கக்கூடியதாக இருக்கும் என்பதை மட்டும் நீங்கள் சொல்லுங்கோ' என்றான்.

அவனது சத்தியமான உணர்ச்சிகளின் முன்பு அஞ்சலா விக்கித்து நின்றாள். அஞ்சலாவின் மனம், செயற்கைக் கால்பூட்டியபடி ஹென்றி போர்க்களத்தில் நிற்கும் காட்சியைக் கற்பனை பண்ணிக்கொண்டது.



# எதுகை மோனை

## தேடியவை

### மீண்டும் டமார்...

'சி'னா லங்காவிலுள்ள போதி மரத்து ஞானவானுடைய புனித பல்லு இருக்கும் பெ..ரி..ய்..ய வீட்டுக்கு முன்னால் கடந்த வாரம் பெ..ரி..ய்..ய 'டமார்' சத்தம் கேட்டதல்லவா?

'டமார்' கேட்டாலும் கேட்டது. பெரிய அம்மணியாரின் சகபாடினால் [சு] தந்திர விழாவிற்கு ஏற்பட்ட பாதிப்புக்களை கொஞ்சம் சொல்லுமையா?

அஃதா[க்]கப்பட்டது,

'சி'னா லங்காவில் நிலைமை சுமூகம் எனக் காட்டுவதற்கு சந்திரிகா பரிவாரங்களின் கைகளில் இருந்த அஸ்திரங்களில் தற்போது முக்கியமானவை இரண்டு. முதலாவது தந்திரவிழா காட்சி

## டமாரும் சந்தி(சி)ரிகாவும்

கள் எல்லாருடைய நிலையும்... சந்தி சிரிக்கும்படி ஆகிவிட்டது. புனித பல்லு வீட்டடியில் தங்களது 50-வது [சு] 'தந்திர விழா'வினைக் கொண்டு+ஆட இருந்த வேளையில் இந்த 'டமார்' நடந்துவிட்டதனால் 'சி'னா மக்கள் பெரிய அம்மணியாரின் குழுவினருக்கு நல்ல வழிபாடு செய்து வைத்துள்ளனர். அதிலும் கைத்தடி வத்தையாருக்கு சிறப்பான விசேட வழிபாடு... 'கல்' கிடைத்துள்ளன. இவ்வாறான வழிபாடு தொடருமானால் தனது அரசியல் வழிக்கு பங்கம் ஏற்படும் எனப் பயந்து விட்ட கைத்தடியர் தனது பிரதி பா..து..காப்பு பதவியிலிருந்து விலகுவதான திருமுகத்துடன் மருமகளிடம் ஓடோடிச் சென்றுள்ளார். [யோவ்... தாண்டித்.. தாண்டி ஐயா!]

அட...டே... வத்தையாருக்கும் ரோசம் பொத்துக்கொண்டு வந்துவிட்டதாக்கும் என நினைத்து மோனையார் உங்களுக்காக 'புதினம்' தேடிய போது; அஃது ஒரு வெறும் நாடகம் என தெரிய வந்துள்ளது.

'புனித பல்லு மாளிகை எனது கண்ணுக்கு... கண் அதிலே இப்படி நடந்துவிட்ட தானது என்னை ரொம்பவும் தான் பாதித்துவிட்டது. எனவே அந்த 'டமாருக்கு' நான் பொறுப்பேற்று [!?] பதவியிலிருந்து விலகி விடுகிறேன் என நாடக வசனங்கள் சிலவற்றையும் அந்த வேளையில் அன்னார் வத்தையர் முழங்கியுள்ளார். ஆனாலும் மாமனாரின் பதவி விலகல் நாடகத்தில் மருமகளார் இன்னமும் இறுதி முடிவு எடுக்கவில்லையாம்.

சரி... சரி அந்தக் கதைகள் எல்லாம் இருக்கட்டும்... டமாரிகள், அடுத்தது யாழ் தேர்தல். ஆனால் அந்தோ! அந்த இரண்டிலுமே மண்விழுந்துவிட்டது.

குறிப்பாக 'தந்திரவிழா காட்சிகளில்' வெளிநாட்டுப் பெரிசுகள் கலந்துகொண்டால் சரிந்து போய் இருக்கும் எமது நாட்டின் 'கீர்த்தியினை[!?] ஒருவாறு நிமிர்த்தி விடலாம் என கணக்குப் போட்ட 'சி' னாத் தரப்பிற்கு, டமாருக்குப் பின்னர் அந்தப் பெரிசுகள் 'சி'னா லங்கா பக்கம் வராது போய் காலைவாரிவிடுவார்களோ என்ற அச்சம் தோன்றி விட்டது.

அதனால்தான் வெளிநாடுகளில் அமைந்திருக்கும் 'சி'னா லங்கா தூதரக பெரிசுகள் அந்நாட்டு பெரிசுகளிடம் விழாவிற்கு கட்டாயம் செல்லுமாறு 'இரங்கற் பதிகம்' தொலைபேசியூடாக பாடியுள்ளனராம்.

குறிப்பாக... ராணி வீட்டுப் பையன் கட்டாயம் எழுந்தருள வேண்டுமென 'சி' னா காரர்கள் நச்+நச் அரித்துள்ளனர்.. நீங்களே கைவிட்டால் நாங்கள் எப்படி? என்ற புலம்பல் வேறு.

இதற்கிடையில் பையனுக்கு விருந்துகொடுக்கவென 'சி'னாக் காரர்கள் 'செரிப்பழ பிராந்தி' போத்தல்களை கூட அடுக்கி வைத்திருக்கிறார்கள்.

ஆனால் பையனது பாதுகாப்புக்கு பொறுப்பான வெள்ளை தலையாரிகளோ, 'சி'னா லங்கா விஜயம் குறித்து அரைகுறை மனதுடன் தான் இருந்துள்ளார்கள்.

எது எப்படியோ 'தந்திர விழா' காட்சிகளுக்காக டமார் கொடுத்த [முன்] பரிசுதான் மிகப் பெரிய பரிசு என கொழும்பில் கிசு கிசுத்துக்கொள்கிறார்களாம்.

## நகர் வலம் - 3

# இவர்கள் பார்வையில்.... பேப்ரவரி - 4

**மொரிசியஸ் தமிழர்கள் + மதகுருமார்கள்**

எமது 'ஒலிப்பதிவு கருவி நாயகனின்' நகர் வலத்திலே இம்முறை மொரிசியஸ் நாட்டு தமிழர்கள் சிலர் சிக்கிக் கொண்டார்கள். (விடா முயற்சி!... விடா முயற்சி!!) உண்மையில் எமது ஒலிப்பதிவு கருவியின் சோகமான மணித்துளிகளாகவும் அந்த வேளை அமைந்து விட்டது. ஏனெனில் தாம் தமிழினத்தின் அடியிலிருந்து வந்தவர்களென்பதை பலர் ஏற்றுக் கொண்டாலும்.. அழகான தமிழ் பெயர்கள் அவர்களை அடையாளப் படுத்தினாலும், அவர்களால் தமிழ் மொழியினைப் பேசவோ அன்றி கருத்துக்களை பகிரவோ முடியவில்லை. அந்நிய மொழியூடாகவே (பிரெஞ்சு, ஆங்கிலம்) நாம் அவர்களுடனான தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டியிருந்தது. உண்மையிலேயே அவை துயரமான மணித்துளிகள் தான்.

பொதுவாக எம்மவர்க்கு இருக்கும் ஒலிவாங்கிப் பயம் அவர்களுக்கு இருக்கவில்லை. முன் வந்து கருத்துக்களை பகிர்ந்தனர். பலருக்கு ஈழப்போராட்டம் பற்றியும், சிறீலங்கா அரசின் கொடுமைகள் பற்றியும் ஓரளவு தெரிந்திருந்தது. ஆனால் இள வயதினரிடையே அவ்வாறான விளக்கங்கள் குறைவாகவே தென்பட்டன.

இன்னொரு சாராரோ தாம் தமிழகத்திலிருந்து டச் தசாப்தங்களுக்கு முன்னர் பிடுங்கி வரப்பட்டவர்களின் வாரிசுகள் என்பதை வேதனையுடன் ஒத்துக் கொண்டனர். ஆனால் அந்த நிலை வந்தமைக்கு யாரை குற்றம் கூறுவது. பிரெஞ்சு குடியேற்ற வாதிகளையா? அல்லது 'இழுத்த இழுப்பிற்கு' வந்துவிட்ட எமது முதாதையர்களையா? என்ற கேள்வியையும் தொடுத்தனர். அவர்களின் சோகத்தினை புரிந்து கொண்டே எமது நகர்வலத்தின் நோக்கத்தினை குறிப்பிட்டோம். கருத்துக்கள் வந்தன....

### திருமதி முத்துக்கருப்பன் (மொரிசியஸ்)

இவர் தமிழ் பண்ணிசைப் பாடல்களை அழகாக இசைக்கக் கூடியவர். ஆனாலும் அவரால் தமிழை பேச முடியவில்லை. தனது கருத்தினை (ஆங்கிலம் ஊடாக) எமது ஒலிப்பதிவு கருவியுடன் பகிர்ந்து கொண்டார்.

*ஈழத்திலே நடக்கும் போர் ஒரு துயரமான முடிவு. ஆனால் தனிநாடு கேட்டுப் போராடும் இப் போராட்டத்திற்கு மொரிசியஸ் நாட்டு தமிழர்களுடைய பங்களிப்பு முறையாக இல்லை என்பதும் உண்மை தான். ஒருவேளை நாம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள மொரிசியஸ் நாட்டில் இருப்பதுதான் இதற்கு காரணமோ தெரியவில்லை. ஆனால் இப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்க மொரிசியஸ் தமிழ் மக்கள் பின்னிற்க கூடாது என்பதையே இந்த நாளில் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். இவ்வாறாக கொடுக்கப்படும் ஆதரவு, ஒருவேளை இதற்கொரு விரைவான தீர்வினைக் கொடுக்குமல்லவா?*

இவ்வாறு கூறி முடித்த திருமதி முத்துக்கருப்பன் *ஆமாம் நீங்கள் எல்.ரி.ரி.ஈ.க்கு ஆதரவானவர்கள்தானே?* எனக் கேட்டும் வைத்தார்.

எமது பத்திரிகையைப் பற்றி அவருக்கு சிறிது விளக்கத்தினை கொடுத்த பின்னர் நகர்ந்தோம். எதிர்ப்பட்டவர்....

### திரு. பெருமாள் வாசுதேவன் (மொரிசியஸ்)

*நான் ஒரு மொரிசியஸ் தமிழனாக இருந்தாலும் சிறிலங்காவின் வரலாற்றினை நோக்கும்போது அங்கு தமிழ் மக்களுக்கு பெரும் அநீதிகள் இழைக்கப் பட்டுவருவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தமது குடியேற்ற வாதத்தினை கைவிட்டு வெளியேறிய போது முழு அதிகாரங்களையும் ஒட்டு மொத்தமாக சிங்கள அரசியல் தலைமைத்துவத்திடம் ஒப்படைத்தது எவ்வளவு பெரிய அழிவுக்கு வித்திட்டுள்ளது.*

*ஆனாலும் இன்று ஒரு 'பலம் வாய்ந்த' போராட்டம் தமிழ் மக்கள் சார்பாக நடப்பதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான பலம்தான் இன்று முக்கியம். மாறாக அப் பலம் இழக்கப்படுமானால் அந்தப் போராட்டத்தின் வெற்றி கேள்விக் குறியாகிவிடும்.*

இவ்வாறு அவர் தெரிவித்த போது எம்முடன் கூடவே நின்ற வரலாற்றுத்துறைப் பேராசிரியரான திரு. ஜோன் மரி ஜுலியா அவர்கள் திரு. பெருமாள் வாசுதேவனிடம், **அப்படியானால் ஈழத் தமிழ் மக்களுக்கு தன்னாட்சி அமைக்க உரித்துண்டு என நீங்கள் கருதுகிறீர்களா?** என வினவியபோது,

*நிச்சயமாக... நிச்சயமாக உரித்துண்டு. மீண்டும் நான் சொல்ல விரும்புவது இதுதான் போராட்ட பலத்தில் குறைவு ஏற்படாது பாதுகாப்பதையே இந்த நாளில் (பெப்ரவரி 4) தமிழ் மக்கள் கருப்பொருளாக எடுக்க வேண்டும்.*

இவ்வாறு தெரிவித்த அவரிடம் விடைபெற்று, பாரிஸ் தமிழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீக பணியாளர் அருட் தந்தை ச. மரிய செபஸ்தியானது குரு மனையை நோக்கி நடையைக் கட்டினோம்.

### அருட் பணியாளர் ச. மரிய செபஸ்தியான்

*மதகுரு: அத்துடன் ஒரு தமிழ் மத குரு என்ற முறையில் எனது கருத்தினை தருகிறேன். சிறிலங்கா அரசின் இந்த 50 -வது சுதந்திர தின கொண்டாட்டங்கள் உண்மையில் ஒரு சுதந்திர தினத்திற்குரிய கருப்பொருள் கொண்டிருக்கிறதா? என்பதே பெரிய கேள்விக் குறியாகும். வெறும் கொண்டாட்டம் ஒன்றினை கொண்டாட வேண்டும் என்பதற்காக இம் முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம்.*

*ஆனால் தமிழ் மக்களை பொறுத்த வரை ஒரு நீண்ட கால யுத்தத்திற்கு இழுக்கப்பட்டு அடிமைப் படுத்தப்பட்ட நிலையில் இந்த விழாவினை ஒரு விழாவாக எப்படி ஏற்க முடியும்? சிறிலங்கா ஆங்கிலேயரிடம் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து நாம் விடுதலையற்ற, உரிமையற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றோம். எனவே ஒரு மதகுரு என்ற ரீதியில் இந்த நாளினை (பெப் 4) முன்னிட்டு எமது நீதிக்காக, விடுதலைக்காக பிரார்த்தனை செய்யும்படி கிறிஸ்தவ மக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.*

...இவ்வாறு கூறி முடித்தார் அருட்பணியாளர்.

அருட்பணியாளரின் கருத்தினை தொடர்ந்து சிவசிறி கு. வைத்திய நாத குருக்கள் அவர்களின் எண்ணச் சிதறலை பதிவு செய்தபோது,

### சிவஸ்ரீ கு.வைத்தியநாத குருக்கள்

*எனக்கு 10 வயதாக இருக்கும் போதே சிறிலங்கா ஆட்சியாளர்களின் கொடுமைகளை இனக்கலவர வடிவில் கண்கூடாக பார்த்தவன் நான். எமக்கொரு தனிநாடு வேண்டுமென்ற தந்தை செல்வாவின் கோரிக்கையுடன் நடந்த பல சாத்விகப் போராட்டங்களில் கூட பங்கெடுத்தேன். ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் எல்லாவற்றையுமே தூக்கி எறிந்தனர். எமது அடிமை வாழ்வும் தொடர்ந்தது. தட்டிக்கேட்பார்கள் என்று நம்பிய தமிழ் தலைவர்கள் கூட சுயநலமாக நடந்தால் எமது சந்ததியினரே ஒட்டுமொத்தமாக ஏமாற்றப்பட்டனர்.*

*ஆனால் இனியும் நாம் ஏமாற்றப் படக் கூடாது எல்லோரும் இணைந்து போராடி எமக்கென்றொரு சுதந்திர நாட்டை உருவாக்க வேண்டும்.*

*மற்றபடி....*

*பெப்ரவரி 4 நாளுக்கென்று விசேடமாகக் கூறுவதனால், தமிழ் மக்கள் அனைவரும் தம்மிடையே உள்ள வேறுபாடுகளை களைந்து எமது உரிமைக்காக ஒன்றுசேர வேண்டும் என்பதே அதுவாகும்...*

என்று முடித்தார் சிவசிறி வைத்தியநாத குருக்கள்.

அடுத்ததாக, **அருட் சகோதரி கர்த்தரின்** அவர்களிடம் தொடர்பு கொண்டு அவரது கருத்தினைக் கேட்டபோது,

*திருச்சபை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட தனது பணியில் அரசியல் பேசுவதற்கு அனுமதி இருப்பதில்லை* எனக் குறிப்பிட்டவர், *தான் தமிழீழ பிரதேசத்தினை விட்டு அருட் பணிக்கென வெளிநாடுகளுக்குப் புறப்பட்டு 22 வருடங்களாகின்றன. இந்த கால கட்டத்தில் நாட்டில் எவ்வளவோ துயரச் சம்பவங்கள் நடைபெற்றுவிட்டன. தமிழ் மக்களின் 'இன்றைய நிலை' பற்றி என்னுடன் பணிபுரியும் ஏனைய பிரெஞ்சு ஊழியர்களுக்கு தெளிவாக எடுத்துக்கூறி வருகின்றேன்* எனவும் குறிப்பிட்டுக்கொண்டார்.

சரி... அருட் சகோதரியின் கருத்து அப்படியானால்,

**மணிக்குருக்களின் கருத்து** என்ன? இதோ அவரே தருகிறார்.

*உண்மையில் இந்த நாள் ஒரு துக்க நாள். எமக்கு அடக்குமுறை, மரணம், கவலை, பசி, பஞ்சம் ஆகியவை சூழ இருக்கும்போது சுதந்திரவிழா என்பது எப்படியிருக்க முடியும். நாம் எப்போது உரிமையுடன் நிமிர்கின்றோமோ அது தான் எமக்கு சுதந்திர நாள்.*

இவ்வாற அழுத்திக் கூறினார் அவர்.

# 'பென்சன் & ஹெச்சஸ் கிண்ணத்தை அவுஸ்திரேலியா வென்றது



அவுஸ்திரேலிய சுழல் பந்துவீச்சாளர் 'வோர்ன்'ன் பந்துவீச்சுக்குப் பலியாகும் தென்னாபிரிக்க வீரர்

வருடா வருடம் அவுஸ்திரேலியாவால் நடத்தப்படும் 'பென்சன் & ஹெச்சஸ்' மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட ஒருநாள் கிரிக்கப் போட்டிகளில், இரு நாடுகள் விருந்தினராக அழைக்கப்பட்டு, மொத்தம் மூன்று நாடுகளுக்கிடையில் போட்டிகள் நடைபெறும். நடைபெறும் போட்டிகளில், புள்ளியடிப்படையில் இரு நாடுகள் தெரிவாகி இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகும்.

இவ்வாண்டு நடைபெற்ற இப்போட்டிகளுக்கு விருந்தினராக நியூசிலாந்து அணியும் தென்னாபிரிக்க அணியும் அழைக்கப்பட்டிருந்தன.

மூன்று போட்டிகளை உள்ளடக்கிய இறுதிச் சுற்றில் கலந்து கொள்ள அவுஸ்திரேலிய அணியும், தென்னாபிரிக்க அணியும் தெரிவாகியிருந்தன. இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டிகளை வென்றிருந்த நிலையில், கடந்த 27.01.98 அன்று சிட்னியில் மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. அணித் தலைவர் 'ஸ்ரிவ் வோவ்' 71 ஓட்டங்களையும், பொயின்ரிங் 76 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்க அணி 233 ஓட்டங்களை மட்டுமே பெறுவதற்கு அவுஸ்திரேலிய அணியின் திறமையான பந்துத் தடுப்பு உதவியது. தென்னாபிரிக்க அணியின் சார்பில் 'பஷெர்', 'குளுசெனர்' முறையே 45, 46 ஓட்டங்களைப் பெற்றனர். அவுஸ்திரேலிய அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்று 'பென்சன் & ஹெச்சஸ்' கிண்ணத்தை வென்றது.

# 1997-ல் கூடிய ஓட்டங்களைப் பெற்ற துடுப்பெடுத்தாட்டக்காரர்கள்

'முந்திவந்த செவியை பிந்திவந்த கொம்பு மறைத்த' கதைதான், கிரிக்கட் வரலாற்றிலும் நடக்கிறது.

121 வருட பழமை வாய்ந்த டெஸ்ட் கிரிக்கட்டை விட, 28 வருட புதிய அறிமுகமான ஒருநாள் போட்டிகள் கொடிகட்டிப் பறக்கின்றன. ஒருநாள் போட்டிகளில் வல்லவர்கள் ஆசிய நாட்டவர்கள் என்பதை மற்றைய நாட்டவர்கள் ஏற்க மறுத்தாலும், புள்ளிவிபரத்தை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

அந்த அடிப்படையில் 1997ம் ஆண்டு ஒருநாள் போட்டிகளில் 1000 ஓட்டங்களை தாண்டியவர்கள் அனைவரும் ஆசியர்கள் என்பதை தொடரும் அட்டவணை காட்டுகிறது.

| பெயர் | போட்டிகள் | இனிங்ஸ் | ஓட்டங்கள் | கூடிய ஓட்டங்கள் | சராசரி | சதம் |
|---|---|---|---|---|---|---|
| கங்குலி (இந்) | 38 | 35 | 1338 | 113 | 41.81 | 1 |
| அ. டி.சில்வா (சிறீ) | 28 | 27 | 1212 | 134 | 52.7 | 3 |
| ஜெயசூரிய(சிறீ) | 26 | 26 | 1178 | 151* | 51.22 | 3 |
| இயாஸ் அகமட் (பாக்) | 31 | 31 | 1106 | 139* | 38.13 | 1 |
| அசாருதீன் (இந்) | 36 | 32 | 1104 | 111* | 40.89 | 1 |
| டெண்டுல்கர்(இந்) | 39 | 36 | 1011 | 117 | 30.63 | 2 |

# 300 விக்கட்டுகளுக்கு மேல் வீழ்த்தியவர்கள்

'டெஸ்ட்' கிரிக்கட்டில் 300 விக்கட்டுக்களுக்கு மேல் வீழ்த்திய வீரர்கள் பட்டியலில், அண்மையில் இணைந்து கொண்டவர் 'வோர்ன்'. இதுவரை 300 விக்கட்டுக்களை வீழ்த்திய வீரர்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் உள்ள 13 வீரர்களில் 'கிப்ஸ்', 'வோர்ன்' இருவர் மட்டுமே சுழல்பந்துவீச்சாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

| பெயர் | விக்கட் | நாடு | போட்டி |
|---|---|---|---|
| கபில்தேவ் | 434 | இந்தியா | 131 |
| ஹட்லி | 431 | நியூசிலாந்து | 86 |
| போத்தம் | 383 | இங்கிலாந்து | 102 |
| மல்க்கம் மார்ஷ் | 376 | மே. இந்தியத் தீவுகள் | 81 |
| இம்ரான்கான் | 362 | பாகிஸ்தான் | 88 |
| லில்லி | 355 | அவுஸ்திரேலியா | 70 |
| வோர்ஷ் | 353 | மே. இந்தியத் தீவுகள் | 96 |
| அக்ரம் | 334 | பாகிஸ்தான் | 77 |
| வில்லிஸ் | 325 | இங்கிலாந்து | 90 |
| கிப்ஸ் | 309 | மே. இந்தியத் தீவுகள் | 79 |
| அம்புறூஸ் | 307 | மே. இந்தியத் தீவுகள் | 74 |
| துறுமன் | 307 | இங்கிலாந்து | 67 |
| வோர்ன் | 300 | அவுஸ்திரேலியா | 63 |

## பிழை திருத்தம்

கடந்த முரசு-159 இதழில், பக்கம் 27, விளையாட்டுப் பகுதியில் இந்திய அணி மேற்கிந்திய தீவுகள் அணியை 1983-ம் ஆண்டு வெற்றிகொண்டு 3-ம் உலகக் கிண்ணத்தை வெற்றிகொண்டது என்பதற்குப் பதிலாக 1993-ம் ஆண்டு என்றும், இந்திய சாதனையாக சுனில் கவஸ்கார் 236 ஓட்டங்களைப் பெற்றார் என்பதற்குப் பதிலாக 256 ஓட்டங்கள் என்று தவறுதலாக அச்சாகியுள்ளது. பிழையைச் சுட்டிக்காட்டிய வாசகருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# மைதானச் சீர்கேட்டால் போட்டி நிறுத்தம்

மேற்கிந்திய தீவுகளுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் ஜமேக்காவில் 29.01.98 நடைபெறவிருந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கட் போட்டி, மைதான ஆடுகளம் சிறந்த முறையில் இல்லாத காரணத்தினால் நிறுத்தப்பட்டுள்ளது. காலநிலை, மற்றும் மழை காரணமாக போட்டிகள் பலதடவை நிறுத்தப்பட்டதுண்டு. 121 வருடகால டெஸ்ட் வரலாற்றில், ஆடுகளம் சிறந்த முறையில் இல்லாத காரணத்தினால் ஆட்டம் நிறுத்தப்படுவது இதுவே முதல்முறையாகும். அத்தோடு 'பிறைன் லாறா' தலைமையில் மேற்கிந்திய தீவுகள் அணி கலந்துகொள்ளவிருந்த முதலாவது டெஸ்ட் போட்டியும் இதுவாகவே இருந்தது.

# 'அவுஸ்திரேலியன் ஓப்பன்' முடிவுகள்



பெரும் பணம் செலவளிப்பில், பெரும் வரவேற்புப் பெற்று, பெரும்பாலான மக்களால் விரும்பப்படும் விளையாட்டுக்களில் முதன்மையானது 'டென்னிஸ்'. பல்வேறு நாடுகள் 'டென்னிஸ்' போட்டிகளை நடாத்தி வருகின்றபோதும், இங்கிலாந்தின் 'விம்பிள்டன்', 'பிரெஞ்ச் ஓப்பன்', 'அமெரிக்கன் ஓப்பன்', 'அவுஸ்திரேலியன் ஓப்பன்' ஆகியவை மிகவும் பிரபல்யமானவை.

ஆண்டின் முதற்பகுதியில் கோடைகால கொண்டாட்டமாக 'அவுஸ்திரேலியன் ஓப்பன்' தடல்புடலாக ஆரம்பமாகிவிடும். இவ்வருடம் ஜனவரி 19ம் திகதியிலிருந்து 'மெல்பேர்ண்' நகரில் ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டிகள் களைகட்டத் தொடங்கி பல முன்னணி வீரர்கள் தோல்வியையும், சில வளர்ந்துவரும் வீரர்கள் வெற்றிபெற்றும் உள்ளார்கள்.



31.01.98 நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் முதல் நிலை வீராங்கனையான சுவிற்சர்லாந்தின் மார்ட்டீனா ஹிங்கிஸ், எட்டாவது நிலையிலுள்ள மார்ட்டினேஸை எதிர்கொண்டார். 84 நிமிடங்கள் நடைபெற்ற இப்போட்டியில் 6 - 3, 6 - 3 என்ற கணக்கில் வெற்றிகொண்டு இரண்டாவது முறையாக மார்ட்டீனா ஹிங்கிஸ் 'அவுஸ்திரேலியன் ஓப்பன்' பட்டத்தை வெற்றிகொண்டார். கடந்த வருடம் பிரான்சு நாட்டு வீராங்கனை மரி பியர்ஸை வெற்றிகொண்டு கிண்ணத்தை சுவீகரித்தது குறிப்பிடத்தக்கது. இம்முறை ஹிங்கிஸ்-க்கு 430,675 டொலர் தொகையான பரிசுத்தொகையும் கிடைத்தது.

ஆண்களுக்கான இரட்டையர் இறுதிப் போட்டியில் முதல் நிலைச் சோடியான அவுஸ்திரேலியாவின் 'வுட்பிறிச்', சகோதரர்களை, 5ம் நிலையிலுள்ள சுவீடன் வீரர் 'பெறோச்மன்', நெதர்லாந்து வீரர் 'எல்ரிங்' சோடி தமது நேர்த்தியான ஆட்டத்தால் 6-2, 5-7, 2-6, 6-4, 6-3 என்று வெற்றிகொண்டனர்.

பெண்களுக்கான இரட்டையர் இறுதிப்போட்டியில் சுவிஸ் நாட்டி வீராங்கனை மார்ட்டினா ஹிங்கிஸ், கொறோவோச்சியாவின் 'லுசிக்' சோடி முதலாம் நிலைச் சோடியான அமெரிக்க வீராங்கனை 'டவன்போட்', பல்கேரிய வீராங்கனை 'ஸ்வெறிவா' சோடியை 6-4, 2-6, 6-3 என்ற கணக்கில் வெற்றிகொண்டனர்.

01.02.98 அன்று நடைபெற்ற கலவன் இரட்டையர் ஆட்டத்தில் அமெரிக்காவின் 'வில்லியம்ஸ்', 'கிமல்ஸ்ரொப்' சோடி, செக் குடியரசின் 'சுகோவா', 'சுக்'

சோடியை 6-2, 6-1 என்ற கணக்கில் வெற்றிகொண்டனர்.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில், செக் குடியரசின் 'கோறடா' 'சிலியன் றோஸ்'-ஐ 6-2, 6-2, 6-2 என்ற கணக்கில் மிகவும் இலகுவாக வெற்றிகொண்டு கிண்ணத்தை சுவீகரித்துள்ளார்.

முன் அறிவிப்பு

'யாழ்முரி 98' விருதுப் போட்டி

புலம் பெயர் தேசத்தில் வாழும் தமிழ் இசைக் கலைஞர்களின் திறமைகளை வெளிக் கொண்டு வரும் வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடாத்தும் 'யாழ்முரி -98' விருதுப்போட்டி இம்முறை சுவிசில் நடைபெற இருப்பதை அனைத்து இசைக்குழுக்கள், மற்றும் கலைஞர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

விதி முறைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 01.2733407, 055.6432369

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சுவிஸ் பணியகம்

# ஜேர்மனியில் நடைபெற்ற 'எழுச்சிக்கலை'

தளபதி கேணல் கிட்டு உட்பட ஒன்பது மாவீரரின் ஐந்தாவது வருட நினைவு நாள் ஜேர்மனி டோட்முன் நகரில் வெஸ்ட்வாலன் மண்டபத்தில் 17.01.98 சனியன்று நடைபெற்றது. மண்டபம் நிறைந்த மக்கள் மத்தியில் விடுதலை உணர்வு மிக்க எழுச்சிக் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

அமைதி வணக்கம். விளக்கேற்றல். மலர் வணக்கம் ஆகியவற்றையடுத்து விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியகக் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு.கா. சிவநாதனின் வார்த்தை வணக்கமும் இடம் பெற்றது. 'கிட்டண்ணா நீதியால் வரைந்த விடுதலை ஓவியம் கடலில் கரைந்துவிடாது' என்று அவர் குறிப்பிட்டார்

தளபதி கேணல் கிட்டு நினைவு நாள் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. ஓவியப் போட்டிகள் காலையில் நடைபெற்றன. ஜேர்மனி முழுவதிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஓவியப் போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஓவியப் போட்டிக்கான பரிசுகளை ஜேர்மனி உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் திரு.கே.காங்கேய மூர்த்தி வழங்கினார். ஓவியர் கண்ணன் பரிசளிப்பை நடாத்தி வைத்தார். சின்னஞ்சிறு பாலகனான சுரேன் உலகநாயகம் மழலை மொழியில் கேணல் கிட்டுவைப் பற்றி பேசினார்.

நிமிர்ந்த நடை, பிரபாகரன் படை வெல்லும் ஆகிய இரு எழுச்சிமிக்க சுதந்திரக்கலை நடனத்தொகுப்புகள் நடைபெற்றன. விடுதலைப் புலிகள் ஜேர்மனிக் கிளைப் பணியக கலை பண்பாட்டுக்கழக நடன ஆசிரியர்களான திருமதி வானதி தேசிங்குராஜா, திருமதி சாவித்திரி இம்மானுவேல். செல்வி ரேனுகா காந்தராசா, செல்வி பவித்ரா செல்வகாந்தன் செல்வி சுகன்யா சிவசுதன், ரஜனி சத்திய குமார், வாணி கஜேந்திரன், அற்புத ராணி, கந்தசாமி, தனுஷா தேவராஜா ஆகியோர் 'சுதந்திரக் கனல்' நடனத் தொகுப்புகளை வழங்கினர். நடனங்கள் ஒவ்வொன்றும் தமிழீழ விடுதலையின் வேகத்தை வெளிப்படுத்தின. 'காவிய நாயகன் கிட்டு' என்ற தலைப்பில் வில்லுப்பாட்டு நடைபெற்றது.




இதனை திரு நா. சிவநாதன் எழுதி இயக்கி நடாத்தினார். கேணல் கிட்டுவின் வீரம், வில்லுப் பாட்டிலும் தொனித்தது. பலரின் பாராட்டை வில்லுப்பாட்டு பெற்றது.

தளபதி கேணல் கிட்டு நினைவு நாள் ஓவியப் போட்டி டோட்முன் நகரில் நடைபெற்றது. ஓவியத்தில் அதிக ஈடுபாடு கொண்ட கேணல்கிட்டுவின் நினைவு நாளில் ஜேர்மனியின் பல பகுதிகளிலிருந்தும் ஓவியர்கள் ஒன்று கூடினர். ஓவியப்போட்டி முடிவுகள் வருமாறு:

கீழ்ப்பிரிவு: 1. மௌரிஷ் வரதராஜா (பீலபில்ட்), 2. ஜெயமயூரன் ஜேம்ஸ் அல்ஸ்ரன் (பீலபில்ட்) 3. சாருகாந் சிறிஸ்கந்தராஜா (எசன்).

நடுப்பிரிவு: 1. மானுஷ் வரதராஜா (பீலபில்ட்) 2. மதனரூபன் சோமஸ்காந்தன் (ஒசனாபுறூக்) 3. சர்வோதயா அருச்சுனன் (ஒல்ஸ்பேர்க்)

மேற்பிரவு: 1. கார்த்திகா ஞானசேகரம் (என்லிங்கலோ), 2. ஜெயசுரூபன் ஜேம்ஸ் அல்ஸ்ரன் (பீலபில்ட்), 3. ஜனார்த்தன் செந்தில் ராஜா (பீலபில்ட்).

அதி மேற்பிரிவில் பங்கு பற்றிய சுபாசினி கயிலைநாதன் சிறப்புப் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

இவர்களுக்கான பரிசுகள் கேணல் கிட்டு நினைவுநாள் நிகழ்சியின்போது வழங்கப்பட்டன.

# சுவிசில் நடைபெற்ற கிட்டாஞ்சலி நிகழ்வு

கேணல் கிட்டுவும், ஒன்பது சக போராளிகளும் தாயக விடிவுக்காக தங்களை அர்ப்பணித்த நாளை 17.01.98-ல் சுவிர்சலாந்தின் லுசேர்ன் நகரில் நினைவு கூர்ந்தபோது, ஏராளமான மக்கள் ஒன்று திரண்டு மண்டபம் நிறைய வந்திருந்தார்கள். இந்நிகழ்ச்சியானது ஒழுங்கு செய்யப்பட்டபடி சரியாக பிற்பகல் 4 மணிக்கு மாவீரன் கல்கத்– கிருசாந் எனப்படும் மார்க்கண்டு மதனரூபன் (புதுவையூர்) அவர்களின் தந்தையார், தமிழினத்தின் வீரத்தை சித்தரிக்கும் தேசியக்கொடியான புலிக் கொடியை 'ஏறுதுபார் கொடி ஏறுதுபார்' பாடலுடன் ஏற்றி, மரணித்த மாவீரர் பொதுமக்களுக்கான வணக்க மிகழ்வுடன், ஈகச்சுடரையும் கேணல் கிட்டுவிற்கும் சக போராளிகளுக்கும் அமைக்கப்பட்டிருந்த விசேட இல்லத்தில் ஏற்றி வைத்தார். அங்கு கூடியிருந்த மக்களும் அவ்விசேட இல்லத்தில் மலர்களைத்தூவி தங்கள் தளபதிக்கும் சகவீரர்களுக்கும் வீரவணக்கம் செலுத்திச் சென்றதை அவதானிக்க முடிந்தது. இவ்வணக்க நிகழ்வை பார்த்த போது, ''இந்நிகழ்ச்சி ஒரு அன்னிய தேசத்தில் அல்ல, எமது தாயகமான தமிழீழத்தில் நடைபெறுகிறதோ' என்று கூறத்தோன்றுமளவுக்கு உணர்வு பூர்வமாக அமைந்தது. புரட்சிக்கீதங்கள் இசை மழை கொட்டிய 'அங்கயற்கண்ணி' இசைக்குழுவின் பாடகர்கள் குகன், சாந்தன், சிவா, சஞ்சீவன், சுரேந்தினி, சிவாஜி, நிலா, ஜீவிதன், ஆகியோர் இவ்விழாவிற்கு பெருமூட்டும் வகையில் பாடல்களுடன் மக்களையும் இணைத்துக்கொண்டார்கள். பாடல்களில் கூறிய கருத்துக்களை நடன நிகழ்வுகளும் தங்கள் அபிநய ஆட்டங்களால் கொள்ளை கொண்டன. இங்கு நடைபெற்ற நடன நிகழ்வுகளை ராதா நடனாலயக்கல்லூரியும், சுக் 'பாரதி கல்வி நிலையமும்' வழங்கியிருந்தன. இவ்விரு நடனக் கல்லூரிகளும் நீண்டகாலமாக போராட்ட நிகழ்வுகளில் மக்களை ஈடுபட வைப்பதில் தமது செயற்பாடுகளை கலைகளினூடாக செய்து வருகின்றன. இங்கு நடைபெற்ற நிகழ்வுகள் பல்வேறு ரசனைகளை கொட்டி நின்றன. எளிய முறையில் கருத்துக்களை கொட்ட வல்ல வில்லிசை வடிவில் அமைக்கப்பட்ட 'கிட்டுமாமா' எனும் கேணல் கிட்டுவின், 'வாழ்க்கையும் போராட்டமும்' பிரமாதமாக படைக்கப்பட்டது.

சுவிஸ் தமிழீழ விடுதலைப் புலிகளின் பணியாளர்களில் ஒருவரான அல்பேட், கேணல் கிட்டுவையும் சக போராளிகளையும் நினைவு கூர்ந்து சிறப்புரை ஆற்றினார். அவருடைய பேச்சில் கிட்டு அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்து நடத்துவதுடன் மட்டும் நின்று விடாது போராட்டம் சார்ந்த அனைத்து விடயங்களையும் கண்ணும் கருத்துமாக கவனித்ததாகவும், தலைவருக்கும் மக்களுக்கும் பிடித்தமான தளபதியாக வெற்றி கொண்ட நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டி, மக்களால் முன்னெடுக்கப்படும் வீரம் செறிந்த தமிழீழ போராட்டத்தை சொந்த மக்களை நம்பியே தலைவர் பிரபாகரன் வழி நடத்தி வருவதாகவும், அந்த தலைமைக்கு மக்கள் ஒன்று திரண்டுபங்களிப்பு நல்கும் பட்சத்தில் புதிய நூற்றாண்டில் புதிய நாடான தமிழீழத்தின் புலிக்கொடி ஐ.நா. சபையில் பறக்கும் என்று கூறியிருந்தார்.

'தாயகத்தை காதல் செய்' என்ற நாடகம் வன்னிப் பெருநிலப்பரப்பில் மக்கள் படும் அவலங்களையும், தளராத மனஉறுதியுடன் மக்கள் போராட்ட வழியில் ஈடுபட்டு நிற்பதையும் சுட்டிக்காட்டியதோடு தன்னுயிரையே தாயகத்திற்காக தியாகம் செய்த துணிந்த ஒரு போராளியின் கதையை எடுத்துக் காட்டியது.






சில மக்கள் முன்வந்து தாயக மீட்புக்கான பணம் வழங்கியிருந்தார்கள். குறிப்பாக கிறவுண்டன் மாநிலத்திலுள்ள ஈழமன்றத்தினர் 6,000 சுவிஸ் பிராங்குகளை ஒருங்கிணைப்பாளர் திரு. சங்கரிடம் வழங்கினார்கள்.

04.01.97 இதே நகரில் நடைபெற்ற கேணல் கிட்டு ஞாபகார்த்த தமிழர் புனர்வாழ்வு நிதிக்காக விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டுக்களும் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. அமைதியாக கொடி இறக்கப்பட்டு 'புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்' என்ற முடிவான முடிவோடு கிட்டாஞ்சலி நிகழ்வுகள் முற்றுப்பெற்றன.

*– சங்கையூர் குமார்*

# புகலிட நிகழ்வுகள்

## பெப். 7-ல் தமிழாலய விழா

ஜேர்மனி உலகத்தமிழர் இயக்கக் கல்விப்பணியின் கீழ் இயங்கும் முன்ஸ்ரர் தமிழாலயத்தின் தமிழாலய விழா பெப்ரவரி 7ம் திகதி சனியன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறும்.

பரதநாட்டியம், கவிதை, பேச்சு, நாட்டிய நாடகம் உட்பட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இவ்விழாவின் போது இடம்பெறவுள்ளன. முன்ஸ்ரர் ஜிம்னாசியம் மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் கலந்து கொண்டு தமிழாலய மாணவரின் திறமையைக் கண்டுகளிக்குமாறு தமிழ்மக்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## சுவிஸ் - சுக் நகரில் பொங்கல் விழா

விவசாய விளைவெடுத்து விருந்து படைத்த வீரத்தமிழினம், தைபிறந்த நாளை உழவர் தம் தோழன் உதயசூரியனுக்கான தினமாக்கி கொண்டாடப்படும் பொங்கல் பெருவிழாவை, புலம்பெயர்ந்த நாடுகளில் கூட கடைப்பிடிப்பதை அவதானிக்க முடிகிறது.

சென்ற 18-01-1998 இல் சுவிற்சர்லாந்தின் சுக் மாநிலத்தில் பொங்கல் விழா மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. சுக், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழா, பிற்பகல் 3 மணியளவில் சுவிஸ் பிரஜையான வழக்கறிஞர் திரு. றொத் (Rroth) மங்கல விளக்கேற்றிவைத்து சிறப்புரையாற்றியதுடன் ஆரம்பமானது. திரு.மு.பாலசிங்கத்தின் வரவேற்புரையை தொடர்ந்து அங்கயற்கண்ணி இசைக் குழுவின் சின்னஞ்சிறு கலைஞர்களின் இசைநிகழ்ச்சி பெரு வரவேற்பை பெற்றுக்கொண்டது. தரணியிலே தமிழனுக்கென்று ஒரு நாடற்றநிலையில் எம்மவர் படும் வேதனையை 'அகதிகள்' என்ற தலைப்பில் செல்வன் உமேஸ் லூர் சிந்தனா உரையை வழங்கியிருந்தார். சுக் பாரதி கல்வி நிலைய ஆசிரியை திருமதி அனுஷா சற்குணநாதனும், சுக் கலைக்கோவில் ஆசிரியை திருமதி நிமலினி ஜெயக்குமார் அவர்களும், தத்தம் மாணவர்கள் மூலமாக தரமான விடுதலை உணர்வுகளுடன் அமைந்த நடன நிகழ்வுகளைத் தந்திருந்தார்கள்.

சென்ற வருட கடைசியில் சூரிச்சில் நடைபெற்ற நாடகப் போட்டியில் வெற்றிபெற்ற நாடகங்களான 'சிதறிய கோலங்கள்', 'புயலுக்கு முந்திய வானம்' ஆகியன இங்கும் மேடையேற்றப்பட்டது. மக்களுக்கு அவை நல்ல விடயங்களை தெளிவு படுத்தி நின்றன.

விருந்துகொடுத்து உபசரிப்பது என்பது தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு பொக்கிசமாக விளங்கி நிற்கிறது. இப்பண்பாட்டு பொக்கிசம் இப்பொங்கல் நிகழ்விலும் ஆதிக்கம் செலுத்தியதை காண முடிந்தது. அதாவது நிறைவாக வந்திருந்த மக்களுக்கு பொங்கல் பிரசாதம் பரிமாறப்பட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. சுவிற்சர்லாந்தில் முதல் முதலாக நகைச்சுவை காட்சிகளை காண்பித்து 'லூஸ் மாஸ்டர் ஐசக் இன்பராசா' பொங்கல் நிகழ்வில் பங்கு பற்றிய மக்களுக்கு சிரிப்புப் பொங்கல் கொடுத்து மகிழ்வித்தார். ஜேர்மனியிலிருந்து விசேடமாக வருகை தந்த ஐசக் இன்பராசாவை சுக் விநாயகர் ஆலயபரிபாலன சபைத்தலைவர் திரு.ஜெயராச் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். தற்போதைய கால கட்டத்தில் ஒவ்வொரு செந்தமிழனும் சிந்திக்க வேண்டிய, 'புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் தாய்மொழியான தமிழும் கலாச்சாரமும் பேணப்படுகின்றனவா? இல்லையா? என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெற்றது 'பேணப்படுவதாக' திரு.பாலசிங்கம், திரு.ஜெயராஜி, 'பேணப்படவில்லை' என திரு.வாகீஸ்வரன், திரு.இளங்கோவும் கருத்துக்களை வார்த்தைகளால் அள்ளிவீச நடுவராக திரு. கஜேந்திரநாதக் குருக்கள் கடமையாற்றியிருந்தார். அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு, பரிசளிப்புடன் திரு.சிவா நன்றியுரை வழங்க, திரு.சுதாகர் தொகுத்து வழங்கிய இப் பொங்கல்விழா நிறைவு பெற்றது.

உள்ளரங்க உதைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற கழகங்களுக்கும் வீரர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்தோடு பரீட்சைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

*தொகுப்பு- அனுஷா*




சொர்க்கமே எண்டாலும் நம்நாடு போல வருமா?" இப்பிடி தமிழ் சினிமாவில தானாக்கும் பாடி வைச்சவை. எங்கைதான் பறந்து திரிஞ்சாலும் வந்து ஒதுங்கிறதுக்கு ஒரு கூடு வேணும் பிள்ளையள். அதுவும் தங்கட தங்கட சொந்த மண்ணிலையாய் இருந்தா... சந்தோசமே வேறைதான். இயந்திரமாப்போன இந்த வாழ்க்கையில ஒதுங்கிறதுக்கு எங்களுக்கு உண்மையில இங்க ஒரு 'கூடு'தான் கிடைச்சிருக்கு பாருங்கோ.

இதுகளில இருந்து விடுபட்டு நாங்களும் விட்டு விடுதலையா வாழவேணுமெண்டுதான் விலைமதிப்பில்லா எத்தனையோ உயிர்களைக்குடுத்து இன்னும் அங்கை போராடிக் கொண்டிருக்குதுகள். எங்களுக்காகவும் அங்க கஷ்டப்படுற அந்தச் சனங்களுக்கும் ஒரு விடிவுவேண்டி ராமருக்கு உதவின அணில் மாதிரி இங்கினையும் தங்கட வேலையளை தள்ளிவைச்சிட்டு எத்தனையோ பேர் குரல் குடுத்துக் கொண்டுதானிருக்கினம். போனகிழமையும் உந்த சிங்களவர் செய்யிற அநியாயங்களை உலக நாடுகளுக்கு எடுத்துச் சொல்லுவமெண்டு எங்கட சனங்களிட்ட கையெழுத்தொண்டு வாங்கினவை, அப்பதான் அவரிட்டையும் போய் கேட்டிருக்கினம்......

இருக்கிறம். 'நாடு உனக்கென்ன செய்ததெண்டு பாராதே. நாட்டுக்கு நீ என்ன செய்தாய் எண்டு பாரெ"ண்டு ஆர் சொல்லியென்ன... இங்கின எங்களுக்கு கிடைக்கிற சின்னச்சின்ன சலுகையள் எங்கட எதிர்கால சந்ததிக்கே ஒட்டுமொத்தமா கிடைசிட்டதா நினைச்சு சந்தோசப் பட்டுக் கொண்டெல்லோ இருக்கிறம்.

> **கிடைக்கிற அற்ப விசயங்களில சந்தோசப்பட்டு திருப்தியடையிறது அந்த நாளையில இருந்தே எங்களுக்கு பழக்கமாப் போச்சுது பிள்ளையள். என்ன செய்யிறது நாய்வாலை நிமித்த முடியுமே? எண்டைக்குமே மனிசன் திருப்தி அடையக் கூடாதெண்டுதான் எத்தனையோ பெரியவை சொல்லியிருக்கினம்.**

கிடைக்கிற அற்ப விசயங்களில சந்தோசப்பட்டு திருப்தியடையிறது அந்த நாளையில இருந்தே எங்களுக்கு பழக்கமாப் போச்சுது பிள்ளையள். என்ன செய்யிறது நாய்வாலை நிமித்த முடியுமே? எண்டைக்குமே மனிசன் திருப்தி அடையக்

# 'சொர்க்கமே எண்டாலும் நம்நாடு போல வருமா?"

'யாழ்ப்பாணத்துச் சனங்கள் கஷ்டப்படேலை எண்டுதானாம் ஆமியைப் பிடிக்கவிட்டது(?!) பிறகென்னத்துக்கு கஷ்டப்படுற சனங்களுக்கெண்டு கையெழுத்து வாங்கி அனுப்பிறியள் எண்டொரு போடு போட்டாரே பாருங்கோ...... உவருக்கினி என்னெண்டு பிள்ளையள் விளங்கப்படுத்திறது? எத்தனை பத்திரிகையள் உதைப்பற்றி விலாவாரியா விரிச்சு எழுதியிருந்தது. அதுகளை கொஞ்சம் படிச்சாத்தானே. கிணத்துத் தவளை மாதிரி உள்ளுக்கை கிடக்காம, வெளியில என்ன நடக்குதெண்டு எப்பனெண்டாலும் எட்டிப் பாக்கவேணும் கண்டியளோ. பிறகு கடலில இருந்து வாற தவளையிட்ட ஒரடி பாஞ்சுபோட்டு கடல் இவ்வளவு இருக்குமா? எண்டு கேக்கிறது விளங்காத்தனம் மட்டுமில்லை விசமத்தனமும்தான் பிள்ளையள்.


சரி அதோட முடிஞ்சுதே.....? 'நாங்கள் 'நஷனலிற்றி'! என்னத்துக்கு அங்கத்தைச் சனங்களுக்கு செய்யவேணும்? நாளைக்கு 'ரூறிஸ்ரா" போகேக்கை எங்களையும் எல்லோ உள்ளுக்கை பிடிச்சுப் போட்டுடுவாங்கள்' எண்டு கையெழுத்துப்போட மறுத்திட்டார். அது சரிதான்...... ஆடு நனையுதெண்டா ஓநாய் ஏன் அழவேணும் பிள்ளையள்?

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே எண்டு நாலடியார் சொன்னதை இந்த நேரத்தில நினைச்சுப்பாக்காம இருக்க முடியுமே? எங்களையும் மனிசரா உருவாக்கிவிட்ட அந்த மண்ணுக்கு என்ன செய்யப்போறமெண்டு இன்னும் நாங்கள் நினைக்கிறேலை. அந்தமண்தான் 'இன்னும்' எங்களுக்கு 'ஏதாவது' செய்யவேணும் எண்ட எதிர்பாப்பில கூடாதெண்டுதான் எத்தனையோ பெரியவை சொல்லியிருக்கினம். தலைவர் கூட ஒரு இடத்தில சொல்லுறார், தமிழீழம் கிடைச்சாலும் நான் திருப்தி அடைய மாட்டனெண்டு. கேட்டுக்கொண்டிருந்தவை எல்லாம் வாயைப் பிளந்து போட்டினம்! 'தமிழீழம் கிடைக்க வேணுமெண்டுதானே போராடுறார், அது கிடைச்சாலும் திருப்தி அடைய மாட்டாரெண்டா... அங்காலை சிங்களவற்ற தேசத்தையும் கேட்டுப் போராடப் போறாரோ எண்டுதான்?' கனபேற்றை மனசுக்க கேள்வியா இருந்திருக்கும்! ஏனெண்டா இவையளை மாதிரி ஆக்கள் யோசிக்கட்டும் எண்டுதானோ என்னமோ அதில ஒரு இடைவெளி விட்டுட்டு தொடருறார்.... தமிழீழம் கிடைச்சாலும் அதை எப்பிடி உலக நாடுகளுக்கு இணையா முன்னேற்றம் அடைய வைக்கிறதெண்டுதான் சிந்திப்பேனே தவிர தமிழீழம் கிடைச்சா மட்டும் திருப்தி அடைஞ்சிட மாட்டன் எண்டு.

இலட்சிய எல்லையை அடைஞ்சாக்கூட திருப்தி அடையாம இன்னொரு இலட்சியத்தை உருவாக்கி தொடர்ந்து நடக்கவேணும் எண்டதைத்தான் தலைவற்றை இந்த வார்த்தை எங்களுக்கு உணர்த்துது பிள்ளையள்.

இருந்தும் என்ன... முடவனும் மூர்க்கனும் கொண்டதை விடார் எண்ட கணக்கா நாங்களும் எங்கை மாறப்போறம்..?! தற்காலிகமா எங்களுக்கு கிடைத்த நிம்மதியிலையும் சந்தோசத்திலையும் கடந்த காலத்தை திரும்பிப்பாக்க மறுக்கிறது வெட்கப்பட வேண்டியது மட்டுமில்ல பிள்ளையள்.. வேதனைப்பட வேண்டிய விசயமும் கூட!

**அருமைத்தம்பி**




சி.குமார் -Biel - சுவிஸ்.

- *உம்முடைய புத்தாண்டு சபதம் என்ன குப்தனாரே?*
- நான் சபதம் எதுவும் எடுத்துக் கொள்வதில்லை.

இ.திருஞான மூர்த்தி - பொபினி, பிரான்ஸ்.

- *காதலுக்கு மரியாதை படம் ஐரோப்பாவில் நான்கு ஐந்து காட்சிகள் என்று அமோகமாக ஓடுவதேன் குப்தனாரே?*
- இளைய தலைமுறையினரின் உணர்வுகளாயும் பெற்றோரின் அல்லது உடன் பிறந்தோரின் விருப்பங்களையும் எந்தவித மான மரபு மீறலும் இல்லாமல் எவ்வாறு சமரசப்படுத்தி- அலைகள் ஓய்வதில்லை, சின்னத் தம்பி, செம்பருத்தி படவகைய றாக்களில் வந்த கதைகளை ஒன்றுதிரட்டி புதுக்கதைசெய்து எப்படி காசு சம்பாதிக்கலாம் என்று தெரிந்துகொண்டு, அந்தப் படத்தின் இயக்குனர் - தயாரிப் பாளரின் வியாபாரத் தந்திர மும் நடைமுறை வாழ்வில் காதல் இன்றும் கானல் நீராகவே இருக்கும் புகலிட இளைஞர்களின் ஏக்கமும்தான் அதற் குக் காரணம்.

க. மகேந்திரன் -சுட்காட், ஜேர்மனி.

- *மேற்குலக விஞ்ஞானிகள் சந்திரனில் மனிதர்களை குடியேற்ற முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்ற இக் காலத்தில் சந்திரன் தேய் பிறையாகத் தெரிவதற்குக் காரணம், பிள்ளையார் கொடுத்த சாபம் - அதாவது பிள்ளையார் நடனமாடியதைப் பார்த்து சந்திரன் சிரித்ததால் அவர் சாபம் கொடுத்து விட்டார் என்று நமது பிள்ளைகளுக்கு சொல் லிக்கொடுப்பது சரியா?*
- நடனமாடியதைப் பார்த்து சிரித்த சந்திரனுக்கு சாபம் கொடுத்த பிள்ளையாரால்- அவரது கோயில் களில் குண்டு போடும் சிங்கள இராணுவத்திற்கும், அவரது சிலையை தூக்கி கடலில் வீசி விட்டு 'கண தெய்யோ நாண்ட கீய' - (பிள்ளையார் குளிக்கப் போய்விட்டார்) என்று எழுதி வைக்கும் சிங்கள இன வெறி யர்களுக்கும் ஏன் சாபம் கொடுக்க முடியவில்லை என்பதை சிந்தித்துப் பார்த்தால்... இப்படிச் செய்வது சரியா பிழையா என்பது புரியும்!

மு.மணி- சூரிச், சுவிஸ்.

- *ஈழமுரசின் 2000 ஆண்டுப் பதிப்பு தமிழீழத்தின் சுதந்திர தினப் பதிப்பாக இருக்குமா?*
- உலகெங்குமுள்ள தமிழர்கள் மனது வைத்தால் உமது ஆசை நிறைவேறும்!

க. சரவணமுத்து - பேர்ண், சுவிஸ்.

- *கூட்டணியினரின் பேட்டிகளை எதற்காக ஈழமுரசில் பிரசுரிக்கின்றீர்கள்?*
- போராளிகளும் மக்களும் செய்த தியாகங்களை இந்தக் கனவான்கள் எப்படி ஏலம் போட்டு விற்கிறார்கள் என்பதை அவர்களது வாய்மொழி மூலமாகப் பதிவு செய்வதற்காக.


கிருஷ்ணா அச்சகம்

விலைகள் குறைவு!
குறித்த தவணை!!
தரமான வேலை!!!

London Models திருமணஅழைப்பிதழ்கள்!
உங்கள் தேர்வுக்காக 200ற்கும் மேற்பட்ட மாதிரிகள்....

சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்,
மொழிபெயர்ப்புத் தேவைகளுக்கும்...

Imprimerie KRISHNA
73, Rue Doudeauville, 75018 Paris.
M°: Marcadet Poissonniers / Château Rouge

மொழிபெயர்க்கப்பட்ட உங்கள் ஆவணங்கள்
மீளப்பெறும் வகையில்,
ஐந்து வருடங்கள் வரை எங்கள் கொம்பியூட்டர்களில்
பாதுகாத்து வைக்கப்படுகின்றன...

உங்கள் கலர்வேலைகளை எங்கள்
அச்சியந்திரங்களில் நாங்களே அச்சிடுகிறோம்!!

வெளிநாடுகளிலிருந்து அச்சுப்பதிப்பு வேலைகளை
எம்மிடம் செய்துகொள்ளவிரும்புவர்கள்
தபாற்பொதி மூலமும் பெற்றுக்கொள்ளலாம்!

Tél : 01 42 51 29 92
Fax. : 01. 42. 51. 35. 25




## 'இளையராஜாவிடமிருந்து உங்களுக்கு'

*– வளர்ச்சி காணும் புதிய வர்த்தகத் துறை –*

நீங்கள் ஒரு இசைப்பிரியன்; இல்லை; சராசரி ரசிகன். உங்கள் கடுமையான வேலைப்பளு மத்தியில் ஓய்வான நேரமொன்றில் உங்கள் கணினியில் உங்களுக்கு ஒரு தகவல் வந்திருப்பதைப் பார்க்கிறீர்கள். உடனடியாக அதனை திறந்தபோது அது 'இன்று' காலைதான் இளையராஜா இசையமைத்த 'தாலாட்ட வருவாளா' போன்றதொரு இனியமெட்டு. உடனடியாக சில நிமிட நேரத்தில் அந்த இசைத்தட்டு முழுமையாக உங்கள் கணினிக்கு வருமாறு நீங்கள் உத்தரவிட, இளையராஜா அதனை நேரடியாக உங்களுக்கு அனுப்பி வைக்கின்றார். நீங்கள் அவ் இசைத்தட்டுக்காக 'லாச்சப்பலுக்கு' வரத் தேவையுமில்லை. விபரம் தெரியாமல் இசைத்தட்டொன்றை வாங்கத் தேவையுமில்லை.

இது சாத்தியமாவது, 2001-ம் ஆண்டு. இவ்வாறான உங்களுக்கும் இளையராஜாவிற்கும் இடையேயான நேரடி வர்த்தகம் 1.7 பில்லியன் டொலர்களுக்கு இடம்பெறும் எனக் கணிப்பிடப்படுகின்றது.

தற்போது வளர்ச்சியடைந்த நாடுகளில் உயர் தகவல் பரிமாற்ற சமூகத்தினுள் 71 மில்லியன் டொலர்களுக்கு இடம்பெறும் வர்த்தகம் உலகம் பூராகவும் வெகு வேகமாகப் பரவி வருகின்றது.

6 வருடங்களுக்குமுன் ஒரு 3 நிமிடப் பாடலை உங்கள் கணினிக்கனுப்ப 14 மணிநேரம் எடுத்ததால் இருந்த தயக்கம், புதிய விரைவான 'மொடம்கள்' பாவனைக்கு வந்ததால் காணாமல் போயுள்ளது. ஒரு பாடலை புதிய மொடம்கள் 12 நிமிடங்களில் உங்களிடம் தந்துவிடும். நவீன ISDN எனப்படும் டிஜிட்டல் தொலை தொடர்பு மூலம் 3 நிமிடங்களில் 3 நிமிடப் பாடலைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந் நேரடி விற்பனை சில்லறை இசைத்தட்டு விற்பனை மையங்களை மூடிவிடும் அபாயத்தை எதிர்காலத்தில் கொண்டுள்ளது. இலட்சம் தலைப்புக்களில் இசைத்தட்டுக்கள் வெளிவரும் இன்றைய காலகட்டத்தில், ஒரு இசைத்தட்டு சில்லறை விற்பனை மையத்தில் அவற்றை முழுமையாக வைத்திருப்பது சாத்தியமற்றது. ஆனால் ஒரு கணினி முறை சராசரி 200,000 தலைப்பு வரை சேமித்து விரும்பியதை உங்களுக்குத் தரும்.

புத்திசாலி நிறுவனங்கள், தற்போது மில்லியன் வேறுபட்ட இசைத் தட்டுகளை கணினியால் கட்டுப்படுத்தப்படும் ஒலிப்பதிவு இயந்திரத்தில் நிரப்பி, வாடிக்கையாளனை விரும்பியதை நேரடியாக 4 நிமிடங்களில் நிரப்புமாறு கோருகின்றன. 4 நிமிடங்களில் 45 நிமிடப்பாடலை ஒலிப்பதிவு செய்யலாம்.

மீண்டும், உங்கள் கணினிக்கு இளையராஜா புதிய இசை ஒன்றை அனுப்பி, உங்களைத் 'தாலாட்டுவதாக' கற்பனை பண்ணிப் பாருங்கள்...!

## ஸ்ரீவ் குரோவ்: நுண் அலகுகளின் பிரமிப்பு

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஸ்ரீவ் குரோவ் தலைமை தாங்கும் Intel நிறுவனம் 1968-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனாலும் குரோவ்வின் தலைமையில்தான் அதன் உண்மையான 'பிறப்பு' ஆரம்பமாகியது.

1981-ல் IBM முதலாவது PC யை உலகிற்குத் தந்தபோது 83 மில்லியன் PC களை அந்த வருடம் அது உற்பத்தி செய்யுமாறு வாடிக்கையாளர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டது. அவற்றில் 90 வீதம் சிப்புக்களை குரோவ்வின் INTEL நிறுவனமே வழங்கியது. இன்று கைத்தொலைபேசி முதல் அனைத்து கணினி மயப்படுத்தப்பட்ட பொருட்களினதும் சிப்புக்களை Intel உருவாக்கி உள்ளது. இன்று Intel தனித்து ஒரு அமெரிக்க அதிசயமல்ல. மாறாக உயர் வர்த்தக அதிசயமாக உருவாகிவிட்டது.

இன்று ஸ்ரீவ் குரோவ் அனைத்து தகவல் யுகத்து செயற்பாடுகளையும் தீர்மானிக்கின்றார். ஏனெனில் அதன் மையமான சிப்புக்களை (Chip) வெளியிடும் திகதியை தீர்மானிப்பவர் அவர். இதனால் இவரது நிறுவனத்தின் மதிப்பு தினசரி அதிகரித்து வருகிறது. 5 வருடங்களுக்கு முன் 10,000 டொலர்கள் அவரது நிறுவனத்தில் முதலிடப்பட்டிருந்தால், இவ்வருட மதிப்பு அதற்கு 90,000 டொலர்களாகும்.

02 செப்டெம்பர் 1936 இல் ஒரு பால்காரனுக்கு மகனாகப் பிறந்த ஸ்டீவ் குரோவின் இளமைக் காலம் கடுமையானதாக இருந்தது. 2-வது உலக யுத்தத்தின் பாதிப்பில் இருந்து விடுபட்ட யூதரான இவர், ஹங்கேரியில் கம்யூனிச கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுத்து இரகசியமாக தன் பாடசாலை நண்பர் ஒருவருடன் ஒஸ்திரியாவுக்குள் நுழைந்தார். 20 வயதில் நியுயோர்க்கிற்குள் சென்ற குரோவ் தன்னை அமெரிக்காவுக்கு வேண்டத்தகாதவர் என அன்று நினைத்ததாக இன்று கூறியுள்ளார். 1960 இல் அவர் பட்டதாரியாகியபோது அது நியூயோக் டைம்ஸின் கவனத்தை ஈர்ந்தது. குரோவின் அலாதியான திறன் வெளிப்படத் தொடங்கியது.

1957 இல் விடுமுறைகால வேலையில் இருந்தபோது தன்னுடன் பணிபுரிந்த மற்றுமொரு அகதியான ஈவா எனும் பெண்ணை காதலித்து 1958 இல் மணந்துகொண்டார். தன் உயர் கல்விக்கு பின் Fair child எனும் கல்வி நிறுவனத்தில் இணைந்த குரோவ் அங்கு தன் பிற்கால குரு Gordon Moore ஐ கண்டார். 1968 இல் Intel உருவானபோது Gordon Moore உடன் குரோவ் Fair Child விட்டு விலகி Intel இல் இணைந்தார்.

*திருத்தம்: 'ஸ்ரீவ் குரோவ் நாசிப்படைகளினால் விரட்டப்பட்டார்' என சென்ற வாரம் தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் நாசிகளால் பாதிக்கப்பட்ட தனது குடும்பத்தைவிட்டு அமெரிக்க கரைகளில் தஞ்சமடைந்தார்.*

(தொடரும்)

- ராஜா

## நாணயமாற்று விகிதம்

| | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| பிராங்பேட் | 1.83 | 2.99 | — | 0.30 | 1.24 |
| சூரிச் | 1.47 | 2.41 | 0.81 | 0.24 | — |
| பாரிஸ் | 6.13 | 10.01 | 3.35 | — | 4.14 |
| லண்டன் | 0.61 | — | 0.33 | 0.10 | 0.41 |
| நியூயோர்க் | — | 1.63 | 0.54 | 0.16 | 0.67 |
| பம்பாய் | 38.50 | 62.87 | 21.02 | 6.27 | 26.02 |
| கொழும்பு | 62.10 | 101.40 | 33.90 | 10.12 | 41.98 |

## டிஸ்னிக்கு சவால்விடும் Anastisia வின் இளவரசி

'டிஸ்னி' சிறுவர்களின் கனவுகளுக்கு வடிவம் கொடுக்கும் வர்த்தகர்கள், காட்டூன் மூலம் சிறுவர்களின் கனவுலகை விரியவைத்து தமது வர்த்தக சாம்ராஜ்ஜியத்தையும் விரிய வைப்பவர்கள்.

இவ் வர்த்தகர்களது காட்டூன் சாம்ராஜ்ஜியத்தில் தமது புதிய வெளியீடு மூலம் Fox Animation Studios வினர் கால் பதித்துவிட்டனர். ரோமர்களது இளவரசி பற்றிய ஒரு கனவை 'Anastasia எனும் காட்டூன் திரைப்படம், டிஸ்னியின் திரைப்படம் போன்ற பிரமிப்பை ஏற்படுத்துகின்றது என விபரிக்கப்படுகிறது.



டிஸ்னியின் வர்த்தக ஆதிக்கத்தை உடைக்க Fox உடன் Warner Bros மற்றும் SKG என்பன காட்டூன் தயாரிப்பில் இறங்கியுள்ளன.

ஆயினும் டிஸ்னி காட்டூன் உலகின் மூத்த வர்த்தகர்கள் என்பதும், அவர்களது படைப்புக்கள் சிறுவர்களால் இனம் காணப்பட்டவை என்பதும் போட்டியாளர்களினால் போட்டியிட முடியாத விடயமாகியுள்ளது. டிஸ்னியின் The Lion King 313 மில்லியன் டொலர்களை அமெரிக்காவில் சம்பாதித்தது. அதுவே காட்டூன் உலகின் அதிக இலாபம் ஈட்டிய படமாகும்.

## புற்றுநோய்க்கு சிகரெட் நிறுவனங்களின் 14.5 பில்லியன் டோலர் நட்டஈடு

Texas மாநில அரசிற்கு 14.5 பில்லியன் டொலர்களைக் கொடுத்து புகைப்பிடிப்பதால் ஏற்படும் மருத்துவப் பாதிப்புக்களுக்கு சிகரெட் நிறுவனங்கள் நஷ்டஈடு செலுத்தியுள்ளன. புகைப்பிடிப்பதால் ஏற்படும் புற்றுநோய் மற்றும் மருத்துவ குறைகளுக்கு எதிராக போராடும் பொதுமக்கள் அமைப்புக்களின் நெருக்கடி காரணமாக சிகரெட் நிறுவனங்கள் மீது அமெரிக்க அரசுகள் தொடுத்துவரும் பேராட்டமானது இவ்வாறான நிதி அன்பளிப்புகள் மூலம் நீதிமன்றத்திற்கு வெளியில் தீர்க்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்க காங்கிரசானது அமெரிக்காவிலுள்ள அனைத்து சிகரெட் நிறுவனங்களிடம் இருந்தும் மருத்துவ பாதுகாப்பிற்காக 368.5 பில்லியன் டொலர்களை நஷ்டஈடாக பெறுவதற்கு முயன்றுவரும் இவ்வேளையில், Texas மாநிலம் இப்புதிய உடன்பாட்டிற்கு இணங்கியுள்ளது. எனினும், புகைப்பிடிப்பதால் ஏற்படும் குறைபாடுகளை சிகரெட் நிறுவனங்கள் தரும் நஷ்டஈடுகள் மூலம் ஈடுகட்ட முடியுமா என்பது கேள்விக்குரியது. ஏனெனில், புற்றுநோய்க்கான பிரதான காரணம் புகை பிடித்தலேயாகும். புற்றுநோயை இவ் 14.5 பில்லியன் டொலர்கள் குணப்படுத்துமா?

RAC Radio Asia Canada RAC

ஐரோப்பிய நாடெங்கும் 24 மணிநேரமும் தமிழ் மணம் பரப்பிவரும்

Radio Asia Canada

மாபெரும் ஆரம்பம்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் மத்திய கிழக்கு நாடெங்கும்!!
February 1ம் திகதி முதல் ஆரம்பமாகும் இந்த 1 மணிநேர நிகழ்ச்சியை,
ஐரோப்பிய நாடெங்கும் GMT 14:30 முதல் 15:30 வரை Astra Satellite
Channel 7, Audio Channel 7.38Mhz இல் கேட்கலாம். கனடாவில் 9:30 A.M-
10:30 A.M Internet சேவையிலும் இலங்கை நேரப்படி இரவு 8:30- 9:30 வரை
Short Wave 25 இலும் கேட்கலாம்.

மாபெரும் ஆரம்பம்

எமது சேவை தற்போது சிங்கப்பூர் "ஒலி" வானொலி 96.8FM அலைவரிசையில் ஒலிபரப்பாகின்றது. சிங்கப்பூர் 'ஒலி' வானொலியும்
R.A.C. இல் ஒலிபரப்பாகின்றது.

வெகுவிரைவில்

கனடாவிலும் R.A.C. இன் 18 மணிநேர தமிழ் ஒலிபரப்பு அத்துடன்
அவுஸ்திரேலிய நாடெங்கும் 24 மணிநேர தமிழ் ஒலிபரப்பு. உலக
நாடெங்கிலும் இருந்து இசையும், கதையும், நாடகங்கள், கட்டுரைகள்,
கவிதைகள் போன்ற பல வேறுபட்ட படைப்புகளும் வரவேற்கப்படுகின்றன

உங்கள் தயாரிப்புகளை cassette இல் ஒலிப்பதிவு செய்தும் அனுப்பலாம்
முக்கிய குறிப்பு: சமயம், நம் நாட்டுக் கலாச்சாரம், உள்நாட்டுக் கலைஞர்
வளர்ச்சி, கர்நாடக சங்கீதம், நாடகத்தயாரிப்புகள், மற்றும் எமது கலை,
கலாச்சார வளர்ச்சியை மையமாக வைத்து தயாரிக்கப்படும்
தயாரிப்பாளர்களிற்கு ஒலிப்பதிவு, ஒலிபரப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளிற்கு:
RADIO ASIA CANADA,
680 Progress Avenue Unit 01, Scarborough, Ontario, M1H3A5
Canada.
Tel: 001.416.289.1522 - Fax: 001.416.289.1840

சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்




| | |
|---|---|
| இந்தியா | 30 நிமிடம் |
| கனடா | 80 நிமிடம் |
| தாய்லாந்து | 23 நிமிடம் |
| ஹொங்கொங் | 45 நிமிடம் |
| பிரான்ஸ் | 135 நிமிடம் |
| இலங்கை | 28 நிமிடம் |
| சுவிஸ் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 28 நிமிடம் |
| சிங்கப்பூர் | 45 நிமிடம் |

| | |
|---|---|
| பிரித்தானியா | 100 நிமிடம் |
| அமெரிக்கா | 100 நிமிடம் |
| ஜேர்மனி | 75 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 32 நிமிடம் |
| அல்ஜீரியா | 50 நிமிடம் |
| மொரோக் | 50 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 80 நிமிடம் |

**இலங்கைக்கான தொடர்பு நேரம் 28 நிமிடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது**

தொடர்புகளுக்கு:

**Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14**

## GNANAM
## Telecom Center

195, Rue du Fg. Saint Denis.
75010 Paris, France.
Tel: 01 46 07 09 36
Fax: 01 46 07 00 14
**M°: La Chapelle / Gare du Nord**

**பாரிஸ் 18-ல்**

13, Rue de Suez,
75018 Paris.
Tel: 01 42 52 32 52
Fax: 01 42 52 34 52
M°: Château Rouge

**பாரிஸ் 20-ல்**

38, Rue de Belleville
75020 Paris.
Tel: 01 40 33 36 72
M°: Concourt

**பாரிஸ் 11-ல்**

175, Rue de St.Maur,
75011 Paris.
Tel: 01 43 38 22 98
M°: Belleville

**பாரிஸ் 10-ல்**

83, Rue du Fg. St.Denis
75010 Paris.
M°: Château d'eau

**வெகுவிரைவில்**

**சுவிஸ், லண்டனில் எமது சேவை ஆரம்பமாகின்றது!**

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

(24ம் பக்கத் தொடர்ச்சி)

**மட்டக்களப்பில்....**

இராணுவ வழங்கல் பாதையில் அமைந்திருந்த இம் முகாம்கள் மீது ஏக காலத்தில் பாரிய தாக்குதல்கள் நடாத்தப்பட்டமை இதுவே முதற்தடவை என்பதை ஒத்துக்கொண்ட படைத்தரப்பு, புலிகளின் நோக்கம் இராணுவ விநியோகப் பாதையினைத் துண்டிப்பதுதான் எனவும் குறிப்பிட்டுள்ளனது.

(24ம் பக்கத் தொடர்ச்சி)

**கிளிநொச்சியில் குண்டுவீச்சு....**

கிளிநொச்சி மத்திய கல்லூரியும் விமான குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டுள்ளதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்ததாக எமது வன்னி நிருபர் அறிவித்துள்ளார்.

(24ம் பக்கத் தொடர்ச்சி)

**நம்புங்கள் தமிழீழம்....**

பெற்ற பொதுக் கூட்டத்தில் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒன்ராறியோ மாநில சபை உறுப்பினர்கள் ஆகியோர் உரையாற்றினர். கனேடிய அரசு, உலகத் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த திரு. சுரேஸ் அவர்களை நாடு கடத்த எடுக்கும் நடவடிக்கைக்கு பேச்சாளர்கள் பலரும் பலத்த கண்டனத்தை தெரிவித்தனர்.

(24ம் பக்கத் தொடர்ச்சி)

**குவியும் சிப்பாய்களின்....**

செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரையில் 54 சிப்பாய்களின் சடலங்கள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டுள்ளன. இவற்றினை பொறுப்பேற்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(24ம் பக்கத் தொடர்ச்சி)

**லண்டனில் திரண்ட....**

பட்ட இப் பேரணி காலை 11.30 மணியளவில் 'மார்பில்' வளைவிலிருந்து ஆரம்பமாகி 'பார்க்' வீதியூடாக 'ற்ரபெல்கர்' சதுக்கத்தினை சென்றடைந்தது.

ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் விடுதலைப் புலிகளின் இலச்சினைகளைத் தாங்கிய கொடிகளையும், பதாகைகளையும் காவிச் சென்றதுடன் சிறீலங்கா அரசுக்கெதிரான தமது கண்டனக் கோசங்களையும் எழுப்பினர். ஊர்வல முன்றலில் தமிழீழ தேசியத் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் உருவப் படத்தினைத் தாங்கியவண்ணம் சென்றனர். ஊர்வலத்தில் பெருந்தொகையான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. இவற்றை பெருமளவு பிரித்தானிய மக்களும், உல்லாசப் பயணிகளும் ஆர்வத்துடன் வாங்கிப் படித்தனர்.

பின்னர் நடந்த பொதுக் கூட்டத்தில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. நெயில் ஜெராட், திரு. சிமோன் கூகெஸ், திரு. ஜெரமி கோர்பன், வணபிதா எஸ். ஜே. இமானுவேல் ஆகியோர், சிறீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு புரியும் கொடுமைகளை கண்டித்தும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும் உரையாற்றினர்.

இதேவேளை இப் பேரணி பற்றிய செய்திகளை அமெரிக்க சி.என்.என். தொலைக்காட்சியும் முக்கியம் கொடுத்து ஒளிபரப்பியது குறிப்பிடத்தக்கது.

# தமிழர் இராச்சியத்தை சிங்களஅரசிடம் ஒப்படைத்தது பிரித்தானியாவின் தவறு

## – பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் –

இலண்டனில் கடந்த 1ம் திகதி நடைபெற்ற மாபெரும் பேரணியின் முடிவில் உரையாற்றியவர்களுள் ஒருவரான, பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிமோன் கூகெஸ், 50 வருடங்களுக்கு முன்னர் பிரித்தானியா இலங்கையை விட்டு வெளியேறியபோது, தமிழர் இராச்சியத்தினை சிங்கள பகுதிகளுடன் இணைத்துவிட்டு வந்தமையைக் கண்டித்தும் இதற்கான முழுப் பொறுப்பும் பிரித்தானியர்களையே சாரும் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்கையில், தான் இந்த வருடத்தில் பிரித்தானியாவிற்கு விஜயம் செய்ய இருப்பதாகவும் அந்த வேளையில் சிறீலங்கா அரசிடம் யாழ்ப்பாணம், திருமலை ஆகிய இடங்களின் கண்ணோட்டத்தினை தெளிவாக கூற இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.


Restaurant

விற்பனைக்கு

நல்ல நிலையில்,
92300, Levallois Perret-ல்
45 இருக்கைகளுடன்
கூடிய Restaurant
விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
0146285134
அல்லது
0143049968



பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

CENTRE PARISIEN D' EDUCATION POUR LES TAMOULS

புதிய பிரெஞ்சு வகுப்பு
ஆரம்பம்: 07.02.98
பிற்பகல் 2.30 மணி
சுரேஷ்

புதிய ஆங்கில வகுப்பு
ஆரம்பம்: 07.02.98
மாலை 5.30 மணி
ரொனி


புதிய தையல் வகுப்பு
ஆரம்பம்: 07.02.98
பிற்பகல் 2.30 மணி

உங்கள் பதிவுகளுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
165, Rue de Charonne, 75011 Paris.
M°: Alexandre Dumas ou Charonne



இலண்டனில்
நகைத் தெரிவுகளுக்கு
ராஜு பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887


## ஒரு வரலாறு எழுந்து பத்தாண்டுகள்



பூ விரிந்தது போல சிரித்ததும்
போர் முகத்திலே போய்
திரிந்ததும்
சா விழுங்கிய சரித்திரம்
ஆகுமோ
சந்தம் வழிந்த கவிதை
கிழியுமோ
எங்கள் வானிலே எழுந்த
கதிரவன்
இன்று விழுந்து இருளில்
மறையுமோ
தங்க மேனியை தீக்கதிர்
சூழுமோ
தணலில் வேகுமோ சாம்பலும்
பூக்குமோ!

**மேஜர் பிரசாத்**

*கந்தையா முரளிதரன்*
(மூளாய், வட்டுக்கோட்டை)

பிறப்பு: 18.09.1962
வீரச்சாவு 06.02.1988

மாவீரன் திலீபன் உடலழிந்தபோது அவன் பணியை பொறுப்பேற்று தேசத்து தெருவெங்கும் விடுதலை பூபாளம் பாடிய மேஜர் பிரசாத் (கந்தசாமி முரளீதரன்) மறைந்து பத்தாண்டு கடந்துவிட்டது.

அம் மாவீரன் காலடியில் எம் வணக்கத்தை தலைகுனிந்து சமர்ப்பிக்கிறோம்.

- நண்பர்கள்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 14.03.1908



உதிர்வு: 08.02.1988

**திருமதி ஆரோக்கியம் சந்தியாப்பிள்ளை**

(குருநகர் – யாழ்ப்பாணம்)

யாழ். குருநகரைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி ஆரோக்கியம் சந்தியாப்பிள்ளை எம்மையெல்லாம் ஆறாத்துயரில் வீழ்த்திச் சென்ற 10-ம் ஆண்டு நினைவஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இவர் பிலோமினா, வேவி, சகோதரி பிலிஸ்கா (காலம் சென்ற), சிலுவைதாசன், யேசுராசா, யஸ்ரின் அப்பர் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜோசப் ஜேம்ஸின் அன்பு மாமியாரும் எமில்-தங்கம் (இலங்கை), மேரி றோஸ்-பாலா (இலங்கை), சிசில் கிளமெள்ரைன்-மேரி ஜோசெப்பின் (நோர்வே), நிர்மலா- கிறிஸ்துராசா (நோர்வே), பசில்-மேரி குளோறியா (நோர்வே), குளோட்டில்டா - உதயகுமார் (கனடா) நைல்ஸ்-ஜொய்சி (நோர்வே), மேரி ஜோசெப்பின்- சேகர் (இலங்கை), பிறிஸ்கா-சிவபாலன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறார்கள்.

தகவல்: திரு. ஜேம்ஸ் பசில் (நோர்வே)

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05.09.1949



மறைவு: 01.02.1998

**அமரர் தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்**

(இளையதம்பி - மருதங்கேணி)

*அன்புதனை அருவியாக்கி*
*பார்போற்ற வாழ்ந்திட்ட பாசமிகு தந்தையே!*
*ஆண்டு நான்கு சென்றிடினும்*
*மறைந்திடுமோ நின் மலர்ந்த முகம்*
*எம் வாழ்வின் ஒளிவிளக்கே!*


உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி இராசலட்சுமி – பிள்ளைகள் சிறீவரதன், அச்சுதன்,
வாசுகி, சிறீகரன், மணிவண்ணன், அகிலன், நிமலன் – மருமகன்
சாந்தகுமார் – தம்பிமார் தனபாலசிங்கம், இராசலிங்கம்,
யோகராசா மற்றும் மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்

தகவல்: சு. சிறீவரதன் – ஜெனீவா

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

AYNGARAN ENTERPRISES & VIDEO
பசுமையான மரக்கறி வகைகள் மளிகைப் பொருட்கள்
ஐரோப்பிய ரீதியில் தெளிவான, தரமான, ஒரிஜினல்
வீடியோக்களை குறைந்த விலையில் வழங்குபவர்கள்
AYNGARAN VIDEO
80, BURLINGTON ROAD, NEW MALDAN
SURREY, KT3 4NU, ENGLAND
Tel: 0181 - 9421561
Fax: 0181 - 2968778



# 'நம்புங்கள் தமிழீழம் நாளை கிடைக்கும்'
## றொறன்ரோ நகரில் 30 ஆயிரம் மக்கள் கோசம்

தமிழினப் படுகொலையில் ஐந்து தசாப்தங்களை கடந்து விட்ட சிறீலங்கா அரசின் பொன்விழாக் கொண்டாட்டங் களை கண்டித்தும், விடுதலைப் புலிகளை ஆதரித்தும் கனடா வாழ் தமிழ் மக்கள் சுமார் 30 ஆயிரம் மக்கள் கடந்த ஞாயிற் றுக்கிழமை றொறென்ரோ நகரில் மாபெரும் பேரணி ஒன்றை நடாத்தியுள்ளனர்.

கனடா தமிழர் சங்கங்களின் கூட்டமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் விடுத லைப் புலிகளுக்கு தமது உணர்வு பூர்வமான தமது ஆதரவினை வெளிப்படுத்தியுள்ளனர்.

முன்னதாக, இப் பேரணியில் கலந்துகொள்ளவென கனடா வின் ஏனைய பிரதான நகரங்க ளான ஒட்டாவா, மொன்றியல் ஆகிய பகுதிகளிலிருந்து பேருந் துகளில் மக்கள் வந்து சேர்ந்த னர்.

காலை 11 மணியளவில் ஆரம் பமான இப் பேரணி நான்கு மணித்தியாலங்களின் பின்னரே முடிவுறும் இடத்தை அடைந் தது. ஊர்வலத்தில் சிறீலங்கா அரசின் கொடூரங்களை வெளிப் படுத்தும் காட்சிகளைக்கொண்ட ஊர்திகளும் இடம்பெற்றிருந் தன.

றொறன்ரோ நகர மக்கள் இப்படி ஒரு பிரமாண்டமான ஊர்வலத்தை சில வருடங்க ளின் பின் பார்க்க முடிவதாக ஆச்சரியத்துடன் தெரிவித்துள் ளனர். ஊர்வலத்தில் 'நம்புங்கள் தமிழீழம் நாளை கிடைக்கும்...' என்ற எழுச்சிப் பாடலை எல் லோரும் ஒருங்கிணைந்து இசைத் தமை ஒரு உணர்வலையினைத் தோற்றுவித்தது.

பேரணி முடிவில் நடை

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

## இலண்டனில் திரண்ட 13 ஆயிரம் தமிழ் மக்கள்

சிறீலங்கா அரசின் 50-வது சுதந்திர விழாவினை கண்டித் தும், விடுதலைப் புலிகளிற்கு தமது ஆதரவினை வெளிப் படுத்தியும் சுமார் 13,000 பிரித் தானியா வாழ் தமிழ் மக்கள் கடந்த முதலாம் திகதி இலண் டன் 'ற்ரபெல்கர்' (Trafalgar) சதுக்கத்தினை நோக்கி மாபெரும் பேரணி ஒன்றினை நடாத்தியுள் ளனர்.

பல்வேறு தமிழ் அமைப்புக் களினால் ஏற்பாடு செய்யப்

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

## கிளிநொச்சி
## ஏராளமான கனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன -புலிகள் அறிவிப்பு

வெற்றிகரமான கிளிநொச்சி படைத்தளம் மீதான தாக்குதலைத் தொடர்ந்து ஏராளமான ஆயுத தளவாடங்களை கைப்பற்றியதாக புலிக ளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. இத் தளவாடங்களின் முழு மையான பட்டியல் இதுவரை அறிவிக்கப்படவில்லை ஆயினும் இப் படைத்தளத்தின் விஸ்தீரணத்தையும், பலத்தையும் கணிப்பிடுகையில் ஏராளமான கனரக ஆயுதங்கள் புலிகளினால் கைப்பற்றப்பட்டிருக்கலாம் என வவுனியாச் செய்திகள் விபரம் தருகின்றன. இதேவேளை கொழும்பு இராணுவ ஆய்வாளர்களை ஆதாரம்காட்டி சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தம்மால் கைப்பற்றப்பட்ட பெருந் தொகையான ஆயுத தளவாடங்களை அப்புறப்படுத்துவதற்காகவே விடு தலைப் புலிகள் சண்டையை நீடித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆனையிறவுக்கு 53வது பிரிகேட்

சந்திரிகா அரசின் 'சத்ஜெய' நடவடிக்கையின் போது சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு நிலைகொண்டிருந்த கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகள் விடுதலைப் புலிகளின் தற்போதைய நடவடிக்கைகளினால் மீட்கப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்தி கள் தெரிவிக்கின்றன. செய்தி அச்சுக்கு போகும்வரை பரந்தன் கரடிப் போக்கு பகுதிவரை முன்னேறியுள்ள புலிகளின் படையணிகள் அங்கி ருந்து பரந்தன் பகுதிகளை நோக்கி தாக்குதல்களை தீவிரப் படுத்தி யுள்ளதாகவும் மேலும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்துள்ள கிளிநொச் சியை மீட்கவும், தாக்குதலால் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ள படையின ரையும் மீட்பதற்காக 53 படைப்பிரிவு விமான மார்க்கமாக ஆனை யிறவுக்கு அனுப்பப்படுவதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆனையிறவு கோபுரம் தகர்ப்பு

ஆனையிறவு இராணுவத் தள வலையத்தினுள்ளே அமைந்திருந்த தொலைத் தொடர்புக் கோபுரம் கடந்த 1-ம் திகதி மாலை விடுதலைப் புலிகளின் கொமாண்டோ படையணியினால் வெற்றிகரமாக தகர்க்கப் பட்டுள்ளது. இந்த தொலைத் தொடர்புக் கோபுரம் தகர்க்கப்பட்டுள்ள தால் யாழ்ப்பாணத்திற்கான தொலைபேசி தொடர்புகளும், பலாலி இரா ணுவ தளத்துடனான தொடர்புகளும் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன.

## மட்டக்களப்பில் இராணுவ முகாம் அழிப்பு
## இராணுவ விநியோகம் கேள்விக்குறி

மட்டக்களப்பு மாவட்டத் தில் விடுதலைப்புலிகளின் சிறப் புப் படையணிகள் கடந்தவாரம் ஏககால பாரிய தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இத் தாக் குதலின்போது மட்டு- கொழும்பு வீதியில் அமைந்திருந்த வாக னேரி முகாம் முற்றாக அழிக் கப்பட்டதுடன், 10-இற்கும் மேற் பட்ட சிப்பாய்கள் பலியாகி னர். 11 சிப்பாய்கள் படுகாயம டைந்தனர். கடந்த 27-ம் திகதி யன்று இரவு 9.15 மணியளவில் வாகனேரி முகாமினை சுற்றி வளைத்த விடுதலைப் புலிகள், முகாம் மீது பலத்த தாக்குதலைத் தொடுத்தனர். முகாமினை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த புலிகள் அங்கிருந்த ஆயுத தளவாடங்களை அப்புறப்படுத் திய பின்னர் முகாமினைத் தீ வைத்து அழித்தனர்.

இம் முகாம் மீது தாக்குதல் நடைபெற்ற ஏக காலத்தில் விடுதலைப்புலிகளின் பிறிதான அணிகள் வாழைச்சேனை பிர தான முகாம், நாவலடி முகாம், மீன்பிடித் துறைமுக முகாம், புருதனைப்படை முகாம் ஆகிய வற்றின் மீது கடுமையான எறி கணைத் தாக்குதல்களை நடாத் தினர். ஏக காலத்தில் நடந்த இத் தாக்குதல்களினால் நிலை குலைந்த இராணுவத்தினர் முகாம்களிலிருந்து காடுகளுக் குள் ஓடிச்சென்றுள்ளனர்.

மட்டு மாவட்டத்திற்கான

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

## கிளிநொச்சியில் குண்டுவீச்சு

கிளிநொச்சியில் முன்னர் இராணுவம் தங்கியிருந்த நிலை கள் மீது சிறீலங்கா விமானப் படையினர் கண்மூடித்தனமாக குண்டு வீச்சுக்களை நடாத்தி வருவதாக வன்னி செய்திகள் தெரிவித்துள்ளன. இந்த குண்டு வீச்சுக்களால் கட்டடங்கள் பல வும் அழிக்கப்பட்டுள்ளன.


(தொடர்ச்சி 23ம் பக்கம்)

## குவியும் சிப்பாய்களின் சடலங்கள்

கிளிநொச்சி இராணுவத் தள வளாகம் விடுதலைப் புலி களினால் தாக்கியழிக்கப்பட்ட போது கொல்லப்பட்ட சிப்பாய் களின் சடலங்களை விடுதலைப் புலிகளின் அணிகள் சேகரிப்ப தில் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக வன்னிச்

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

ஈழமுரசு
பிரித்தானியா
சந்தா விபரம்
தபாற் செலவுடன்:- 52 - வாரங்களுக்கு £60 (520Frs.)
26 - வாரங்களுக்கு £30 (260Frs.)
தொடர்புகளுக்கு:
ஜெயந்தன் - 09 56 90 81 45 / குணம் - Tel: 09 56 27 77 18
E.Mail - eelamurasu@aol.com
'ஈழமுரசு உங்கள் பத்திரிகை; நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஈழமுரசினை அறிமுகப்படுத்துங்கள்








# ஈழமுரசு

Eelamurasu Weekly

விசேட இணைப்பு



1948 பெப். 4 – அதிகாரம் கைமாறல்

"அந்நிய ஆட்சியால் பிணைக்கப்பட்ட சிங்கள நாட்டினமும், தமிழ் நாட்டினமும் இன்று வரை பிணைக்கப்பட்டுள்ளமையால் சுதந்திர இலங்கையின் அரசுகள் அனைத்தும் சிங்கள நாட்டினத்தை ஆக்கிரமிப்பு நாட்டினமாக ஊக்குவித்து வளர்த்ததன் பயனாக இப்போதுள்ள அரசியல் யாப்பு ஒருதலைப்பட்சமாகத் தீர்மானிக்கப்பட்டு தமிழ்நாட்டினம் ஆளப்படும் நாட்டினமாக ஆக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை இடைத் தேர்தல் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை விடுதலை பெற்ற இறைமை உடைய மதச் சார்பற்ற சமதர்ம நாடான தமிழீழத்தை அமைப்பதற்குரிய ஆற்றல் உரிமையாக ஏற்றுக்கொள்வதென இப் பேரவை தீர்மானிக்கின்றது."

– 1976 பெப். 4 இல் சிறீலங்கா பாராளுமன்றத்தில் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் கொண்டுவந்த தமிழீழப் பிரேரணை.





இனக்கலவரம் – உயிருக்கு மன்றாடும் அரும்புகள்





பண்டா – செல்வா ஒப்பந்தம்



சிங்கள இனவெறி இரத்த சாட்சி (வல்வை)

"நாங்கள் சமாதானத்தின் எதிரிகளோ அதற்கு விரோதமானவர்களோ அல்ல; நாங்கள் விரும்புவது நீதியானதும் நேர்மையானதுமான சமாதானமே. சிறீலங்காவில் ஆட்சிக்கு வந்த எந்த அரசும் இத்தகைய சமாதானத்தை தமிழ் மக்கள் கௌரவத்தோடும் சுய மரியாதையோடும் வாழ்வதற்குரிய சமாதானத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கவில்லை. நாங்கள் விரும்புவது தமிழ் மக்களை எல்லா விதத்திலும் மற்றவர்களுக்கு சமானமானவர்களாக வாழவைக்கக் கூடிய நீதியான சமாதானமே."

– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.



1961–ல் யாழ்ப்பாணத்தில் நடந்த சத்தியாக்கிரகம்





சிங்கள இனவெறி இரத்த சாட்சி (நவாலி)



தேசத்தை மீட்க களம் புகுந்த விடுதலைப் புலிகள்



தேசியத் தலைவரின் அரவணைப்பில் தமிழீழக் குழந்தைகள்



தலைவரின் பாதையில் தமிழீழ மக்கள்

# தமிழர் அடிமை தினம் 50 வது ஆண்டு

# பெப். 4 1998





# தமிழர் அடிமை தினம் 50 வது ஆண்டு

## 1948 பெப். 04 – 1998 பெப். 04

| சிறீலங்கா + சிங்கள மக்கள் | தமிழீழம் + தமிழ் மக்கள் |
|---|---|
| 1948 – 1949 குடியுரிமைச் சட்டத்தின் மூலம் அனைத்து சிங்கள மக்களுக்கும் குடியுரிமை –வாக்குரிமை உறுதி செய்யப்பட்டது. | தமிழ் மக்கள் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என்று பிரிக்கப்பட்டு, மலையகத் தமிழர்களின் குடியுரிமை – வாக்குரிமை பறிக்கப்பட்டன.<br>10 இலட்சம் பேர் வாக்குரிமை இழப்பு, தமிழர்கள், இலங்கையர்களா? இந்தியர்களா...? என்பதை உறுதி செய்யவேண்டியிருந்தது. |
| 1948<br>சிங்கள மக்களின் பாரம்பரியக்கொடியான வாள் ஏந்திய சிங்கக்கொடி இலங்கையின் தேசியக்கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br> | இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவாக, சிவனொளிபாத மலை பொறித்த கொடியையே தேசியக்கொடியாக ஆக்க வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. |
| 1948 –1956 திருகோணமலை மாவட்டம், மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டம், அநுராதபுர மாவட்டம், புத்தளம் மாவட்டம் ஆகிய பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. | சிங்களக் குடியேற்றவாசிகளால் தமிழ் மக்கள் (இஸ்லாமியர் உட்பட) தங்களது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து அடித்து விரட்டப்பட்டனர். அல்லது அவர்களாகவே அவர்களது நிலங்களைவிட்டு வெளியேறும்படியான செயற்கையான நெருக்கடி கொடுக்கப்பட்டது. |
| <br>1956 சிங்களமொழி, ஆட்சி மொழியாக்கப்பட்டது. சிங்கள மக்கள் தங்கள் அரசியல் உரிமையை பெற்றுக்கொண்டனர். | தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரசைகள் ஆக்கப்பட்டதோடு, தங்களது அடிப்படை அரசியல் உரிமைகள் மறுக்கப்படும் நிலைக்கும் தள்ளப்பட்டனர். சாத்வீக போராட்டம் நடத்திய தமிழர் தலைவர்கள் தாக்கப்பட்டனர். |
| 1956 இனக்கலவரம்<br>சிங்கள பௌத்த இனவெறி | 1956 இனக் கலவரம்<br>கல்ஓயா குடியேற்றப்பகுதியில் 150 க்கு மேற்பட்ட தமிழர்கள் சிங்களக் காடையர்களால் வெட்டியும் எரித்தும் கொல்லப்பட்டனர்,<br>20 க்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல். 3000 பேர் வரை அகதிகளாக்கப்படல். |
| 1958 இனக் கலவரம்<br>பௌத்த சிங்கள இனவெறித் தாண்டவம் | 1958 இனக் கலவரம்<br>1500 க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை.<br>500 க்கு மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல்.<br>25000 பேர் அகதிகளாக்கப் படல்.<br>100 கோடி ரூபா வரையிலான சொத்துக்கள் .நாசமாக்கப்பட்டல். |
| 1961 –71<br>அரச திணைக்களங்கள் நீதி மன்றங்கள் என்பவற்றில் சிங்கள மொழிப் பிரயோகம்.<br> | 1961–71<br>தமிழ் மக்கள் சிங்கள மொழியை படிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்படல். சிங்களம் படிக்காதவர்களின் தொழில் வாய்ப்புகள் பறிபோதல். தம்முடைய தாய் மொழியில் நிர்வாக வேலைக்கு தொடர்பு கொள்ள முடியாத நிலையில் தமிழ் மக்கள்.<br>தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சாத்வீக முறையில் மறியல் போராட்டங்கள் நடத்தல். இராணுவம், பொலிஸ் படையினர் மூலம் தமிழர் போராட்டங்கள் நசுக்கப்படல். தமிழர் தலைவர்களை சிறையில் அடைக்கப்படல்.<br>சிறீமாவோ– சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் மலையகத் தமிழர்கள் வலுக்கட்டாயமாக ஆடு மாடுகள் போல் நாடு கடத்தப்படும் நிர்ப்பந்தம் ஏற்படல். 6 1/2 இலட்சம் மக்கள் நாடற்றவர்களாக்கப்பட. |

# தமிழர் அடிமை தினம் 50 வது ஆண்டு

## 1948 பெப். 04 – 1998 பெப். 04

| சிறீலங்கா + சிங்கள மக்கள் | தமிழீழம் + தமிழ் மக்கள் |
|---|---|
| 1971 ஏப்ரல். சிங்கள இளைஞர்கள் ஆயுதக் கிளர்ச்சி.  | தமிழர்கள் குறிப்பாக மலையகத் தமிழர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாதல். சிங்களக் கிளர்ச்சியாளர்களால் அவர்கள் துரத்தியடிக்கப்பட வேண்டியவர்கள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கப்படல். |
|  1972 மே Ceylon என்பது சிறீலங்கா குடியரசாகுல். பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படல். தமிழ் மக்களுக்கு பாதுகாப்பளித்த சோல்பரி அரசியல் சட்டத்தின் 29–வது சரத்து நீக்கப்படல். | தமிழ் மக்கள், சிறீலங்கா 'குடியரசு ஆவதற்கு' அதாவது சிறீலங்கா குடியரசில் இணைந்திருப்பதற்கு சட்ட பூர்வமான அங்கீகாரம் வழங்கவில்லை.<br>சிறீலங்கா குடியரசானதும் 1833 கோல்புறூக் அரசியல் சட்டத்தின் கீழ் 'சிறீலங்காவையும் தமிழீழத்தையும் ஒன்றிணைத்த' இணைப்பு சட்ட ரீதியாக செல்லுபடியற்றுப்போதல். சட்டத்துக்குப் புறம்பான வகையில் தமிழீழத்தை இராணுவ பலம் கொண்டு சிறீலங்காவுடன் இணைத்தல். |
| 1972 கல்வியில் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்படல். சிங்கள மாணவர் கூடுதல் சலுகைகள் பெறுதல். | தமிழ் மாணவர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பு மறுக்கப்படுதல். |
|          | 1974 உலகத் தமிழாராட்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நெருக்கடிகள் கொடுத்தல்—மகாநாட்டுக்கு வந்திருந்த மக்கள் மீது பொலிஸ் தாக்குதல். 9 பேர் மரணம். |
| 1977 ஆகஸ்ட் இனக்கலவரம். பௌத்த சிங்கள இனவெறி.  | 3500—க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை. 500—க்கும் அதிகமான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல்.<br>50,000—க்கு மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக்கப்படல்.<br>500 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தமிழர் சொத்துக்கள் சூறையாடல் / அழிக்கப்படல். |
|  இனவெறி | 1978 –82<br>பல பகுதிகளில் தமிழர்களுக்கு எதிரான இன ரீதியிலான சிறு சிறு வன்செயல்கள்<br>300க்கு அதிகமான தமிழர்கள் கொல்லப்படல்.<br><br>1981<br>யாழ்ப்பாணம் நகரம் எரியூட்டப்படல்.<br>தமிழ் மக்களின் கலாச்சாரச் சின்னமான புகழ் பெற்ற யாழ். நூலகம் எரியூட்டப்படல். |
| 1983 ஜூலை கலவரம்<br>  <br>தங்கத்துரை குட்டிமணி ஜெகன் | 6000—க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்படல்.<br>1000—க்கு மேற்பட்ட தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல்.<br>250,000—க்கு மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக்கப்படல்<br>1000 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட தமிழர் சொத்துக்கள் அழிக்கப்படல்.<br>கொழும்பு வெலிக்கடை சிறையில் 57 தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்படுதல். |

# தமிழர் அடிமை தினம் 50 வது ஆண்டு

## 1948 பெப். 04 – 1998 பெப். 04

| சிறீலங்கா + சிங்கள மக்கள் | தமிழீழம் + தமிழ் மக்கள் |
| --- | --- |
| 1983 – 1993<br>துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் மூலமும், சுதந்திர வர்த்தக வலையங்கள் மூலமும் சிங்களப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படல்.<br> | தமிழீழப் பிரதேசங்கள் மீது யுத்தம்.<br>50,000–க்கு அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்படல்.<br>1000–க்கும் மேலான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல்.<br>பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான தமிழர் சொத்துக்கள் அழிக்கப்படல்.<br>தமிழீழப் பிரதேசங்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்படல்.<br>5 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக்கப்படல்.<br>தமிழர்கள் மீது பொருளாதாரத் தடை. |
| <br>1993 – 1998<br>வீடமைப்புத் திட்டம் – சமுர்த்தி திட்டம் – தென்பகுதி (காலி நகர) அபிவிருத்தித் திட்டம் முதலான திட்டங்கள் மூலம், சிங்களப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படல் | 30,000–க்கும் அதிகமான மக்கள் கொல்லப்படல்.<br>10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதியாக்கப்படல்.<br>அதில் 5 இலட்சம் மக்கள் ஒரே இரவில் அகதிகளாக்கப்படல். (யாழ்ப்பாணம் 1995)<br>தமிழர் தாயகம் நிர்மூலமாக்கப்படல்.<br>யாழ்ப்பாணக் குடாநாடு ஆக்கிரமிக்கப்படல்.<br>4 1/2 இலட்சம் மக்கள் உணவு, மருந்து இருப்பிடம் இன்றி வன்னிக் காடுகளில் அவலம்.<br>அகதிகளாக்கப்பட்ட மக்கள் மீது தொடர்ந்தும் யுத்தம்.<br>நூற்றுக் கணக்கில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இரகசியமாக கொலை செய்யப்படல்.<br>ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் –தமிழ் பெண்கள் தொடர்ந்து பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பின் கொலை செய்யப்படல். |

## 50-வது சுதந்திர தினம் எந்த நாட்டிற்கு ? எந்த மக்களுக்கு ?

சிறீலங்கா என்ற நாட்டிற்கும்- அந்த நாட்டின் குடி மக்களான சிங்கள மக்களுக்கும்தான், இது 50-வது சுதந்திரதினம்!

ஆனால், சிறீலங்கா அரசின் இராணுவ வல்லாண்மையின் கீழ் அடிமைப் பட்டுக்கிடக்கும் தமிழீழ நாட்டிற்கும், தமிழீழ மக்களுக்கும் இது அடிமை தினம்!

எப்படி?

தமிழீழ நாடு 1619 -ம் ஆண்டு யூன் மாதம் 5-ம் திகதி போர்த்துக்கேயரிடம் அடிமைப்பட்டுவிட்டதே -தமிழ் மக்கள் போர்த்துக்கேயரிடம் தங்கள் சுதந்திரத்தை இழந்துவிட்டார்களே?

அப்படியிருக்கும்போது Ceylon க்கு சுதந்திரம் கிடைத்த 1948 -பெப்-4ம் திகதி எப்படி தமிழர் அடிமை தினமாகும் என்ற கேள்வி இங்கே எழுகின்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற மூன்று ஆட்சியாளர்களும் தமிழர்களை ஒரு இனம் என்ற அடிப்படையில் அடிமைப்படுத்தவில்லை. காலனிய ஆட்சி முறையை நிலை நாட்டுவதற்காகவே அவர்கள் சகல அரசுகளை அடிமைப்படுத்தினார்கள்.

அவர்களது ஆட்சி முறையின் கீழ் சகல இன மக்களுக்கும் அரசியல் உரிமை மறுக்கப்பட்டே இருந்தது.

1833 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி 'கோல்புறூக்' அரசியல் திட்டதின் மூலம் தமிழீழத்தை சிறீலங்காவுடன் இணைத்து Ceylon என்று புதிய அரசை ஆங்கிலேயர்கள் உருவாக்கியபோது கூட அடிமைகளை ஒருங்கிணைப்பது அல்லது கால் நடைகளை மேய்ச்சலுக்காக ஒருங்கிணைப்பதுபோல், தங்களது நிர்வாக வசதிக்காக ஒன்றிணைத்தார்களேயன்றி அங்கே நாடுகள், தேசிய இனங்கள், அவர்களது வரலாற்றுப் பாரம்பரியங்கள் இவற்றையெல்லாம் அவர்கள் கணக்கில் எடுக்கவேயில்லை.

ஆனால்,

1948 பெப்ரவரி 4 இல் Ceylon அரசுக்கு சுதந்திரம் வழங்குவது என்ற பெயரில் அரங்கேற்றப்பட்ட நிகழ்வே தமிழ் மக்களை 'ஒரு இனத்தவர்கள் என்ற அடிப்படையில் சிங்கள இனத்தவர்களிடம் அடிமைப்படுத்திய; இரண்டாந்தரக் குடி மக்களாக்கிய' ஒரு வரலாற்றுத் துரோகமாகும்.

அதாவது சிங்கள இனத்திற்கும் சுதந்திரம் கொடுத்துவிட்டு தமிழினத்தைத் தொடர்ந்தும் அரசியல் உரிமை மறுக்கப்பட்டவர்களாக இருக்கும்படி செய்தது -1948 பெப்ரவரி -4 நடந்த அதிகார கைமாற்ற நிகழ்வேயாகும்.

எனவே 1948 பெப்ரவரி 4-ம் திகதி தமிழ் மக்களைப் பொறுத்தவரை அடிமை தினமாகப் பிரகடனப்படுத்த வேண்டிய ஒரு நாளாகும்.

அந்த வகையில் 1998 பெப்ரவரி 4-ம் திகதி தமிழர் அடிமை தினத்தின் 50-வது ஆண்டாகும்.

## எல்லாவற்றையும் மறந்துவிடலாம்...


*எல்லாவற்றையும் மறந்து விடலாம்;*
*இந்தப் பாழும் உயிரை*
*அநாதரவாக இழப்பதை வெறுத்து*
*ஒருகணப் பொறியில் தெறித்த*
*நம்பிக்கையோடு*
*காலி வீதியில்*
*திசைகளும், திசைகளோடு இதயமும்*
*குலுங்க விரைந்தபோது,*

*கவிழ்க்கப்பட்டு எரிந்த காரில்*
*வெளியே தெரிந்த தொடை*
*எலும்பை...*
*ஆகாயத்திற்கும் பூமிக்குமிடையில்*
*எங்கோ ஒரு புள்ளியில் நிலைத்து*
*இறுகிப்போன ஒரு விழியை...*
*விழியே இல்லாமல், விழியின்*
*குழிக்குள்*
*உறைந்திருந்த குருதியை...*
*"டிக்மண்ட்ஸ்" ரோட்டில்*
*தலைக் கறுப்புகளுக்குப் பதில்*
*இரத்தச் சிவப்பில் பிளந்து கிடந்த*
*ஆறு மனிதர்களை...*
*தீயில் கருகத் தவறிய*
*ஒரு சேலைத்துண்டை...*
*துணையிழந்து*
*மணிக்கூடும் இல்லாமல்*
*தனித்துப்போய்க்கிடந்த*
*ஒரு இடது கையை...*
*எரித்துக்கொண்டிருக்கும்*
*வீட்டிலிருந்து*
*தொட்டில் ஒன்றைச்*
*சுமக்க முடியாமல் சுமந்துபோன*
*ஒரு சிங்களக் கர்ப்பிணிப்*
*பெண்ணை...*


*எல்லாவற்றையும்,*
*எல்லாவற்றையும் மறந்துவிடலாம்!*
*ஆனால்..*
*உன் குழந்தைகளை ஒளித்துவைத்த*
*தேயிலைச் செடிகளின் மேல்*
*முகில்களும் இறங்கி மறைத்த*
*அந்தப் பின் மாலையில்*
*நீண்ட நாட்களுக்குப் பிறகு கிடைத்த*
*கொஞ்ச அரிசியைப் பானையிலிட்டுச்*
*சோறு பொங்கும் என்று*
*ஒளிந்தபடி காத்திருந்தபோது...*
*பிடுங்கி எறிபட்ட என் பெண்ணே!*
*உடைந்த பானையையும்*
*நிலத்தில் சிதறி*
*உலர்ந்த சோற்றையும்*
*நான் எப்படி மறக்க.....?*

நன்றி: சேரன் கவிதைகள்

# தமிழர் அடிமை தினம் 50 வது ஆண்டு





சிங்கள இனத்தவர்களின் வரலாறு ஆரம்பிப்பதற்கு முன்பு இருந்த தமிழர் அரசுகள் - *(கி.மு.6-க்கு முன்)*




ஐரோப்பியர் வருகையின்போது இருந்த அரசுகளும் தமிழர் பிரதேசங்களும்

## தமிழ் வன்னிமைகள்

1. பெரும் காற்றுப்பற்று
2. முசலிப்பற்று
3. மேற்குமூலை
4. சின்னச் செட்டிகுளம்
5. நடுச் செட்டிகுளம்
6. கிழக்கு மூலை தெற்கு
7. கிழக்கு மூலை வடக்கு
8. மேல்பற்று வடக்கு
9. மேல்பற்று கிழக்கு
10. மேல்பற்று தெற்கு
11. பனங்காமம்
12. உடையாவூர் (உடையார்கட்டு)
13. துணுக்காய்
14. கரைச்சி
15. புதுக்குடியிருப்பு
16. முள்ளியவளை
17. கரிக்கட்டு மூலை வடக்கு
18. கரிக்கட்டுமூலை தெற்கு
19. மகாவன்னி
20. திருகோணமலை
21. கொட்டியாரம்
22. கட்டுக்குளம்
23. மட்டக்களப்பு
24. மண்முனை
25. பழுகாமம்
26. போரதீவு
27. பாணமை
28. யாலா
29. புத்தளம்.




### 1833 இல் இலங்கையின் மாகாணங்கள்

ஆங்கிலேயர் தமிழர் தாயகத்தை 1833 இல் சிறீலங்காவுடன் இணைப்பதற்கு முன் இருந்த மாகாண அமைப்பு

### தமிழீழத்தில் சிங்களக் குடியேற்றம்




ஆங்கிலேயரின் மாகாண அமைப்பு முறையினால் சிங்கள மாகாணங்களுடன் இணைக்கப்பட்ட தமிழர் பிரதேசம்.

சிங்களவர் ஆட்சிக் காலத்தில் நடை பெற்ற திட்டமிட்ட சிங்கள குடியேற்றம்.

× × 1990 இற்குப் பின் நடை பெற்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்.

### 1889 இல் இலங்கையின் மாகாணங்கள்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மாகாணப் பிரிவினை என்ற பெயரில் தமிழர் தாயகம் சிதைக்கப்பட்டபின் 1889 இல் இருந்த மாகாண அமைப்பு.




### இன்றைய தமிழீழம்



# தமிழர் அடிமை தினம் 50வது ஆண்டு

★ கி.மு. 5-ம் நூற்றாண்டில் சிங்களவர்களின் மூதாதையர் என்று சொல்லப்படும் விஜயனும் அவனது தோழர்களும் (ஆரியர்கள்) இலங்கைக்கு வந்ததாகச் சொல்லப்படும் காலத்துக்கு முன்பே இலங்கையில் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் கூட தமிழ் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். தமிழ் அரசுகள் இருந்திருக்கின்றன. (ஆதாரம்: திராவிட தொல்பொருட் சின்னங்கள் கிடைத்தமை)

★ சிங்கள வரலாற்றாசிரியர்கள் தங்களது இனத்தின் பொற்காலம் என்று குறிப்பிடும் அநுராதபுர ஆட்சிக் காலத்தில் (கி.மு. 2 - கி.பி- 7) கதிரமலையை (கந்தரோடை) தலைநகராகக்கொண்ட யாழ்ப்பாண அரசு அனுராதபுர அரசுக்கு நிகரான பலம் பொருந்திய அரசாக இருந்திருக்கிறது.


*(ஆதாரம் கந்தரோடை புதைபொருள் ஆய்வுகள்)*

★ சோழர் ஆட்சியில் அனுராதபுரம் அழிக்கப்பட்ட பின்பு எழுந்த பொலநறுவை ஆட்சிக்காலத்தில் (விஜயபாகு மகாபராக்கிரமபாகு கி.பி. 10-14) சிங்கை நகரைத் தலை நகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசும், மட்டக்களப்பு, திருமலை, வன்னிப் பிரதேசங்களை உள்ளடக்கிய வன்னிய சிற்றரசுகளும் தமிழர்களுடைய அரசுகளாக இருந்தன.

★ சிங்கள அரசுகள், கோட்டை-கண்டி என்று இரண்டாகப் பிரிவுண்ட காலத்தில் சிங்கை நகரை தலை நகராகக்கொண்ட யாழ்ப்பாண அரசும் வன்னிய அரசுகளும் தொடர்ந்து வலிமையுடன் இருந்தன. இந்த காலப் பகுதியில் (கி.பி. 14-ம் நூற்றாண்டு) ஒரு குறிப்பிட்ட காலம் (கி.பி 1356 - 1374) யாழ்ப்பாண அரசின் நிர்வாகத்தின் கீழ் முழு இலங்கையும் இருந்தது.

★ கி.பி. 1450-ல் கோட்டை அரசு யாழ்ப்பாண அரசை சாபுமல் குமரயாவின் படையைக்கொண்டு கைப்பற்றிய பின், 17 வருடங்கள் அதாவது கி.பி 1467 வரை யாழ்ப்பாண அரசு அதற்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. அப்போது சிங்கை நகர் அழிக்கப்பட்டு நல்லூர் தலைநகராக்கப்பட்டது.

★ கி.பி. 1467-ல் யாழ்ப்பாண அரசு தனது சுதந்திரத்தை மீளப் பெற்றுக்கொண்டது. கி.பி. 1619 வரை நல்லூரை தலைநகராகக்கொண்டு 8 மன்னர்களும் கி.பி 1215 இலிருந்து கி.பி 1450 வரை சிங்கநகரை தலைநகராகக் கொண்டு 11 மன்னர்களும் யாழ்ப்பாண அரசை ஆட்சி செய்திருக்கின்றார்கள்.



Coat-of-Arms, Galle



Coat-of-Arms, Colombo


★ கி.பி. 1619 ஆனி மாதம் 5-ம் திகதி யாழ்ப்பாண இராச்சியம் ஆக்கிரமிப்பாளர்களான போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்டது. கி.பி 1658 வரை போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை அடிமைப்படுத்தி ஆட்சி செய்த கால கட்டத்தில் சில வன்னியச் சிற்றரசுகள் சுயாதீன அரசுகளாக இருந்தன.

★ கி.பி. 1638 மட்டக்களப்பையும் கி.பி 1658 இல் யாழ்ப்பாணத்தையும் ஐரோப்பாவில் இருந்து சென்ற மற்றொரு ஆக்கிரமிப்பாளர்களாக ஒல்லாந்தர்கள் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர்.

★ கி.பி. 1795 ஆவணி மாதம் 18-ம் திகதி திருகோணமலையையும் ஐப்பசி மாதம் 5-ம் திகதி மட்டக்களப்பு மன்னார், யாழ்ப்பாணப் பிரதேசங்களையும், தமிழ் மக்களின் இன்றைய நெருக்கடிகளுக்கு காரணமானவர்களான ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்கள் ஒல்லாந்தர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர்.

★ போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தமிழீழ அரசோடு, சிங்கள அரசையும் கைப்பற்றிய போதும் அவர்கள் ஒரு போதும் எல்லா அரசுகளையும் ஒரே அரசாக இணைக்கவில்லை.

★ ஒல்லாந்தர்கள் தங்களது ஆட்சியில் இலங்கையை 3 நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிந்திருந்தார்கள். அதில் யாழ்ப்பாண நீதி நிர்வாகப் பிரிவு தனியாகப் பிரிக்கப்பட்டிருந்தது.



Coat-of-Arms, Jaffna

★ 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேய ஆட்சியாளருக்கு அடிபணியாதவனாக வன்னியின் கடைசி மன்னனாகிய குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன் இருந்தான். 1803 இலிருந்து 1811-ல் அவன் கொல்லப்படும் வரை, ஆங்கிலேயருடன் பண்டார வன்னியன் தொடர்ந்து போரிட்டு வந்தான்.

★ 1815 பங்குனி 2-ம் திகதி வரை நாயக்க வம்சாவழியில் வந்த ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் என்ற தமிழ் மன்னனே கண்டியை ஆட்சி செய்து வந்தான்.

★ 1815 பங்குனி 2 இல் கண்டிய சிங்களவர்கள் ஆங்கிலேயரிடம் சரணாகதியடைந்துவிட கண்டிய மன்னன் கைது செய்யப்பட்டான். (1836 -தை 30 இல் தமிழக வேலூர் சிறையில் அவன் காலமானான்)

★ 1832-ல் பிரித்தானிய ஆட்சிமுறையை இலங்கையில் எவ்வாறு அறிமுகப்படுத்துவது என்பதைக் கண்டறிய கோல்புறூக் ஆணைக்குழு இலங்கைக்கு வந்தது.

★ இந்த ஆணைக்குழு, மக்களுடைய விருப்பங்கள் தேவைகள், மற்றும் அவர்களது வரலாற்று உரிமைகள் என்பவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காது, பிரித்தானிய காலனிய அரசின் தேவையை மட்டும் கணக்கில் எடுத்து, இலங்கை ஒரே ஆட்சி முறையின் கீழ் கொண்டு வரும்படி சிபார்சு செய்தது.

★ 1833-ம் ஆண்டு மாசி மாதம் 18-ம் திகதி அதுவரை யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை என்றிருந்த மூன்று அரசுகளையும் 'Ceylon' என்ற ஒரே அரசாக பிரித்தானிய அரசு இணைத்தது.

★ 1835-ம் ஆண்டு இலங்கையின் முதலாவது சட்ட நிருபணசபை உருவாக்கப்பட்டது. 1924.. வரை இச் சபையில் (பல்வேறு திருத்தங்கள்) தமிழருக்கும் சிங்களவர்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டு வந்தது.

★ 1927 கார்த்திகை மாதம், இலங்கை மக்களுக்கு அதிக உரிமைகளை வழங்குவதற்காக எனக் கூறிக் கொண்டு டொனமூர் ஆணைக்குழுவை பிரித்தானிய அரசு இலங்கைக்கு அனுப்பி வைத்தது.

★ டொனமூர் ஆணைக்குழு, தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் உள்ள இன முரண்பாட்டை வளர்த்து விடுவதன் மூலம் பிரித்தானிய ஆட்சியின் நலன்களைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்பதை தெரிந்துகொண்டு, சிங்கள மக்களுக்கு அதிக பிரதிநிதித்துவத்தை கொடுத்து - தமிழர்கள் அவர்களில் 'தங்கிவாழும்' ஒரு நிலையைத் தோற்றுவிக்கும் அரசியலமைப்புச் சட்டம் ஒன்றை சிபார்சு செய்தது.

★ 1931-ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் நடைபெற்ற தேர்தலை யாழ்ப்பாண மக்கள் புறக்கணித்தனர்.

★ 50 தொகுதிகளுக்குள் நடந்த இத் தேர்தலில் 38 சிங்களப் பிரதிநிதிகளும், 2 பறங்கியரும், 6 தமிழர்களும் தெரிவு செய்யப்பட்டனர். யாழ்ப்பாணத்துக்கான 4 தொகுதிகள் வெற்றிடமாக இருந்தன.

★ டொனமூர் திட்டத்தால் அதிகாரத்தைப் பெற்ற சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் தாயகத்தைப் பிரிக்கும் முயற்சிகளில் இறங்கினர். தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

★ பிரித்தானிய முடியாட்சியின் மேற்பார்வையில் இலங்கையருக்கு சுதந்திரம் வழங்குவதற்காக 1944-ம் ஆண்டு சோல்பரி ஆணைக் குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

★ சிங்களத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்த சோல்பரி பிரபு- சிங்களவர் கைகளில் தொடர்ந்து அதிகாரம் இருக்கும் விதத்திலும், தமிழர்கள், ஆட்சியில் சிறுபான்மையினராக இருக்கும் விதத்திலுமான ஆட்சி முறையை பரிந்துரை செய்தார். தாங்கள் தமிழர்கள் மீது அபிமானம் உள்ளவர்கள் என்று காட்டும் விதத்தில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பாதுகாக்க அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில சரத்துக்களை உருவாக்கியிருப்பதாக சோல்பரி ஆணைக் குழு தெரிவித்தது.

★ 1619-ம் ஆண்டு ஆனிமாதம் 5-ம் திகதி போர்த்துக்கேயரிடம் பறிபோன தமிழரின் சுதந்திரம், ஒல்லாந்தர் - ஆங்கிலேயர் வழியாக 1948 மாசி மாதம் 4-ம் திகதி சிங்களவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

★ சங்கிலி மன்னனின் கைகளிலிருந்து தமிழ் மக்களது ஆட்சி உரிமையை போர்த்துக்கேயர் கைப்பற்றியதற்கும் பின்பு போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் கைப்பற்றியதற்கும், அதன் பின்பு ஒல்லாந்தர்களிடமிருந்து ஆங்கிலேயர் கைப்பற்றியதற்கும், இறுதியில் ஆங்கிலேயர், அதை சிங்களவர்கள் கைகளில் ஒப்படைத்ததற்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் இல்லை.

★ மற்றையவர்கள் யுத்தம் செய்து தமிழரின் உரிமையைப் பறித்தார்கள். சிங்களவர்கள், பிரித்தானிய எஜமானுக்கு சேவகம் செய்து தமிழரின் உரிமையைப் பறித்தார்கள். இதுதான் தமிழர் 'அடிமையான' வரலாறு.

★ பிரித்தானிய காலனிய அரசு மக்களின் உரிமைகளை மதிக்கின்ற அரசாக இருந்திருந்தால் 1833-ம் ஆண்டு மாசி மாதம் 18-ம் திகதி, தாங்கள் மக்களின் விருப்பமின்றி வலுக்கட்டாயமாக செய்த இணைப்பை, இல்லாததாக்கி தமிழ் மக்களிடம் அவர்களது பாரம்பரிய இறைமையை - ஆட்சி உரிமையைக் கொடுத்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் தங்களது புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை அறிய அவர்கள் மத்தியில் ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடத்தியிருக்கவேண்டும்.

அதையெல்லாம் செய்யாது, வலுக்கட்டாயமாக இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது என்ற பெயரில், தமிழீழ தேசத்தினதும் தமிழ் மக்களினதும் இறைமையையும், உரிமையையும் சிங்களவர்கள் கையில் ஒப்படைத்த 1948 மாசி மாதம் 4-ம் திகதியானது, 'தமிழர் அடிமை தினம்' என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை.

**- நக்கீரன்**

# தமிழர் அடிமை தினம் 50வது ஆண்டு

★ பிரித்தானியர்கள் பிரசவித்த 'சிலோன்' என்ற அரசின் முதல் பிரதமராகப் பதவியேற்ற சிங்களவரான டி.எஸ் சேனநாயக்கா செய்த முதல் வேலை - மலையகத் தமிழரின் குடியுரிமை - வாக்குரிமையைப் பறித்தது.

★ 1948 ஆகஸ்ட் மாதம் கொண்டு வரப்பட்ட குடியகல்வுச் சட்டம், 1949 இல் கொண்டு வரப்பட்ட இந்திய பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம், 10 இலட்சம் மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்தது. இதன் மூலம் அவர்கள் பாராளுமன்றத்தின் 7 தொகுதிகளுக்கு தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமையையும் 14 தொகுதிகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் உரிமையையும் இழந்தார்கள்.

★ 1931 இல் டி.எஸ். சேன நாயக்காவினால் தொடக்கி வைக்கப்பட்ட கல்லோயா குடியேற்றத் திட்டமும், கந்தளாய் அல்லைக் குடியேற்றத் திட்டமும் முன்னுரிமை கொடுத்து பூர்த்தி செய்யப்பட்டு - பாரம்பரிய தமிழ் பிரதேசங்களான அவை சிங்களப் பிரதேசங்களாக மாற்றப்பட்டன.

★ 1948 இல் சுதந்திர 'இலங்கையின்' கொடியாக சிங்களவர்களின் தேசியக் கொடியான வாள் ஏந்திய சிங்கக்கொடியே இருக்க வேண்டும் என்ற தீர்மானம் தமிழர்களினது எதிர்ப்புக்கு மத்தியில் டி.எஸ் சேனநாயக்கா அரசால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது.



★ 1956-ம் ஆண்டு ஆனி மாதம் சிங்களத்தை ஆட்சி மொழியாக்கும் சட்டம் அப்போதைய பிரதமர் S.W.R.D. பண்டாரநாயக்காவினால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

★ 1956 ம் ஆண்டு ஆனி மாதம் 5 ம் திகதி தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து காலி முகத்திடலில் சத்தியாக் கிரகம் செய்த தமிழரசுக் கட்சியினர் - சிங்களப் பொலீசாரால் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலை பாராளுமன்ற மாடியில் இருந்து பிரதமர் பண்டாரநாயக்கா பார்த்துக் கொண்டிருந்தார். இச் சத்தியாக் கிரகத்தை - தமிழர்கள் பாராளுமன்றத்தை கைப்பற்றுவதற்கு வருகின்றார்கள் என்று சிங்கள இனவாதிகள் திரித்துக் கதை கட்டிவிட்டதில் கொழும்பிலும் கல்லோயாப் பகுதியிலும் (150) தமிழர்கள் கொல்லப்பட்டனர். பலரது வீடுகள் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன.


★ இதனைத் தொடர்ந்து 1957-ம் ஆண்டு ஆடி மாதம் 27-ம் திகதி SWRD பண்டார நாயக்கா செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார்.

★ 1957 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 4 ம் திகதி J.R. ஜெயவர்த்தனா தலைமையில் பௌத்த பிக்குகள் உட்பட்ட ஏராளமான சிங்கள இனவாதிகள் கண்டிக்கு பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டனர்.

★ 1958 ம் ஆண்டு வைகாசி மாதம் 9 ம் திகதி S.W.R.D. பண்டாரநாயக்காவின் அரசில் அமைச்சராக விமலா விஜயவர்த்தனா என்பவரின் தலைமையில் பௌத்த பிக்குகள் - இவ் ஒப்பந்தத்தை கைவிடும்படி கோரி பண்டார நாயக்காவின் வீட்டுக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

★ 1958 ம் ஆண்டு வைகாசி மாத நடுப்பகுதியில் S.J.V. செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை கைவிட்டு விட்டதாக SWRD பண்டாரநாயக்கா எழுத்து மூலம் அறிவித்தார்.

★ தமிழர்களுக்கு ஒரு சில சலுகைகளை வழங்குவதற்காக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைக் கூட கிழித்தெறியச் செய்ததில் சிங்கள இனவாதிகள் அடைந்த வெற்றி, 1958 ம் ஆண்டு வைகாசி மாதம் 23-ம் திகதி தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரமாக மாறியது. தென் பகுதி முழுவதும் தமிழர்கள் தாக்கப்பட்டனர். வெட்டிக் கொல்லப்பட்டனர். உயிருடன் எரிக்கப்பட்டனர். தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். தமிழர்களது சொத்துக்களும் உடமைகளும் - கொள்ளையடிக்கப்பட்ட பின் (எஞ்சியவை) தீக்கிரையாக்கப்பட்டன. இந்தக் கலவரத்தில் 12,000 தமிழர்கள் அகதிகளாக்கப் பட்டனர். பாதுகாப்புக் கருதி இவர்களில் பலர் கப்பல் மூலம் யாழ்குடா நாட்டிலுள்ள பருத்தித்துறைமுகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இறந்தவர்கள் தொகை ஆயிரத்துக்கு மேல் எனச் சொல்லப்படுகிறது.




★ 1961-ம் ஆண்டு மாசி மாதம் தமிழரசுக் கட்சித்தலைவர்கள், சிறீமாவோ அரசாங்கம் நிறைவேற்றிய நீதி மன்றங்களில் சிங்கள மொழிப் பிரயோகம் பற்றிய சட்டத்தை எதிர்த்து யாழ் கச்சேரி வாசலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினர். வவுனியா, மன்னார், திருகோணமலைப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட்ட இப் போராட்டம், இராணுவ வன்முறைகொண்டு அடக்கப்பட்டதுடன் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அவசர காலச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். இக் காலப் பகுதியில் தமிழ் எழுத்துக்களுக்கு தார் பூசி அழிக்கும் இயக்கம் சிங்களப் பகுதியில் ஆரம்பித்தது.

★ 1965-ம் ஆண்டு முன் பகுதியில் ஆட்சிக்கு வந்த டட்லி சேனநாயக்கா (ஐ.தே. கட்சி) பண்டாரநாயக்கா பாணியில் தமிழர்களுக்கு உரிமைகள் (சலுகைகள்!) வழங்குவது தொடர்பாக S.J.V. செல்வநாயகத்துடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்.

★ டட்லி- செல்வா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்ட இவ் ஒப்பந்தத்தை எதிர்த்து 1965-ம் ஆண்டு மே தினத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் -இனவாதச் சேற்றுக்குள் விழுந்த சிங்கள இடதுசாரிக் கட்சிகளும் 'மசாலை வடை" கோசம் எழுப்பினர்.

★ 1966 ம் ஆண்டு தைமாதம் 8 ம் திகதியை அனைத்து சிங்கள இனவாதிகளும் - (சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அதன்அணியிலிருந்த இடதுசாரிகள் உட்பட) சிங்களவர்களின் தேசிய துக்க தினமாகப் பிரகடனப் படுத்தி கறுப்புக்கொடி பிடித்து சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் துட்டகைமுனுவின் தாயான விகாரமா தேவியின் சிலை முன் -சிங்கள இனத்தைக் காப்போம் - என்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட பின் - 'பறத் தெமிழ அப்பிட்ட எப்பா' 'மசால வடை அப்பிட்ட எப்பா' என்று தமிழர்களுக்கு எதிரான, அவர்களை இழிவு செய்யும் கோசங்களை எழுப்பியவாறு, பாராளுமன்றத்தை நோக்கி ஊர் வலமாகச் சென்றனர்.



★ இதனை அடுத்து - டட்லி சேனநாயக்கா செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை கிழித்தெறிவதாக அறிவித்தார்.

★ 1970-ம் ஆண்டு வைகாசி மாதம் 27-ம் திகதி நடைபெற இருந்த பொதுத் தேர்தலில் தமது கட்சி வெற்றி பெற்றால் இலங்கையை குடியரசாக மாற்றுவோம் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்ததோடு அந்த தேர்தலை அதற்கான அங்கீகாரத்தை வழங்கும் ஒரு சர்வசன வாக்கெடுப்பாகவும் பிரகடனப் படுத்தியது.

★ இந்தத் தேர்தலில் 49 இலட்சத்து 49 ஆயிரத்து 616 பேர் வாக்களித்து இருந்தனர். இதில் 24 இலட்சத்து 15 ஆயிரத்து 302 பேர் மட்டுமே இலங்கையை குடியரசாக்கப் போவதாக கூறிய சிறீலங்கா சுதந்திரக் கூட்டணிக்கு வாக்களித்திருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சி, தமிழரசுக் கட்சி உட்பட மற்றைய எதிர்க் கட்சிகளுக்கு 25 இலட்சத்து 34 ஆயிரத்து 314 பேர் வாக்களித்திருந்தனர். ஆயினும் தொகுதிவாரியான தேர்தல், பிரதி நிதித்துவ அடிப்படையில் 157 இடங்கள் உள்ள பாராளுமன்றத்தில், 116 இடங்களை சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி பெற்றது. பாராளுமன்றத்தில் ஆட்சி அமைப்பதற்கு இது பெரு வெற்றியாக அமைந்தாலும், நாட்டின் அமைப்பு முறையையே மாற்றுவதற்கான பொது மக்களின் அங்கீகாரம் என்ற வகையில் சுதந்திரக் கட்சிக் கூட்டணி தோல்வியையே தழுவி இருந்தது.

★ 1970-ம் ஆண்டு ஆனி மாதம் 19-ம் திகதி பிரித்தானிய முடியாட்சியில் இருந்து முழுமையாகச் சுதந்திரம் பெற்ற ஒரு நாடாக குடியரசாக மாற்றுவதற்கான பிரகடனத்தை அறிவிப்பதற்காக கொழும்பு நவரங்க கலா மண்டபத்தில் அதிகார பூர்வமான கூட்டம் ஒன்றை பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா கூட்டியிருந்தார். பாராளுமன்ற உறுப்பினர்கள் - உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் - என 1700 பேர் வரை கலந்துகொண்ட இக் கூட்டத்தில் தமிழீழ மக்களின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

★ 1971-ம் ஆண்டு பங்குனி மாதம் 15-ம் திகதி சிறீலங்கா சுதந்திரமான உரிமை கொண்ட தன்னாதிக்கம் உள்ள ஒரு குடியரசாதல் வேண்டும் என்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவினால் முன்மொழியப் பட்டது.

★ 1972-ம் ஆண்டு வைகாசி மாதம் 22 ம் திகதி இத் தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் மூலம் -'ஒற்றை ஆட்சி இலங்கை' என்ற சோல்பரி - பிரபுவின்-அரசியல் அமைப்பு செல்லுபடியற்றதாக்கப் பட்டு 'Ceylon' என்ற பெயரும் இல்லாது ஒழிக்கப்பட்டு 'சிறீலங்கா' ஜனநாயக சோசலிச குடியரசு' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அதாவது சிறீலங்கா அரசு 'Ceylon' என்ற அரசிடம் இருந்து பூரண விடுதலை பெற்று தன்னைக் குடியரசாக்கிக் கொண்டது.



★ உண்மையில் 1972-ம் ஆண்டு வைகாசி மாதம் 22-ம் திகதி சோல்பரி அரசியல் அமைப்பு இல்லாது ஒழிக்கப்பட்ட போது, 1833-ம் ஆண்டு மாசி மாதம் 18-ம் திகதி தமிழீழத்தை சிறீலங்காவுடன் இணைத்து 'Ceylon' என்ற அரசை உருவாக்குவதற்கு அதிகாரம் வழங்கிய 'கோல்புறூக்' சட்டமும் செல்லுபடியற்றுப் போனது.

★ ஏனெனில் கோல்புறூக் சட்டத்தை அடிப்படையாக வைத்தே - டொனமூர் அரசியல் அமைப்புச் சட்டமும் -அதனுடைய விரிவான சீர்திருத்திய அம்சமாக சோல்பரி அரசியல் அமைப்புச் சட்டமும் உருவாக்கப்பட்டன.

★ சோல்பரிச் சட்டத்தை நீக்கியபோதே - தமிழீழத்தை சிறீலங்காவுடன் இணைத்த இணைப்பும் சட்ட ரீதியாகச் செல்லுபடியற்றுப் போய்விட்டது. சிறீலங்கா அரசுக்கு தமிழீழத்தை ஆட்சி செய்யும் உரிமையோ, அது புதிதாக பிரகடனப் படுத்திய குடியரசு யாப்பின் அதிகாரங்களை தமிழீழப் பிரதேசத்தில் உபயோகிக்கும் உரிமையோ அதற்குக் கிடையாது.

★ ஆனால் - சிறீலங்கா அரசு தனது சிங்கள மேலாதிக்க இராணுவ வல்லாண்மையைக் கொண்டு, அன்றிலிருந்து இன்றுவரை தமிழீழ நாட்டை ஆக்கிரமித்து - தமிழ் மக்களை அடிமைப்படுத்தி அவர்கள் மீது பிரகடனப்படுத்தாத யுத்தம் ஒன்றையும் தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றது.

**- நக்கீரன்**

# தமிழர் அடிமை தினம் 50 வது ஆண்டு

## துரோகத்தனம் துரோகத்தனம் துரோகத்தனம்

* 'பல்வேறு சமயங்கள், இனங்களுக்கிடையில் உள்ள வேற்றுமையை முழுவிசையுடன் ஆதரிப்பதே நமது முயற்சியாக இருக்க வேண்டுமேயன்றி அவற்றை இணைப்பதாக இருக்கக்கூடாது. நாட்டைப் பிரித்தாள வேண்டும் என்பதே இந்திய அரசின் (அப்போது இலங்கையும் சேர்ந்து பிரித்தானிய இந்தியாவாக இருந்தது.) கொள்கையாக இருக்க வேண்டும்.

*- பிரித்தானிய காலனிய அரசின் - இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் கேர்ணல் 'கொக்' கூறியது.*



* பகைமை கொண்ட மதங்கள் அடுத்தடுத்து இருப்பது நம் அரசியலின் நிலைக்கு ஒரு வலுவான அம்சம் என்பது தெளிவான உண்மை.

*- காலனிய காலத்திய பிரித்தானிய அரசியல் நிபுணர் 'சேர். யோன் ஸ்டிராக்சி' கூறியது.*

* இந்த நாட்டின் நல்லாட்சிக்கு தமிழரின் மூளைத்திறனும், சுறுசுறுப்பான அவர்களின் உழைப்பும் கடந்த காலங்களில் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. அதுபோல எதிர்காலத்திலும் இவர்கள் விலை மதிக்க முடியாத பங்கை ஆற்றுவர். நாட்டின் நல்லாட்சிக்கு பிரித்தானியர்கள் எப்போதும் தமிழர்களின் ஒத்தாசையை வேண்டி நிற்பர்.

*- 1935 இல் இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சேர். எட்வேட் ஸ்ரப்ஸ் · பருத்தித்துறையில் நடந்த கூட்டத்தில் கூறியது.*

* இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, நைஜீரியா போன்ற நாடுகளில் இருப்பதான அடிப்படை உரிமையைத்தானும் இலங்கைத் தமிழருக்கு வழங்க எனது அரசியல் அமைப்புத் திட்டம் தவறி விட்டது. டி.எஸ். சேனநாயக்கா உயிருடன் இருந்திருந்தால் தமிழருக்கு இந்த நிலை இருந்திருக்காது. இலங்கையில் இனப்பிரச்சினை பற்றி என்னிடம் அந்தக் காலத்தில் போதிய அறிவு இருக்கவில்லை.

*- தமிழரை அடிமைப்படுத்தி சிங்களவர்களை சுதந்திர மனிதர்களாக்கிய சோல்பரி அரசியல் திட்டத்தை உருவாக்கிய சோல்பரி பிரபு, பி.ஏச்- பாமர் எழுதிய நூலுக்கு எழுதிய முன்னுரையில் கூறியது.*

## இனவாதம் இனவாதம் இனவாதம்

* "சிங்களவர்களாகிய எம் உடம்பில் ஓடுவது ஒரே குருதி. நாம் ஒரே இனத்தவர்கள். நாம் தனிச் சிறப்புள்ள மக்கள். 5500-ம் ஆண்டுகளுக்கு தன் மதம் நிலைக்குமென புத்தர் கூறினார். புத்த மதத்தின் பாதுகாவலர் என்ற வகையில் நாமும் அதே அளவு காலம் நிலைத்து வாழ்வோம்."

*- 1939-ம் ஆண்டு கொழும்பில் நடந்த சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டத்தில் டி. எஸ்.சேனநாயக்கா கூறியது.*

* "ஜேர்மனியின் தலைவரான கிட்லர், ஆரியக் குருதி ஓடாத எவனிடமும் தலைமைப் பண்பைக் காண முடியாது என்று கூறினார். எனவே அவர் தமது நாட்டில் ஆரியரும், ஆரியர் அல்லாதவரும் மணம் புரிவதைத் தடுத்துள்ளார். ஆரியரல்லாத வீடுகளில் இளம் ஆரிய ஜேர்மன் பெண்களை வேலைக்கு அமர்த்துவது சட்ட விரோதமானதென்று கிட்லர் பிரகடனம் செய்தார்.....

இந்த நடவடிக்கையின் நோக்கம் தூய ஆரிய இனத்தை உருவாக்குவதாகும். ஆரியருக்கும் - ஆரியர் அல்லாதவர்களுக்கும் பிறந்த பிள்ளைகள் எவ்வித உயர் பண்புகளும் இன்றி அழிந்து படுவர்

- ஆரிய இனத்தைச் சேர்ந்த சிங்களப் பெண்கள், திராவிட இனத்தவர்களை திருமணம் செய்வதை தடுத்து நிறுத்த வேண்டும்". என்று பி. சிறிசேனா என்பவர் 1936 சித்திரை 17-ம் திகதி 'வீரயா' பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் கூறியது.

* தமது கொச்சி சகோதரர்களுக்கு (மலையாளிகளுக்கு) இரங்குவதுபோல் தம் சொந்த மக்களுக்காக (சிங்களவர்களுக்கு) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இரங்குவார்களாக இருந்தால் நான்கு, ஐந்து தமிழ் அல்லது சிங்கள பெண்களுடன் 40 ஆண்கள் வாழும் ஆட்கள் இந்த நாட்டின் பிரஜைகள் ஆவதற்கு எவ் விதத்திலும் ஆதரவளிக்க மாட்டார்கள்."

*- மலையக மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிப்பின் போது ரி. எவ் ஜெயவர்த்தனா என்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் பேசியது. (ஹன்சாட் 10 மார்கழி 1948)*

* இலங்கையின் வரலாறு சிங்கள இனத்தின் வரலாறு ஆகும். 2500 வருடங்களுக்கு முன்பு பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் மகத்தான கடமை சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டது.'......

'புத்த பெருமான் குசி நாராபில் இருந்த அன்றே சூரிய வம்சத்தைச் சேர்ந்த விஜயனும் அவனது சிங்கபுரத்தைச் சேர்ந்த பரிவாரங்கள் 700 பேரும் புத்த பெருமானுடைய சித்தத்தால் இலங்கையில் வந்திறங்கினார்கள். பின்னர் இவர்களே சிங்கள இனத்தவர்கள் என்று அழைக்கப் பட்டனர்.....

எனவே சிங்கள இனத்தின் தோற்றம் தற்செயலானது அல்ல. அது உள்நோக்கம் கொண்டு முன்பே நிர்ணயிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும்.

தமது தாய் நாட்டை விட்டுப் புறப்பட முன்னரே இவர்களின் பெரும்பாலானோர் தமது இதயத்தாலும் சிந்தையாலும் சிங்களவர்களாய் இருந்தனர். பல நூற்றாண்டு நாகரிகத்தின் கனிகளாக இலக்கியம், கலை. கவிதை, இசை ஆகியவற்றை இவர்கள் தம்முடன் கொண்டுவந்தனர்.

*- டி.சி. விஜயவர்த்தனா எழுதிய புத்த கோயில் கிளர்ச்சி என்ற நூலில்*

"ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். நாம் சிங்கத்தின் இனம் என்பதை மறந்துவிட வேண்டாம்..... எமது மதத்திற்கும் எமது குழந்தைகளுக்கும் குழந்தைகளின்



குழந்தைகளுக்கும் பெரும் பணியாற்ற வேண்டிய பெரும்பணி எமக்குண்டு. எமது புனித நாட்டை இந்து மதப் பிரியர்களும் விஸ்கிவியாபாரிகளும சீரழிப்பதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது...

'ஆங்கிலேயர்கள் - தென்னிந்தியாவின் கீழ் சாதியினரை எமது தீவில் கொண்டு வந்து குடியேற்றுகின்றனர்.'

...... எமது நாட்டையும் எமது மகிமை பொருந்திய சமயத்தையும் நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். இத்தகைய ஊற்றின் கண் நின்றதால் நமது மூதாதையர்கள் தேசிய உணர்வைப் பருகினார்கள். இப்படியாக வீரமும் நாட்டுப் பற்றும் மிக்க மன்னர் காலத்தில் இருந்தே எமது எதிரிக்கெதிராகப் போராடும் எதிர்ப்புச் சக்தியை இவர்கள் பெற்றுக்கொண்டார்கள். இந்த வகையில் பௌத்த ஒழுக்க சீலனாகிய துட்ட காமினி, தனது தாயினதும், தேச பக்தியால் உந்தப்பட்ட ஆதரவாளர்களினதும், பௌத்த சங்கத்தினதும் பிக்குகளினதும் நல்லாசிகளுடன் எமது நாட்டிற்கு புத்துயிர்ப்பும் புது வலிமையும் அளித்தான்."

*- காலனிய காலத்திய இனவாத பௌத்த துறவி அநகாரிய தர்மபாலா கூறியவை.*

* "இந்த நாட்டில் சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்த்து கொடுக்கப்படுமானால் முழு உலகிலும் 30 இலட்சம் மக்களால் மட்டுமே (அப்போது அவ்வளவு பேர்தான்) பேசப்படும் சிங்களம் பெரும் இன்னல்களுக்குள்ளாகி கால கதியில் அது முற்றாகவே



அழிந்து போய்விடக் கூடும் என்ற அச்சம் என்னிடம் உள்ளது. நான்கு கோடித் தமிழர்களால் இந்தியாவில் பயன்படுத்தப்பட்டுவரும் தமிழ் நூல்களின் செல்வாக்காலும், தமிழ் திரைப் படங்களும் தமிழ் கலாச்சாரமும் இந்நாட்டில் ஏற்படுத்தி வரும் தாக்கங்களாலும் சிங்கள மொழியின் எதிர்காலம் முடிவு கட்டப் படுவதாய் அமைந்துவிடும் என்று நான் எண்ணுகின்றேன்."

*- 1944-ம் ஆண்டு வைகாசி மாதம் சட்டசபையில் நடைபெற்ற தனிச் சிங்களப் பிரேரணை தொடர்பான விவாதத்தில் J.R. ஜெயவர்த்தனா கூறியது.*

* 'உங்கள் நாடு - சமயம் - பண்பாடு என்பவற்றில் உங்களுக்கு அன்பிருந்தால் உங்கள் உயிருக்கு ஆபத்து நேரிடினும் அதைப் பொருட்படுத்தாது தமிழரை இலங்கையில் இருந்து துரத்தியடியுங்கள். எவரது உடலிலும் ஒரு துளியேனும் சிங்கள இரத்தம் இருப்பின் தமிழரைப் பார்த்து சகித்துக்கொள்ளக் கூடாது. தமிழர்கள் எங்கள் முதன்மையான எதிரிகள்'

*- திரி சிங்கள பெரமுன என்ற அமைப்பு 1956 இல் களனியில் நடத்திய கூட்டத்தில் உரையாற்றிய தேவமொத்தீவ அமர வாஞ்ச தேரோ கூறியது.*



* "தமிழ் மொழிக்கு சம அந்தஸ்த்துக் கொடுப்பது கடந்த 2500 வருட காலமாக வாழ்ந்துவரும் சிங்கள சாகித்தியத்திற்கு சாவுமணி அடிப்பதேயாகும். ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் மொழியோடு நமது மொழிக்கு (சிங்களத்திற்கு) சம அந்தஸ்த்து கொடுக்கிறார்கள். இந்தச் சிறுபான்மைச் சமூகம் புராதன காலம்தொட்டே நம்மை நாசமாக்க சங்கற்பம் கொண்டிருந்த சமூகமாகும். இதற்கு எமது பழைய சரித்திரங்கள் சான்று பகரும். இந்தியர்கள் (தமிழர்கள்) செய்து வந்ததைப் போல் நாம் கள்ளத்தனமாக குடியேற வேறு நாடுகள்

**'உங்கள் நாடு - சமயம் - பண்பாடு என்பவற்றில் உங்களுக்கு அன்பிருந்தால் உங்கள் உயிருக்கு ஆபத்து நேரிடினும் அதைப் பொருட்படுத்தாது தமிழரை இலங்கையில் இருந்து துரத்தியடியுங்கள். எவரது உடலிலும் ஒரு துளியேனும் சிங்கள இரத்தம் இருப்பின் தமிழரைப் பார்த்து சகித்துக்கொள்ளக் கூடாது. தமிழர்கள் எங்கள் முதன்மையான எதிரிகள்'**

இல்லை. ஆகவே சிங்களவர்கள் இந்து சமுத்திரத்தில்தான் குதிக்க வேண்டிவரும். இலங்கை தென் இந்தியாவின் ஒரு பாகமாகிவிடும். சிங்கள மொழிக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்த்து நிற்க நீங்கள் (சிங்கள மக்கள்) முன் வர வேண்டும்."

*- ஏமுகோரளை என்ற இடத்தில் நடந்த இலக்கியக் கூட்டத்தில் உரையாற்றிய சிங்கள இலக்கிய சங்கத் தலைவர் சந்திராச்சாரிய பண்டிதர் பேசியது.*

* 'யாழ்ப்பாணத்தவர்களின் எந்தவகைய அபிப்பிராயத்தைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை, அவர்களைப் பற்றி இப்போது நாங்கள் சிந்திக்க முடியாது. அவர்களின் உயிர்களைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை. அவர்கள் எங்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றியும் கவலையில்லை."

*- 1983 ஆடி இனக்கலவரக் காலகட்டத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா கூறியது.*

**- நக்கீரன்**